கல்கி

KALKI 3.10.2004
ரூ.6.00



என் செல்வமே, ஸ்டெஃபானி...!

–தாயின் துயரம்

இனி, நானே மிழினத் தலைவர்!



லவசம்: சென்னை ஸ்கேன்
ன்னை வாசகர்களுக்கு மட்டும்



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.



மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.



உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.

(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700, 2475 7777 2475 5799,


e-mail:svhome@vsnl.net

ஒரு தாயின் துயரம்! 8



நழுவும் நட்சத்திரங்கள் 95

பெண்கள் எதிர்த்தால் சந்தோஷம்தான்! 74



இனி, நானே தமிழினத் தலைவர்! 40

கல்கி
03.10.2004

2,3,4 விஷயம்!




டெலிஃபோன் சிக்கனம்

என் நண்பர் ஒருவருக்கு வீட்டிலும், கடையிலும் டெலிஃபோன் உண்டு. வீட்டிலிருந்து கடைக்குப் போய்ச் சேர்ந்ததையும், கடையிலிருந்து வீட்டுக்குப் புறப்படுகிறார் என்பதையும், அவர் தம்முடைய மனைவிக்குத் தெரிவிப்பது எப்படித் தெரியுமா?

கடையிலிருந்து வீட்டுக்குப் ஃபோன் செய்வார். வீட்டில் ஃபோன் மணியடிப்பது இவருடைய ஃபோனிலும் கேட்கு மல்லவா? மூன்று முறை மணி அடித்தவுடன் ஃபோனை வைத்து விடுவார். மூன்று முறை அடித்து நின்று விட்டால், அவர்தான் தெரிவிக்கிறார் என்று தெரியும் என்பதால் வீட்டிலுள்ளவர்களும் ஃபோனை எடுக்க மாட்டார்கள். நான்கு முறை மணியடித்தால்தான் எடுப்பார்கள்.

- ஏ.கே. நாசர்,
திருப்பட்டினம்



தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் மேலாளராகப் பணி புரியும் எனது உறவினரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே நான் கண்ட காட்சி எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

உறவினர் தம்முடைய ஐந்து வயது பையனிடம் சில ரூபாய் நாணயங்களைக் கொடுத்து, ஒரு மண் உண்டியலில் போடச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சகவாசம்

'கடவுள் மீது பக்தி உள்ளவராக இருந்தும் பலர் ஏன் சாதுக்கள் சகவாசத்தை நாடுகிறார்கள்?' என்று ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்: கள் குடிப்பவன் தனியாகக் குடிப்பதில்லை, அதற்கென்று உள்ள நண்பர்களோடும், கூட்டத்தோடும் சேர்ந்துதான் குடிக்கிறான். தனியாகக் குடிப்பதில் ஆனந்தமில்லை என்று நினைக்கிறான். அதுபோல பக்தர்களும் சாதுக்களின் கூட்டத்தில் இருப்பதில் சந்தோஷம் அடைகிறார்கள்.

- ஆர். கீதா,
சென்னை - 92



நான் உறவினரிடம், 'நீங்களோ ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்குகிறீர்கள். இந்த மண் உண்டியலில் எவ்வளவு காசு சேமித்து விடப் போகிறீர்கள்? என கேட்டேன்.

அதற்கு அவர், "எவ்வளவு சேமிக்கிறோம் என்பது பெரிதல்ல. குழந்தையின் மனதில் சேமிக்க வேண்டும் என்று எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே என் குறிக்கோள். அதற்காகத்தான் என் பையனிடம் தினசரி சில்லறை நாணயங்களைக் கொடுத்து, உண்டியலில் சேமிக்கக் கற்றுக் கொடுக்கிறேன். சேமிக்கக் கற்றுக் கொண்டால் இந்த மண் உண்டியலில் சேமித்தே பொன் நகைகளைக் கூட வாங்க முடியும்" என்று கூறினார். உறவினர் வங்கி மேலாளராக இருக்கத் தகுதியானவர்தான் என மனதில் நினைத்து மகிழ்ந்தேன்.

- எஸ். சுந்தரி,
கோவை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு



தமிழக அரசு, ஒவ்வொரு மாவட்டத்திலும், மூன்று பொறியியற் கல்லூரிகளின் வாயிலாக, பிற்படுத்தப்பட்ட, மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒரு வருடம் இலவச கணினிக் கல்வி அளிக்கிறது. மாதம் ரூபாய் நானூறு உதவித் தொகையும் கொடுக்கிறது. மகிழ்ச்சியளிக்கக் கூடிய விஷயம் தான். ஆனால், இந்தத் திட்டத்தால் சமுதாயத்தில், உயர் ஜாதியினர் எனப்படும் முற்பட்ட வகுப்பினர்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. உயர் வகுப்பைச் சேர்ந்த என்பது சதவிகித மாணவ மாணவியர்களின் குடும்பங்களின் நிலை, வறுமையின் விளிம்பில் ஊசலாடுகிறது. பணம் கட்டி உயர் கல்வி கூட கற்க முடியாத அவல நிலை. அரசு, ''ஜாதியை ஒழிப்போம்'' என வெற்று கோஷங்கள் போடாமல், பள்ளி இறுதித்தேர்வு எழுதியவுடன், தேர்ச்சி முடிவுகள் வெளிவரும் வரை, எல்லா மாணவ, மாணவியர்களுக்குமே, கணினிப் பயிற்சி வகுப்புகள் நடத்தலாமே!

- ரேவதிப்ரியன்,
ஈரோடு

எலித் தொல்லையா?



எனக்கு நன்கு அறிமுகமான கிராமம். நான் டவுனுக்கு வரும்போது அந்த வழியாகத்தான் வருவேன். அந்த கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்கு சுமார் நாற்பது வயது இருக்கும். காய்கறிகள், கீரைகள், பூச்செடிகள் பயிர் செய்வார். அவற்றைப் பக்கத்து டவுனில் விற்பனை செய்வார். நான் என் வண்டியில் வரும்போது பல நாள் அவர் 'லிப்ட்' கேட்பார். நானும் அவரை ஏற்றிக் கொண்டு வருவேன். அதனால் எனக்கு அவர் நன்றாக அறிமுகமாகி விட்டார். என் வீட்டுக்கும் காய்கறிகள் தருவார்.

அவர் பயிர் செய்யும் நெல் வயலில் எலித் தொல்லை அதிகம். அதனால் வயலுக்கு மின் வேலி அமைத்து வைத்திருந்தார். ஒருமுறை வயலை சுற்றிப் பார்த்து வரும்போது அவரது பாக்கெட்டிலிருந்து, 'டெஸ்டர்' கீழே விழ, அதை எடுக்க குனிந்தவர், மின்வேலியில் உரசிவிட்டார். அடுத்த கணம் மின்சாரம் தாக்கி பரிதாபமாக இறந்து விட்டார். இவருக்கு மனைவி, மூன்று குழந்தைகள் உள்ளனர். இன்று தவித்துப் போய் நிற்கிறது அவரது குடும்பம். பயிருக்கு மின்வேலி அமைப்பதை விட்டு விட்டு, எலிகளை ஒழிக்க வேறேதேனும் வழிமுறைகளை விவசாயிகள் கையாளலாமே...?

- பி.எஸ்.வாசன்,
ஆரணி

பிரெஸ்டீஜின் பரந்த குடும்பம்.

(உங்கள் உறவினர் எண்ணிக்கை அளவு இந்த குடும்பம் இல்லாவிட்டாலும்,
நிச்சயமாக உங்களுக்கு இன்னும் உதவிடும்)




ராயல் — 4 பர்னர்



ராயல் — 3 பர்னர்



ராயல் — 2 பர்னர்



பர்ஃபெக்ட்

பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கரைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். இப்பொழுது இந்த குடும்பத்திலிருந்து இன்னும் பல அங்கத்தினர்களை சந்தியுங்கள். மிக ஸ்மார்ட்டான சமையலறை சாதனங்களின் பல வகைகள், பல மாடல்களில் ஒவ்வொன்றும் பார்க்க அழகான ஸ்டைலுடன் இருப்பது மட்டுமல்ல, சிறந்த திறமைசாலியும் கூட! உங்களுக்கு அதிக செலவும் வைக்காத அங்கத்தினர்கள் இவர்கள். சரி, இனி இந்த பிரெஸ்டீஜ் குடும்பத்தை உங்கள் இல்லத்துக்கு சந்தோஷத்துடன் வரவேற்கலாமே!



பிரெஸ்டீஜ் பவர் 750 வா.



மாரத்தான் — 3 ஜார்



மாரத்தான் EX - 30



ஹீரோ — 3 ஜார்

Prestige™

நீங்க இன்னும்
ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?

Prestige™ SMART KITCHEN
A World of Ideas


At Prestige Smart Kitchen: Chennai: 742, Mount Road, Ph: 52140254/55/28523039. • No. 24, Amsaveni Complex, Rajalakshmi Nagar, Velachrey, Ph: 22440705 • 1/2 Ground Floor, Luz Church Road, Mylapore, Ph: 52074351/52031819 • C/o. Nilgris, Doshi Gardens, Ground Floor, 321, Vadapalani, Ph: 23750424 • Y-220, II Avenue, Anna Nagar, Ph: 26267989 / 26266272. **Tirunelveli:** Junction Bus Stand: 6, Raja Bldg, Ph: 2333373. **Coimbatore:** R S Puram: Ph: 2544554. **Erode:** Brough Road: Ph: 2259615. **Madurai:** Vakil New Street: Ph: 3092109

Mudra South Prestige 6767.04 TAM

'குறு'ந்தொகை



• சுந்தர ராமசாமி



• அசோகமித்திரன்



• சுப்ரபாரதி மணியன்

• 'டாக்டர் சீட், அமெரிக்கா விசா இவற்றை விடக் கஷ்டமான விஷயம், திருவல்லிக்கேணி மெஸ்ஸில் இடம் கிடைப்பது என்றால் நம்புவீர்களா?' இது போன்ற பல சுவாரசியமான கடந்த கால 'அட அப்படியா?' குறிப்புகள் அடங்கிய புத்தகம், அசோகமித்திரனின் 'ஒரு பார்வையில் சென்னை நகரம்.'

• உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 'தாய்' எனும் பொருள் கொண்ட வேறு சில இலக்கியப் பெயர்கள் - அன்னை, யாய், ஞாய், ஞாயர், அஞ்ஞை, ஈன்றாள், பயந்தோர், என்றோள்.

• 'ஈழத்தமிழர்கள், புலம் பெயர்ந்த தமிழர்கள் இவர்களிடம் நிறைந்துள்ள தமிழ்ப் பற்று கூட, தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு இல்லை' என்கிறார் வெங்கட் சாமிநாதன். 'தமிழ் தமிழ் என்று வெறுமனே கோஷங்களை மாத்திரம் தான் நாம் எழுப்பிக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்லும் இவர், குறிப்பாக அரசியல்வாதிகளையும், தொலைக்காட்சிகளையும் சாடியிருக்கிறார்.

• வேறு அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டே எழுத்தாளராக இயங்கிக் கொண்டிருப்பவர்களை, 'சண்டே எழுத்தாளர்கள்' என்று சொல்லி இலக்கிய வட்டமும், 'நேரத்தை வீணடிப்பவர்கள்' என்று சொல்லி அதிகாரிகளும், உதாசீனம் செய்யும் போக்கைக் கண்டித்திருக்கிறார் சுப்ரபாரதி மணியன். விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு இருக்கும் சலுகைகள் கூட, ஓர் எழுத்தாளருக்கு அலுவலகங்களில் வழங்கப்படாதது ஏன் எனும் கேள்வியை இவர் எழுப்பியுள்ளார். (இலக்கியத்தை இப்படி விளையாட்டா எடுத்துக்கலாமா?)

• சுந்தர ராமசாமி முதன் முறையாக 'தோட்டியின் மகன்' நாவலை மொழிபெயர்த்த பொழுது, வேறு ஏதாவது எழுதலாமே என்று சொல்லி, பலர் இவரது முயற்சியை ஏளனமாகப் பேசினார்களாம்.

- வண்ணத்துப்பூச்சி



கஜேந்திரா

புகை பிடிப்பது போல ஹீரோக்கள் நடிக்கக் கூடாது! இது திரையுலகம் - பா.ம.க இடையிலான புகைச்சலுக்கு பிள்ளையார் சுழி போட்ட அறிக்கை. 'கஜேந்திரா' படத்தில் ஹீரோ அறிமுகமாகும் முதல் காட்சியிலேயே சிகரெட் பற்ற வைக்கிறார். அரசியல் பிரவேசம் உறுதி என்பதைச் சொல்லாமல் சொல்வது போல, திரையைப் (மக்களை) பார்த்து, விஜய்காந்த் அடிக்கடி பேசும் வசனங்களில், ஏகத்துக்கும் அரசியல்நெடி. இவை போதாதென்று, தமது மன்றக் கொடி கட்டிய இரும்பு பைப்பை, ஜாவ்லின் த்ரோ செய்வது போல வீசியெறிந்து, துரத்தி வரும் ரவுடிகளைத் தடுத்து நிறுத்துகிறார். போகட்டும்! படத்தில் கதை, திரைக்கதை என்று ஏதாவது இருக்கிறதா?

இதை ஆராயப் போனால், இரண்டாவது கதாநாயகி ஃப்ளோராவைப் பார்த்ததும் விஜய்காந்துக்குத் தலை சுற்றுவது போல நமக்கும் சுற்றுகிறது. சுரேஷ் கிருஷ்ணா இயக்கிய பாட்ஷா படத்தின் கதையை, தமிழ் சினிமாக்காரர்கள், கிட்டத்தட்ட எல்லா முன்னணி ஹீரோக்களுக்கும் உல்டா செய்து, உண்டு இல்லை என நார் உரித்து விட்டார்கள். இதே கதை தெலுங்குப் பட உலகில் 'சிம்மத்ரி'யாக கடந்த ஆண்டு ஜெயிக்கப் போய், அதுதான் பூமராங் மாதிரி மீண்டும் சுரேஷ் கிருஷ்ணாவிடமே வந்து சேர்ந்திருக்கிறது. நிற்க, கஜேந்திராவின் ட்ரீட்மெண்டாவது புதிதாக இருக்கிறதா என்றால், 'கடவுளே! தமிழ் ரசிகர்களின் மூளை பிசகிவிடாமல் காப்பாற்று' என பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

சிறிதும் லாஜிக் பற்றி கவலைப் படாத காட்சி அமைப்புகள் காரணமாக, முழுப் படமும் இமாலய போர்! ஆக்ஷன் காட்சிகளைப் பார்த்து நமக்கு வருகிற கோபத்தில் பல்லைக் கடித்தால் பல்வலிதான் வரும்! உதாரணத்துக்கு, உறுதியான கார்க்கினால் ஆன கோல்ஃப் பந்தை, உள்ளங்கையில் வைத்து நசுக்கிப் பொடிப்பொடியாக ஆக்குகிறார் ஹீரோ. இவர் அடித்துத் துவைத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரவுடியின் எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. அல்ட்ரா சவுண்ட் பரிசோதனைகளைப் பார்க்கும் டாக்டர், "இது கஜேந்திரா அடி! அவன் இன்னும் சாகலே!" என்று விழிகளை உருட்டி மிரளும்போது, நமக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஹீரோ வழிபாட்டின் உச்சமாக, மக்கள் கூடி அம்மனுக்கு அபிஷேகம் செய்து கொண்டிருக்கும் கோவில் வளாகத்தில், ஹைதராபாத் மாநகரைக் கலக்கும் தாதாக்களில் ஒருவனை, அவனது குண்டர் படையோடு அடித்துக் கொல்கிறார் ஹீரோ. அவ்வளவுதான்! அம்மன் சிலைக்கு அருகிலேயே அவரை அமர வைத்து, அபிஷேகத்தை அவருக்குகே செய்கிறார்கள்!

தாங்க முடியவில்லை!


- விஷுவல்தாசன்

● ஜஸ்ட் பாஸ்

என் செல்வமே,



• இள வயதில்...



• தவிக்கும் செல்ல நாய்



• ரூமில் கிடந்த பொம்மைகள்...

சரிகாஷாவை தமிழகம் மறந்திருக்க ஆரம்பித்திருக்கும் சூழலில், ஈவ் டீசிங்கிற்கு அடுத்த பலியாகியிருக்கிறார் ஸ்டெஃபானி என்கிற ஆங்கிலோ இந்தியப் பெண். ஸ்டெஃபானியின் குடும்பத்தை மீடியா அணுகியபோது, யாரிடமும் அவர்கள் பேசத் தயாராக இல்லை. பெரும் பிரயத்தனத்துக்குப் பிறகு ஸ்டெஃபானியின் அம்மா பேட்ஷி, கல்கி இதழின் அணுகுமுறை மீது கொண்ட நம்பிக்கையால் நம்மிடம் பேசினார் - புகைப்படம் எடுக்கக்கூடாது என்கிற வேண்டுகோளுடன்... முதலில் மகளின் இளவயது நினைவுகளுடன் பேச ஆரம்பித்தார்...

"என் பொண்ணு ஸ்டெஃபானி, இதோ இந்த சென்னையோட வட கோடியில இருக்குற எண்ணூர் காமராஜ் நகர்லதான் பிறந்து வளர்ந்தா. ஒரே பொண்ணுங்கறதால அந்த நேரத்துல ஒரு நிமிஷம்கூட அவளைப் பிரியமாட்டேன். சின்ன வயசுலயே அவ ரொம்ப பிரில்லியண்ட். பிராட்வே செயின்ட் கொலம்பியா ஸ்கூல்லதான் படிச்சா. அந்த ஸ்கூல்ல எல்லாருக்குமே அவ ரொம்ப செல்லப் பொண்ணு.

அவ இரண்டாவது படிக்கறப்போ, தாய்லாந்து இந்தியன் ஸ்கூல்ல எனக்கு வேலை கிடைக்க, நாங்க அங்க போயிட்டோம். அப்புறம் என் பணி நிமித்தமா காபூல் போனோம். '91ம் ஆண்டு காபூல் இந்தியன் எம்பஸி ஸ்கூல்ல ஸ்டெஃபானி நான்காவது படிக்கும்போது போர் ஏற்படவே, என் அக்கா தங்கியிருந்த நைஜீரியாவுக்குப் போனோம். ஆனா, இந்திய கலாசாரத்தின் மீது பற்றுள்ள எனக்கு, அங்க நிலவின விசித்திரமான சூழல் பிடிக்காததால, என் செல்லத்தோட மறுபடி சென்னைக்கே திரும்பிட்டேன். இங்க மறுபடி அவள கொலம்பியா ஸ்கூல்ல சேர்த்து விட்டேன்.

ஒன்பதாவது படிக்கறப்

போதான் விளையாட்டு மீதான தன்னோட காதலை ஸ்டெஃபானி வெளிப்படுத்த ஆரம்பிச்சா. எல்லாருமே அவளுக்கு ஊக்கம் தந்ததால, மாவட்ட அளவில அத்லெட்டிக்கிலும், லாங்க் ஜம்பிலும் முதலாவதா வந்தா. அவ திறமையைக் கண்டு ஒரு பள்ளி ஆசிரியர் தமது பேத்திக்கு ஸ்டெஃபானி என்று பெயர் சூட்டினார். அதே நேரத்துல படிப்பிலயும் அவ சோடை போகல. பத்தாவது பரீட்சையை முதல் வகுப்புல பாஸ் பண்ணிக் காட்டினா. ஸ்கூல் வாழ்க்கை முடிஞ்சு, ஸ்டெல்லா மேரீஸ் காலேஜ்ல பி.ஏ. ஹிஸ்டரி வகுப்புல சேர்ந்தா. அந்த நேரம் பார்த்து என் நைஜீரியா அக்கா கேன்சர் நோயால பாதிக்கப்பட்டாங்க. அவங்க அங்க இருக்க முடியாம, சென்னைக்கு வந்து என் கூடத் தங்கினாங்க. அவங்களுக்கு மருத்துவம் பார்க்கணும்... எங்க குடும்ப வண்டியும் ஓடணுமே... ஸ்டெஃபானி தன்னோட படிப்பை பாதியிலேயே விட்டுட்டு, ''கவலைப்படாதீங்க மம்மீ... நம்ம குடும்பத்துக்காக நானும் உழைக்கிறேன்''னு சொல்லி, லீ ராயல் மெரீடியன் ஓட்டல்ல டெலிபோன் ஆபரேட்டரா வேலைக்குச் சேர்ந்தா. அதுதான் என் பொண்ணு பார்த்த முதல் வேலை. ஆனா மூணு மாசத்துக்கு மேல அவளால அந்தப் பணியில நீடிக்க முடியல..."- சற்று மூச்சு வாங்கிய பின் தண்ணீர் குடித்துவிட்டு, மோட்டு வளையை வெறித்துப் பார்த்து கண்கலங்கினார் பேட்ஷி. பின்பு தொடர்ந்தார்...

"பேங்காக்ல எனக்கும் ஸ்டெஃபானிக்கும் ஒரு ஸ்கூல்ல வேலை கிடைச்சதால, ரெண்டு பேரும் கிளம்பிப் போயிட்டோம். அவ உடற்பயிற்சி ஆசிரியையா வேலை செஞ்சாலும், கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட பணிகளிலும் தன்னோட அபார திறமையைக் காட்டினா. இங்க நான் இன்னொரு விஷயத்தையும் சொல்லணும். அவ ஒரு ஆல் ரவுண்டர். அழகு, நடனம், பாட்டு, கம்ப்யூட்டர்னு எல்லாத்துலயும் அவளோட இன்ட்ரஸ்ட் அவுட்ஸ்டாண்டிங். ஸ்டெல்லா மேரீஸ்ல படிக்கும்போது அங்க நடந்த அழகிப் போட்டியிலும் ஜெயிச்சிருக்கா.

பேங்காக்லயே கொஞ்ச வருஷம் இருந்தோம். பிறகு 2004 மே மாதம் சென்னைக்குத் திரும்பின ஸ்டெஃபானி, இங்க வந்தவுடனே பாதியில விட்ட தன்னோட படிப்பை மெட்ராஸ் யூனிவர்சிட்டி மூலமா தொடர்ந்து படிச்சு எக்ஸாம் எழுதினா. கொஞ்ச நாள்ல நானும் பேங்காக்ல இருந்து திரும்பினேன்.

• ஸ்டெஃபானி



ஸ்டெஃபானி...!

-தாயின் துயரம்

என்னோட ஃப்ரெண்ட்ஸ் வீடு இருந்தாலும் அவங்களுக்கு எதுக்கு சிரமம் தரணும்னு மந்தைவெளியில ஸ்டெஃபானிக்கு தனி ரூம் பார்த்துக் கொடுத்தேன். படிச்சு முடிஞ்சப்புறம் ஆகஸ்ட் 1ம் தேதி வேளச்சேரியிலுள்ள 'ஆல்சக்' (Allsec) என்கிற கால் சென்டர்ல வேலைக்குச் சேர்ந்தா. அவளோட மந்தைவெளி ரூம்ல அவ கூட வேலை பார்த்த ஆக்டோலிங் என்ற நாகாலாந்து நாட்டுப் பொண்ணும் கூட தங்கியிருந்தா.

பணியில சேர்த்த திருப்தியோடு என் செல்லத்த சென்னைல விட்டுட்டு, நான் பேங்காக் போயிட்டேன். அதுக்கப்புறம் எனக்கும் அவளுக்குமான தொடர்பு ஃபோன் மூலம்தான். திடீர் திடீர்னு ஃபோன் பண்ணி 'மம்மீ.... மம்மீ...'ன்னு கொஞ்சுவா..." – சொல்லும்போதே கண் கலங்குகிறது பேட்ஷுக்கு. அவரின் நண்பர்கள் ஆறுதல் படுத்த "ஐயம் ஆல்ரைட்" என்று தொண்டையில் துக்கத்தை விழுங்கியபடியே பேசினார்...

"செப்டெம்பர் 18ம் தேதி மதியம் இரண்டு மணி இருக்கும்போது அவ கிட்டயிருந்து போன் வந்துச்சு. அதுதான் அவகூட நான் பேசற கடைசி பேச்சுன்னு தெரியாமலேயே பேசினேன்... 'மம்மீ... என்னோட செல்ஃபோன்ல முப்பது ரூபாதான் இருக்குது'ன்னு ரொம்ப அவசர அவசரமா பேசினா. 'அம்மை வந்தா என்னென்ன சிம்டம்ஸ் இருக்கும் மம்மி?'ன்னு கேட்டா. நான் சொன்னேன். அதுக்கு அவ 'நீங்க சொல்றதெல்லாம் எனக்கும் இருக்கு. அம்மைதான் வந்திருக்குன்னு நினைக்கிறேன்'னு சொல்லி, வழக்கமா சொல்ற 'ஐ லவ் யூ மம்மி' கூட சொல்லாம '21...21...'ன்னு ஃபோன் தொகையை சொல்லியபடியே தொடர்பை துண்டிச்சிட்டா... அவ ஃபோன் அமௌண்ட்டை சொல்றாள்னு எனக்கு அப்ப தெரியல. 'மம்மீ... எனக்கு 21 வயசாகுது. நான் ஒண்ணும் சின்னப் பொண்ணுல்ல. என் எல்லைகள் எனக்குத் தெரியும். நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்'னு அடிக்கடி சொல்வா. இந்த ஞாபகத்துல தன்னோட 21 வயசைத்தான் ஸ்டெஃபானி சொல்றாள்னு அன்னைக்கு நான் தவறா நினைச்சுக்கிட்டேன்.

19ம் தேதி காலைல அப்படியொரு இடி வந்து என் தலைமேல விழும்னு நான் நெனைக்கல. என் இதயம்... என் செல்லம்... என் வாழ்க்கை... அன்னைக்கு அஸ்தமிச்சுப் போயிடுச்சுன்னு கேள்விப்பட்டதும் நான் நடைப்பிணமா ஆயிட்டேன். எதுக்கு எனக்குக் கடவுள் ஸ்டெஃபானியக் கொடுக்கணும்.... எதுக்கு இப்படிப் பாதியிலேயே என்கிட்டருந்து அவளப் பிரிக்கணும்?"

– இந்த முறை பேட்ஷு குலுங்கி அழ ஆரம்பிக்க, அவரைச் சமாதானப் படுத்தும் தெம்பு யாருக்கும் அங்கு இல்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு தாமே ஆறுதலாகி, மீண்டும் நிமிர்ந்தார்....

"என் பெண்ணோட உடலை மார்ச்சுவரியிலிருந்து வெளியே கொண்டு வர ராயப்பேட்டை மருத்துவமனையில் பிரச்னை செய்தாங்க. பெத்த மகளை இழந்து தவிக்கிறேனேன்னு யாருமே என்கிட்ட பரிதாபம் காட்டல. என்ன செய்யறதுன்னே தெரியல. அப்புறம் எனக்குத் தெரிஞ்ச ஒருபுள்ளி கிட்ட போன்ல பேசி, நிலைமையைச் சொன்னேன். அவரும் என்னோட வேதனையைப் புரிஞ்சுக்கிட்டு உடனே



• உடைமைகள்...

தன்னோட அதிகாரத்தைப் பயன்படுத்தி எனக்கு உதவினார்.

போலீஸ் ஸ்டேஷன்ல எந்தவிதமான மரியாதையோ, நடந்த அநியாயத்துக்குச் சரியான பதிலோ எனக்குத் தரப்படல. என் மகளோட சாவுக்குக் காரணமான வங்களைப் பார்க்க ஸ்டேஷனுக்குப் போனேன். என்னைப் பார்த்ததும் அந்த நாலு பசங்களும் 'நான் இல்லை' 'நீ இல்லை'ன்னு இஷ்டத்துக்குப் பேச ஆரம்பிச்சுட்டாங்க.

நேத்து என் பொண்ணு மரித்த இடத்தைப் பார்க்கப் போனேன். அங்க அவ பிறந்தபோது நான் ஊட்டின அமுதம், ரத்தத் துளிகளா சிதறி காய்ந்து போய் கிடந்ததை காணச் சகியாம அழுதுட்டேன். இந்த மாதிரிக் காட்சியைக் காண நான் என்ன பாவம் செய்தேன்?"

- பரிதாபமாய் பேட்ஷு கேட்ட போது, நாம் உறைந்திருந்தோம். அந்த நினைவிலிருந்து நம்மை விடுபட விடாமல் பேசிக்கொண்டே போனார்...

"ஸ்டெஃபானி ஒரு மென் மனசுக்காரிங்க. அவ, ஏழை, பணக்காரர்னு எந்த வித்தியாசமும் பார்க்க மாட்டா. ரோட்ல திரியற நாய், பூனை மேலகூட அதீதமான பாசம் செலுத்துவா. இயற்கையை ரொம்ப ரசிப்பா. பொம்மைகள்னா அவளுக்கு உயிர். தன்னோட மந்தைவெளி ரூம்ல முயல் ஒண்ணைக் கூட வளர்த்து வந்தா. என் இதயத்தை இன்னைக்கு நான் இழந்துட்டேன். நண்பர்கள் நண்பர்கள்னு கடைசி வரைக்கும் உயிரை விட்டா. ஆனா அவளோட மரணத்துக்கு ஆறுதல் கூற யாருமே வரலை. 'இதுதான் உண்மை'ன்னு என்கிட்ட சொல்லக்கூட எந்த நண்பரும் முன்வரல.

ஸ்டெஃபானியோட கனவா இருந்தது, ஏர்ஹோஸ்டஸ் வேலைதான். ஜூலை 13ம் தேதி இந்தியன் ஏர் லைன்ஸ்ல நடந்த இந்த வேலைக்கான முதல் சுற்றுல அவ வின் பண்ணினா. பின்னாடி மெட்ராஸ் யூனிவர்சிட்டியில டிகிரி முடித்த சான்றிதழ்கள் உடனே கிடைக்காததால, அடுத்தடுத்த தேர்வுகளுக்கு அவளால போக முடியாமப்



போயிடுச்சு. சாம்பார், ரசத்துல நெய் விட்டு சாப்பிட்டா அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். இனிமே இந்த இரண்டையும் நான் எப்படி சாப்பிடுவேன். அவ ஞாபகத்துல என் தொண்டைக் குழி அடைக்குமே!

ஒரு வேளை ஸ்டெஃபானி உயிர் பிழைச்சிருந்தா, அவளோட நிலைக்குக் காரணமானவங்களை கண்டிப்பா அவ மன்னிச்சிருப்பா. 'மம்மி... பாவம், அவங்களை விட்டுடலாம்'னு சொல்லியிருப்பா. அந்த அளவுக்கு மறக்கற, மன்னிக்கற மனப்பாங்கு கொண்டவ. - பேட்ஷுவின் கேள்விக்கு நம்மால் பதில் சொல்ல முடியவில்லை.

"ஸ்டெஃபானியை அடக்கம் செஞ்ச பிறகு என் ஈமெயில் பாக்ஸை பார்த்தேன். கடவுளே...! அடுத்த ஃப்ளைட்ல பேங்காக் வர்றதா சம்பவம் நடக்கறதுக்கு முதல் நாள் எனக்கு மெயில் அனுப்பி இருக்கா. அவ மட்டும் உயிரோடு இருந்தா, இந்நேரம் பேங்காக்ல அவள கொஞ்சிக்கிட்டு இருந்திருப்பேன்! இப்ப எல்லாமே கனவாப் போயிடுச்சே..." - அதற்கு மேல் அந்தத் தாயால் பேச முடியவில்லை. அவரின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நாம் விடை பெற்றோம்.

- ச.ந.கண்ணன், மு.மாறன்

படங்கள் : **எழில்**

அரசாட்சி



கொலை, பாலியல் பலாத்காரம் போன்ற பெரிய குற்றங்கள் குறைந்த மாதிரித் தெரியவில்லை. இது போன்ற குற்றங்களைக் கூலாகச் செய்யும் கிரிமினல்களை, தங்கள் வாதத் திறமையால் காப்பாற்றும் வழி தவறிய வழக்கறிஞர்களே இதற்குக் காரணம். பிரமாண்ட இயக்குனர்கள் சைக்கிள் கேப்பில் கோட்டை விட்ட இந்த விஷயத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தமது ஹீரோ மூலம் சூப்பராய் இவர்களை வேட்டையாடுகிறார் 'வல்லரசு' மகராஜன்.

குறி வைக்கப்படும் வழக்கறிஞர் மேல் பார்வையாளனுக்கு போதிய வெறுப்பு வரும்படி செய்த பிறகு, குறைந்தபட்ச வன்முறைப் பூச்சுடன், தெளிவாகத் திட்டமிட்டு லாஜிக் பிசகாமல் கொலை செய்வதால், தியேட்டரில் ஒரே கொண்டாட்டம்!

வக்கீல்களுக்கு தீர்ப்பெழுதும் காட்சிகள் மட்டுமல்ல, சின்னச் சின்ன துணைக் காட்சிகளில்கூட, இயக்குனரின் புத்திசாலித்தனம் எடுப்பாகத் தெரிகிறது. எடுத்துக்காட்டுக்கு, பாலியல் தொழிலாளியின் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் அமைச்சரை கையும், களவுமாக போலீசிடம் பிடித்துக் கொடுக்க, கரண் போடும் டிராமா.

நாயகன் அர்ஜுன் எதற்காக இப்படியொரு ஸ்பெஷல் நர வேட்டையில் இறங்கினார் என்பதற்கான உணர்ச்சிகரமான விடையை, திரைக்கதையில் சரியான இடத்தில் பொறிந்து வைத்து, ஃப்ளாஷ்பேக் மூலம் இரண்டாவது பாதியில் வெளிப்படுத்தியிருக்கும் சாமர்த்தியம் பாராட்டத்தக்கது.


இது போன்ற பாத்திரங்கள் அர்ஜுனுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. அதிலும் அம்மா, அப்பா, தங்கை என்று சென்டிமெண்டும் சேர்ந்து கொண்டால் கேட்க வேண்டுமா! பட்டையைக் கிளப்புகிறார். பிரபஞ்ச அழகி லாரா தத்தாதான் நாயகி. ஐரோப்பிய மாநகர வீதிகளில் நாயகனோடு நன்றாக நடனமாடும் இவருக்கு, நடிக்கவும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆச்சர்யம்!

வில்லங்க வக்கீல்களின் கணக்கை முடிக்கும் ரகசியம், தம்மைத் தவிர யாருக்கும் தெரியாது என்று அர்ஜுன் சொல்கிறார். ஆனால் கடற்கரை கிரிக்கெட் பந்தை ஓங்கியடித்து, வக்கீல் ஆனந்தராஜை முதல் விக்கெட்டாக விழ்த்தும்போது பந்தை வீசியவர், ஃபீல்டிங் செய்தவர்கள் ஏன் எதுவும் கேட்கவில்லை? இது போன்ற ஒன்றிரண்டு சந்தேகங்களை விறுவிறுப்பான கதை சொல்லலால் மறக்கடித்து விடுகிறார்கள்.

கதையும், ஆக்ஷனும் கை கோத்துக் கொண்ட கவிழ்க்க முடியாத கூட்டணி ஆட்சி, அரசாட்சியில்

- விஷ்ணுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்



டிஸ்கோ கலாசாரம்!

டிஸ்கோ, மது அருந்துதல் போன்ற விஷயங்களை எதிர்ப்போர் இன்று வினோதப் பிறவிகளாகக் கருதப்படுகிறார்கள்.

ஸ்டெஃபானியின் மரணத்துக்குப் பிறகு இந்தப் பார்வை மாறிவிடப் போவதும் இல்லை. ஏனெனில், மது அருந்துவதும் டிஸ்கோவும் உற்சாகமூட்டும் கேளிக்கைகள் என்பதாக ஒரு கருத்து, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடையேயும் வேகமாகப் பரவி வருகிறது.

கூடவே, 'வாழ்க்கை என்பது ஜாலியாக அனுபவிப்பதற்காகத்தான்; உழைப்பதும் சம்பாதிப்பதும் இவ்வாறு கேளிக்கை அனுபவிக்கத்தான்' என்கிற நம்பிக்கையும் வலுத்து வருகிறது. மிக இளம் வயதிலேயே மிக அதிகமான பணத்தைச் சம்பாதிக்கக்கூடிய ஒரு சூழலும் தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் போன்றவற்றால் பலருக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, விலையுயர்ந்த 'கேளிக்கை'யும் கைக்கெட்டும் தூரத்துக்கு வந்து விடுகிறது. உயர் மட்டத்தினருக்கு இலகுவாகிவிட்ட இந்த வாழ்க்கை முறையே, மத்திய தர வர்க்கத்தினர், ஏழை-பாழைகளின் ஆதர்சமாகவும் ஆகிவிடுகிறது.

இன்று இளைய சமுதாயத்தில் காணப்படும் மற்றொரு மிகப் பெரிய மாற்றம், ஆண் - பெண் நட்பு அல்லது பழகுதலில் ஏற்பட்டுள்ள சகஜத்தன்மை.

பணமும், பெண் சமத்துவத்துக்கான அங்கீகாரமும் மிக கவனமாகக் கையாளப்பட வேண்டியவை.




கல்கி

2004 அக்டோபர் 3
தாரண புரட்டாசி 17
மலர் : 63
இதழ் : 10



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



இன்று ஸ்டெஃபானியின் மரணத்தால் அதிர்ந்து போயிருக்கும் நாம், பள்ளியிறுதி மாணவர்கள்கூட டிஸ்கோவுக்குச் செல்வதையும், மது அருந்துவதையும் கண்டு, போதுமான அளவு அதிர்ந்து எழுவதில்லை. வெறுமே சூள் கொட்டிவிட்டுப் போய்விடுகிறோம். உரிய லைசென்ஸ் இன்றி ஏராளமான டிஸ்கோக்கள் நடப்பதாக, காவல்துறையே ஒப்புக் கொண்டிருக்கிறது.


போதாக்குறைக்கு, சினிமாவிலும், அதன் பிரதிபலிப்பான தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் பாலுணர்வுக்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் தரப்பட்டு, பெண்கள் போகப் பொருளாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். அவ்வாறு சித்திரிக்கப்படுவதை அப் பெண்களே மகிழ்ந்து ஏற்பது போன்றதொரு மாயத் தோற்றமும் ஏற்படுத்தப்படுகிறது. இந்த அவலப் போக்கினால், ஆண் - பெண் நட்பின் அடிப்படையே இச்சைதான் என்பது போன்றும், காதலின் அடிப்படையே காமம்தான் என்பதாகவும் விஷப்பதிவுகள் இளம் மனங்களில் ஏற்படுத்தப்படுகின்றன. யதார்த்த வாழ்வின் போராட்டங்கள், கஷ்டங்கள், தியாகங்கள் எதுவும் அறியாமல், சம்பாதிக்கும் திறனை மட்டும் அடையும் இளைஞர்கள், தறிகெட்டுப் போகிறார்கள்.

பெற்றோரும் ஆசிரியர்களும்கூட, இந்த சமூகச் சூழலில் அமிழ்ந்து அலமந்து போய், வழிகாட்டத் தவறி விடுகிறார்கள்; அல்லது வழி காட்டும் தகுதியை இழக்கிறார்கள்.

எல்லா இளைஞர்களுமே இவ்வாறு வாழ்வைத் தொலைக்கிறார்கள், என்று பொதுப்படையாகக் குற்றம் சாட்ட முடியாது. ஆனால் இந்தப் போக்கு அபாயகரமான வேகத்தில் அதிகரித்து வருகிறது என்பதற்கான பரிதாபகரமான சான்றுதான், ஸ்டெஃபானியின் மரணம்.

ஸ்டெஃபானியைத் துரத்திய இளைஞர்கள் மது அருந்தியிருந்தனர் என்பதைச் சோதனைகள் நிரூபித்துள்ளன. காவல்துறையும் வழக்கை 'போக்குவரத்து விபத்து' என்கிற பிரிவிலிருந்து, குற்றப் பிரிவுக்கு மாற்றியிருக்கிறது.

இரவு நேரத்தில் ஸ்கூட்டரில் தனியே செல்லும் பெண்ணை, நான்கு இளைஞர்கள் துரத்துவது என்பது அதீதமான வெறிச்செயல். அந்த இளைஞர்கள் குடிக்காமலிருந்திருந்தால்



இத்தகைய மூர்க்கத்தில் ஈடுபடாதிருந்திருக்கக்கூடும்.

ஆனால் அவர்கள் டிஸ்கோவுக்குச் செல்வதே குடித்துவிட்டு ஆட்டம் போடுவதற்குத்தான். அப்படியிருக்க, எந்தப் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து, ஸ்டெஃபானி அதே டிஸ்கோவுக்குச் சென்றார் என்கிற கேள்வியும் எழவே செய்கிறது.

எக் காரணத்துக்காகவும் இளைஞர்களின் வெறிச்செயலை நாம் நியாயப்படுத்திவிட முடியாது. எத்தகைய பெண்ணானாலும், எந்தச் சூழலிலும் அவளை நெருங்கும் ஆண்கள் கண்ணியம் காக்க வேண்டும் என்பதை, எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் போதாது. ஆனால், பெண்களும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்; துணிவோடு நுண்மதியும் இணையச் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தித்தான் ஆக வேண்டும்.

மேலை நாட்டு கலாசார வெளிப்பாடுகள், மிகுந்த கிளர்ச்சியை ஏற்படுத்துபவை. அவற்றை நாம் புறக்கணிக்காவிட்டாலும், எச்சரிக்கையுடன்தான் அணுக வேண்டும். இல்லாவிட்டால் செப்டம்பர் 18 அன்று நடந்தது போன்ற கோரங்கள் தொடரும்.

இந்தியப் பண்பாட்டின் உயர்வே புலனடக்கத்துக்குத் தரப்படுகின்ற முக்கியத்துவம்தான். இதை இளைஞர்களுக்கு யோகாசன வகுப்புகள் மூலம் வெகு எளிமையாகவும், வலியத் திணிப்பது போன்ற உணர்வின்றியும் வழங்க முடியும். இதனைச் செயல்படுத்த அதிக பணமோ, தனி இடமோ தேவையில்லை.

விளையாட்டுகளில் ஈடுபடுத்தப் படுகிறபோதும், இளைஞர்களின் சக்தி ஆக்கபூர்வமாகச் செலவாகிறது. ஆனால், இதற்குத் தேவையான விளையாட்டுத் திடல்கள், எல்லாக் கல்வி நிலையங்களிலும் இருப்பதில்லை. எனவே யோகாசனப் பயிற்சியை கல்வித் திட்டத்தில் கட்டாயமாக்குவது குறித்து, கல்வித் துறையும் கல்வியாளர்களும் தீவிரமாக சிந்திக்க வேண்டும். மத எல்லைகளுக்கு அப்பாற்பட்ட உடல் - மனப் பயிற்சியாகவே அதனை வழங்க முடியும்.

நமது நாட்டின் மிகப் பெரிய சொத்தே அதன் மனித வளம்தான். வக்கிரப் போக்குகளிலிருந்து அதனைக் காக்கத் தவறினால், அதுவே தேசத் துரோகமாகிவிடும்! ○

உ

குருநாதர் சரணம்

'சில்க்' காட்டன் என்றாலே 'ப்ரசாந்தி'

கல்யாணம்னாலும் சரி, பண்டிகைன்னாலும் சரி, முதல் ப்ரச்னை - பெண்களுக்கு வியர்வை வழிய கனமான புடவை அணிவதுதான். இது ஒரு ப்ரச்னையே இல்லை என்று சொல்கிறார் "ப்ரசாந்தி'யின் மாலதி முரளீதரன். இதற்காகவே இவர் வடிவமைத்ததுதான் "சில்க் காட்டன் புடவைகள்." பார்ப்பதற்கு அசல் பட்டு போலவே இருக்கும். ஆனால் காட்டனும் சேர்ந்திருப்பதால் நாள் முழுதும் அணிந்தாலும் வசதியாகவும், வியர்க்காமலும் இருக்கும். இதில்தான் வெரைட்டிகள் எத்தனை! ஒவ்வொரு விசேஷத்துக்கும் ஒரு ரகம்! எண்ணற்ற டிஸைன்கள்! கலர்கள்!!



Vivaham Collections:

கல்யாணங்களில் கண்ணைக் கவரும் படியாக இருக்க traditional designs- வைர ஊசி, வேல்தாரி, டிஷ்யூ, ஜரிகை கட்டம், புட்டா, ஆத்தி வாழைப்பூ, கோர்வை... புதுமைப் படைப்புகளில் ராமாயணம், க்ருஷ்ணலீலா, Rich Pallu... ஆறு கஜத்தைத் தவிர 10 கஜங்கள் - மாமியார், மருமகள், சம்பந்தியும் ஒரே மாதிரி அணியலாம்.

Vaibhogam Collections:

பார்ட்டியா, விசேஷமா? ஒயிலாக, அழகாக ட்ரெஸ் செய்துக்க மெல்லிய ஜரிகை, embroidery, Hand block printed மற்றும் புதிய ரக Silk Cotton Salwar sets (newly introduced). இதை அணிவதால் அனைவரின் பார்வையும் உங்கள் மேலேதான்! பட்டு நூல் கலந்தால் உடுத்த மாட்டோம் என்று சொல்லும் மென்மையான மனது உடைய வருக்கு Cotton-ல் பட்டு finish கொடுத்து mercirised cotton ப்ரசாந்தியின் இன்னும் ஒரு specialty!



Nithyam Collections:

80's count கொண்ட மெல்லிய பாலிகாட் புடைவைகள் வேண்டுமா? வாருங்கள் ப்ரசாந்திக்கு! தவிர சேலம் சில்க் காட்டன், ஆரணி சில்க் காட்டன், fancy sarees & salwars என்று எல்லாரின் பட்ஜெட்டுக்கு ஏற்றபடி கிடைக்கும்!



ஒரு தடவை மட்டுமா? ஏன் திரும்ப திரும்ப ப்ரசாந்தியில் வாங்குகிறார்கள்? சற்று அதிக அளவு பட்டு உள்ள சில்க் காட்டன் புடவைகள் உடுத்தினா, மனசு திரும்ப திரும்ப வாங்க சொல்கிறதே! கூடவே அதன் தரமும், நியாயமான விலையும்! எப்படி இவர்களுக்கு மட்டும் கட்டுபடியாகிறது? சொந்த தறியில் **master weavers** உடன் தனி கவனம் செலுத்தி நெய்வதால் வாடிக்கையாளருக்கும் திருப்தி! ப்ரசாந்திக்கும் ப்ரசித்தி! எந்த கல்யாணங்களிலும், விசேஷங்களிலும் இப்போது ப்ரசாந்தியின் சில்க் காட்டன் புடவைகளே!

பண்டிகை காலங்களில் பாவாடை, சட்டை துணிகளும் உண்டு.

திருமணங்களுக்கும், **Bulk orders** (யூனிஃபார்ம் போன்றவை) சுய தொழில் புரிவோர்க்கும் மொத்தமாக வாங்கும்போது தனிச் சலுகை உண்டு! அக்டோபர் 1 முதல் தீபாவளி வரை **10%** தள்ளுபடி எல்லா ரகங்களிலும்!


PRASHANTI

16, 6th Cross St, C.I.T. Colony,
Mylapore, Chennai- 4. T.T.K. Raod,
(Near Chettiar Hall) PH: 24991850, 24997636

தீபாவளி வரை ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடை உண்டு.
காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை
Master & Visa cards Accepted.

* **PRASHANTI'S First festive sale at Bangalore starts from Oct 1,2,3 2004.**
Venue: THE Canara Union, 42, 8th Main, 13th cross, Malleswaram, Tel:080 - 23342625 *

வாத்தியார் கலாம்!



ஒவ்வொரு இந்தியனின் முகத்திலும் இப்போது மகிழ்ச்சிப் புன்னகை தவழ்கிறது. EDUSAT- என்ற சாட்டிலைட்டின் வெற்றியால்!

"EDUSAT- ன் வெற்றிகரமான பயணம் இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் பல ஆச்சரியங்களை நிகழ்த்தும்" என பெருமிதப்படுகிறார் கஸ்தூரி ரங்கன்.


PREVIK (President's virtual Institute for knowledge) - என்ற கலாமின் 'வெர்ச்சுவல் கிளாஸ் ரூம்' திட்டத்திற்கு EDUSAT மிகவும் உதவிகரமாக இருக்கும்.

இரு மாதங்களுக்கு முன் 'வெர்ச்சுவல் கிளாஸ் ரூம்' சோதனையை ராஷ்டிரபதி பவனிலிருந்தே வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டினார் கலாம். அதன் மூலம் பல அறிஞர்கள், பல்கலைக் கழகங்கள் - ஏன் கிராமப்புற மாணவர்களுக்குக்கூட கலாம் வகுப்பெடுத்தார். கிராமப்புற மக்களை அடைய ISRO - அனைத்துத் தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு மொபைல் வேனை வழங்கியுள்ளது. கலாம் அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கிய ஒரு மல்டி - மீடியா ஸ்டுடியோவை - தன் மாளிகையில் உருவாக்கியுள்ளார்.

"கல்வி அறிவின்மையை அகற்றும் முயற்சியில் இது ஒரு பெரிய முயற்சி. எந்தவொரு கல்வி நிறுவனமும், பல்கலைக் கழகமும் ஜனாதிபதி மாளிகையை தொடர்பு கொள்ளலாம். ஜனாதிபதி வகுப்பெடுக்கத் தயாராக உள்ளார்" என்கிறார் அதிகாரி ஒருவர்.

கலாம் பற்றிய மற்றொரு செய்தி. ஜட் ரோபா (Jatriopha) எனும் எண்ணூறு மரக் கன்றுகளை 'மொகல் கார்டனில்' நட்டுள்ளாராம் கலாம். இது பயோ - டீசல் தயாரிக்க உதவும் தாவரம். பயோ-டீசல் தயாரிக்கும் மாதிரி எந்திரத்தையும் உருவாக்கியுள்ளாராம்.

EDUSAT- வெற்றி கரமாக தன்



பயணத்தைத் துவங்கிய அதே நாளில் (செப்.20), கண்ணதாசன் பதிப்பகம், கலாம் மற்றும் சிவதாணுப்பிள்ளை எழுதிய 'Envisioning An Empowered Nation' என்ற புத்தகத்தை தமிழில் மு. சிவலிங்கம் மொழி பெயர்க்க, 'உதயமாகிறது வலிமை படைத்த பாரதம்' என வெளியிட்டுள்ளது. "சமுதாய மாற்றத்திற்கான சூத்திரம் - இது" என்கிறார் கலாம். அக்னிச் சிறகுகளைக் காண முடியாதவர்கள் அதைத் தொட்டு உணர்ந்து சிலாகிக்க ப்ரெயில் முறையில் வெளியிட்டுள்ளது கண்ணதாசன் பதிப்பகம்.

'உருவாகிறது வலிமை படைத்த பாரதம்' புத்தகத்திலிருந்து:

"வளர்ச்சியடைந்த இந்தியா என்ற லட்சியத்தை 2020க்கு முன்பு நிஜமாக்கிக் காட்டுவதற்கு, நமது அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு களம் இறங்குவதற்கு, இதுதான் சரியான நேரம்..."

- ஷிவ்

நல்ல மனிதர்

ஒரு நல்ல மனிதரை, தன்மானம் மிக்கவரை குடிப்பழக்கம் எந்த அளவிற்கு வாழ்வின் கீழ் மட்டத்துக்கு இழுத்துச் சென்று விடும் என்பதற்கு ஒரு சோக சாட்சி நடிகர் அனுமந்து. இவரைப் பற்றி இவரது மனைவி அகிலா சொல்கிறார்.

"அவரு ரொம்ப நல்ல மனுஷர். முப்பது வருடங்களுக்கு முன்னால், ஜிகோடெர்மாவால் பாதிக்கப்பட்டிருந்த நான் திருமணமே வேண்டாம் என்று இருந்தேன். ஆனால், என் வியாதி, என் தங்கையின் கல்யாணத்துக்கும் தடையாக இருந்ததால், குடும்பமே மனதொடிந்து போனது. அந்தச் சமயத்தில் எங்கள் பிரச்னையைக் கேள்விப்பட்டு, தாமாகவே என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்தார்.

'உன்னைத் திருமணம் செய்து கொண்ட பின், இப்படி ஏதாவது ஒரு வியாதி வந்து விட்டால், விட்டுவிட்டுப் போய் விடுவேனா? உன்னை வைத்துக் காப்பாற்ற மாட்டேனா?' என்று கேட்டார்.



• அனுமந்துவின் மனைவி, மகன்

கே. கண்ணன், வி. கோபாலகிருஷ்ணன் ஆகியோரது நாடகக் குழுவில் நடித்தார். பிறகு சொந்தமாக நாடகக் குழு நடத்தினார். பிறகு கே.பாலசந்தர், தம் 'நிழல் நிஜமாகிறது' படத்தில் அறிமுகப்படுத்தினார். பிறகு பல படங்களிலும் சின்னச் சின்ன நகைச்சுவை வேடங்களில் நடித்தார். 86ல் 'ஆரத்தி எடுங்கடி'தான் அவர் நடித்த கடைசிப் படம்.



• அனுமந்து (பழையபடம்)

அப்புறம் அவரை யாரும் நடிக்கக் கூப்பிடவில்லை. கே. பாலசந்தர் வீட்டுக் கல்யாணத்தில் எம்.ஜி.ஆரைப் பார்த்தபோது, இவரை ரொம்பவும் பாராட்டி, 'எப்போது என்ன உதவி வேண்டுமானாலும் என்னை வந்து கேள்' என்று சொன்னார். ஆனால், இவர் எப்பவும் ரொம்ப பிரஸ்டிஜ் பார்க்கிறவர். 'யாரிடமும், எப்பவும் உதவி கேட்டு கைநீட்டக் கூடாது' என்பார்.

இவர் பிஸியாக இருந்த போது, கார் வைத்துக் கொண்டு சௌகரியமாக இருந்தோம். சினிமாவில் இருந்தபோது ஆரம்பித்தது குடிப்பழக்கம். அந்தச் சனியன், அப்புறம் இவரை விடவே இல்லை. காரை விற்று, ஸ்கூட்டர் வாங்கும்படி ஆனது. நான் டீச்சராக வேலை பார்க்கிறேன். நான் வேலைக்குப் போனபின்பு, இவர் வீட்டில் தனியாக இருக்கும் போது, இன்னும் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நாளில் ஸ்கூட்டரையும் விற்று விட்டார். சில நாட்கள் நான் ஸ்கூலிலிருந்து வீட்டுக்கு வந்தால், வீட்டிலிருந்த

ஏதோ ஒரு பொருள் 'காணாமல்' போயிருக்கும். டீ.வி, ஃபேனை எல்லாம் கொண்டு போய் விற்று குடித்திருக்கிறார்.

இது போதாது என்று, அதிமுகவில் சேர்ந்து, லோக்கல் கட்சிக்காரர்களுடன் சுற்றிக் கொண்டிருந்தார். 1997 மே மாதத்தில், நாலைந்து கட்சிக் காரர்களுடன் குடிபோதையில் ஆட்டோவில் போய்க் கொண்டு இருந்தபோது ஆட்டோ விபத்துக்குள்ளாகி விட்டது. மற்றவர்களுக்கெல்லாம் சாதாரண அடி. இவரது போதாத காலம், இவரின் இடுப்பில் வைத்திருந்த மது பாட்டில் கீழே விழுந்து உடைந்து, காலில் ஆழமாய்க் குத்தி பெரிய காயம். ஏகப்பட்ட செலவு.

அதற்குப் பின் சில வருஷங்கள் கழித்து ஸ்டிரோக் வந்தது. அது சரியாக, சில மாதங்கள் ஆனது.

2001ல் வயிற்று வலி என்று ஆஸ்பத்திரிக்குப் போய் ஸ்கேன் பண்ணிப் பார்த்ததில், கிட்னி பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. டயாலிசிஸ் பண்ண வேண்டிய கட்டாயம். ஒரு தடவை டயாலிசிஸ் பண்ண, தொள்ளாயிரம் ரூபாய் கட்டணம்.





• அனுபந்துவின் மகள் திருமணத்தில்...

இவரது ட்ரீட்மென்ட்டுக்கு என்றே கொஞ்சம் கொஞ்சமாய் இரண்டு லட்சம் ரூபாய் வரை கடன் வாங்கி விட்டேன். இந்த நிலையில் அவருக்கு திடீரென்று ஹார்ட் அட்டாக் வந்தது. தனியார் ஹாஸ்பிட்டலில் வைத்து வைத்தியம் பார்க்க வசதி இல்லாமல் ஜி.ஹெச்சில் சேர்த்தோம். குடிப்பழக்கத்தால் லிவர் பாதிப்பு வேறு.

நடிகர் சங்கத்தில் இவர் மெம்பர் என்பதால் விஜயகாந்தைச் சந்தித்து, உதவிகோர முயற்சித்தோம். மனு எழுதித் தரச் சொன்னார்கள். அந்த மனு விஜயகாந்த் கைக்குப் போய் சேர்ந்ததா என்றே தெரியவில்லை. தெரிந்திருந்தால் நிச்சயம் ஏதாவது உதவி இருப்பார்.

நடிகர் சத்யராஜை அணுகியபோது, பரிவுடன் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து உதவினார்.

அவர் இறந்து, தகனம் செய்த அன்று நடிகர் சங்கத்திலிருந்து ஒருவர் வந்து இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து விட்டுப் போனார்.

கடன் சுமை எங்களை இன்னமும் அழுத்திக் கொண்டுதான் இருக்கிறது. எங்கள் மகனுக்கு நல்ல வேலை இல்லை. நன்றாக இருந்த சமயம், எங்கள் பெண்ணுக்கு நல்லபடியாக கல்யாணம் பண்ணி வைத்ததுதான் எனக்கு ஆறுதலான ஒரே விஷயம்." சோகத்துடன் சொல்லி முடிக்கிறார் அகிலா.

- சந்திரமௌலி

படம்: **ஸ்ரீஹரி**

இது பழைய துணி

காலை மணி பத்துக்கு மேல் இருக்கும். கம்பெனியில் ஒட்டடை தட்டி ஆட்கள் சுத்தம் செய்கிறார்கள்.

"இன்று வேலை செய்ய வேண்டாம். நாளைக்கு வாருங்கள்" என்றார் முதலாளி.

வந்திருந்த பெண்களுக்கு 'வேலை என்று வந்துவிட்டு உடனே போக வேண்டுமே. அதோடு ஒருநாள் சம்பளமும் போச்சே' என்றிருந்தது.

முதலாளி இளகிய மனதுடையவர், "இந்தாங்க" என்று ஆளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்து "காலைக்காட்சி பார்த்துட்டுப் போங்க" என்றார்.

பெண்கள் சிரிப்புடன் வாங்கிக் கொண்டு கிளம்பினார்கள்.

சங்கரி அம்மாள் "எனக்குப் படம் பார்த்தால் தலையை வலிக்கும்" என்று கூறிவிட்டு தன் பங்குக் காசை வாங்கி, பேத்திக்கு அந்தப் பெட்டிக்கடையில் விற்ற தின்பண்டத்தை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

யாரோ 'மணி பத்தரையாகிவிட்டது' என்று பேசிக்கொண்டு செல்வது காதில் விழுந்தது. வீட்டுக்கதவை சும்மா சார்த்தி வைத்துவிட்டு மருமகள் கைக்குழந்தையுடன் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதைச் சிறிது திறந்து பார்த்துவிட்டு, உள்ளே மதிய சாப்பாடு எடுத்துப் போன பையை வைத்துவிட்டுத் திண்ணையில் அமர்ந்தாள்.

அருகில் சாலைப் பராமரிப்பு வேலை நடந்து கொண்டிருந்தது. வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண் சங்கரியிடம் வந்தாள்.

சங்கரி கொடுத்த தண்ணீரைக் குடித்துவிட்டு செம்பைத் தரும்போது தன் புடைவை கிழிந்திருப்பதைக் காட்டி "பழசு சீலைத்துணி இருந்தாக் குடும்மா" என்று கெஞ்சுவது போல் கேட்டாள்.

சங்கரி "வேலை செய்றல்ல, புதுத் துணி வாங்கேன்" என்றாள். "ஊர்லே தண்ணி இல்லாம, மழை இல்லாம பஞ்சம் பொழக்க இந்த வேலைக்கு வந்துருக்கோம். அதுவும் நாலு நாள் வேலை இருந்தா, பத்து நாளைக்கு வேலை இல்லை.

அதுலயும் வாரக் கூலிலே ஆம்பளைங்க சாராயங் குடிக்கப் பாதி போயிடுது. இதிலே கூட்டியார மேஸ்திரிக்குக் கமிசன் குடுக்கணும்."

அந்தப் பெண் நீட்டி முழக்கிப் பேசுவதைப் பார்த்த சங்கரிக்கு வேடிக்கையாகவும், அதே நேரம் பாவமாகவும் இருந்தது.

"இரு" என்று சொல்லிவிட்டு உள்ளே போய், அந்த வீட்டின் மூலையில் வைக்கப்பட்டிருந்த தன் பழைய தகரப் பெட்டியைத் திறந்தாள்.



அதில் இருந்த தனது பழைய புடைவைகளை எடுத்துப் பார்த்தாள். ஏழு புடைவைகளும் சுத்தமாகத் துவைத்து மடித்து வைக்கப்பட்டிருந்தன. பழையவைதான், ஆனால் கிழியாதவை.

அதிகம் கிழியாத தன் புடைவைகளில் இரண்டை எடுத்தாள். அதோடு இரண்டு பழைய ரவிக்கைகளையும் சேர்த்து ஒரு பாலிதீன் பையில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து

அவளிடம் கொடுத்தாள்.

அந்தப் பெண் இதை எதிர்பார்க்காமல் கிடைத்த பொக்கிஷத்தைப் பெறுவது போல மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டாள்.

சந்திரா அச்சுதன்



சங்கரிக்கும் தான் ஏதோ பெரிய நல்ல காரியம் செய்துவிட்ட திருப்தியுடன் "போ" என்று தலையசைத்துக் கொண்டே திரும்பினாள்.

வசந்தா விழித்து குழந்தையைத் தூளியில் போட்டுவிட்டுக் கொல்லைக்குச் சென்று திரும்பினான் "வேலை கிடையாதா?" என்றான்.

"கம்பெனி சுத்தம் செய்யிறாங்க. இனி நாளை தான் வேலை" சங்கரி பதில் சொன்னாள்.

படியில் செருப்பை விடும் சத்தம் கேட்டது. பன்னீர், தான் கொண்டு சென்ற சாப்பாடுப் பாத்திரம் கொண்ட பையை வைத்துக் கொண்டே "இன்று மின் சாரம் இல்லாததால் வேலை இல்லை. செல்வி பள்ளிக்கூடம் போயிடுச்சா?" என்றான்.

வசந்தா சலிப்புடன் "போயிட்டா, பாதிநாள் இப்படி வேலை இல்லாட்டி குடும்பம் நல்லா பண்ணலாம்" என்றாள்.

"நான் ராவு வேலைக்குப் போறேன். கார் கழுவுற வேலைக்கு மின்சாரம் இல்லாட்டி நடக்குமா?" சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான்.

"சரி, ரோட்டு வேலை செய்யிறவளுக்கு தர்மஞ் செய்யுறதுக்குத்தான்

மாறுது டைட்டில்?

'ஜெயம் ரவி'யின் புதுப் படத்திற்கு 'ராஸ்கல்' என்று பெயர்



வைத்ததற்கு ஆங்காங்கே எதிர்ப்புத் தூறல் விழ, இப்பொழுது 'நெல்லை டு சென்னை' என்று பெயர் மாற்றம் செய்ய விருக்கிறார்களாம். ('இது வைகோவின் நடைப் பயண ரூட்டாச்சே' என்று இப்பொழுதும் யாராவது குறுக்கே நிற்காமல் இருந்தால் சரி!)

\- கண்

உங்க அம்மாவுக்கு இன்னைக்கு வேலையில்ல போல. அவளுக்கு என்னா குடுத்துதுன்னு கேளுங்க" என்றாள்.

பன்னீர் தாயைப் பார்த்து "என்னம்மா குடுத்தே?" என்று கேட்டுவிட்டு, மனைவியைப் பார்த்து "இங்கே என்னா குமிஞ்சுக் கிடக்கு அள்ளிக் குடுக்க" என்றான்.

சங்கரி "இல்லப்பா, என் பழைய புடைவை ரெண்டு குடுத்தேன். பாவம் புடைவையெல்லாங் கிழிசலாக் கட்டி யிருந்தாள். எங்கிட்டே இன்னும் நாலஞ்சு புடைவை இருக்கு. தீபாவளி வந்தால் புதுப்புடைவை வரும். கம்பெனி முதலாளி ஒரு புடைவை குடுப்பாரில்ல'' என்றாள்.

வசந்தா 'உம்' என்று முகத்தை ஒரு நொடி நொடித்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

சங்கரிக்கு அன்றைய பொழுது, பேத்தி செல்வி வந்தபிறகு அவளுடன் பேசவும், விளையாடவுமாகக் கழிந்தது.

மறுநாள் நேரத்தோடு சங்கரி வேலைக்குச் சென்றுவிட்டுத் திரும்ப ஆறு மணிக்குமேல் ஆகிவிட்டது. செல்வி ஓடி வந்து இடுப்பைக் கட்டிக் கொண்டு ''அப்பத்தா, எனக்கு அம்மா புதுச் சாப்பாடு டப்பி வாங்கி யிருக்கு பாரு" என்றாள்.

''நல்லாருக்கு கண்ணு. பத்தரமா வச்சுக்க" என்று சொல்லிக் கொண்டே காலையில் கொல்லையில் காயப் போட்டிருந்த தன் புடைவையை எடுத்து மடித்துக் கொண்டே, தன் பெட்டியைத் திறந்தாள்.

பெட்டியில் ஒரு புடைவையும் ரவிக்கைகளும் மட்டும் இருந்தன. சங்கரி தன் புடைவைகள் வேறு எங்கும் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே, "வசந்தா, பொட்டில இருந்த புடைவைங் களை எங்கும் எடுத்து வச்சியா? காணுமே" என்றாள்.

வசந்தா "அதான் தீபாவளி வருதே, அந்தப் பழைய புடைவைங்களைப் போட்டுத்தான் செல்விக்கு சாப்பாடு டப்பியும், துணி அலச பிளாஸ்டிக் வாளியும் எடுத்தேன். கணக்கு வழக்கு இல்லாமல் இருந்தாத்தானே தானம் பண்ணச் சொல்லுது'' என்றாள்.

சங்கரியம்மாளுக்கு ஒன்றும் பேசத் தோன்றாமல் விக்கித்து நின்றாள்.

செல்வி ஓடி வந்து அம்மாவையும், பாட்டியையும் மாறி மாறிப் பார்த்தாள். பெண் குழந்தைகள் எதையும் எளிதில் புரிந்து கொள்கிறார்கள்.

சங்கரியைப் பார்த்து "நீ அழுவாதே அப்பத்தா, நாளைக்கு அம்மா புடைவையைப் போட்டு உனக்கு சாப்பாட்டு டப்பி வாங்குவோம்'' என்று கண்ணைத் துடைத்து சமாதானப்படுத்தினாள் செல்வி.

வசந்தா முகம் கறுத்து நின்றாள். ⭘

ஒரு குறுநில மன்னர் தோரணையில் ரயில்வே அமைச்சர் லாலுபிரசாத் யாதவ் மதுரை வந்த போது...


• வைகை நதிக்கரையில் இளங்காலைக் கதிரொளி பட்டுத் தெறிக்கின்ற காலைப் பொழுது. மதுரை ரெயில்வே சந்திப்பு, முதல் பிளாட்பாரம். காலை மணி 6.20. பதிமூன்று பெட்டிகள் இணைக்கப்பட்ட தனிச் சிறப்பு ரயில். அலுங்காமல் குலுங்காமல் அட்டகாசமாய் வந்து நிற்கின்றது. அதனுள்ளே மத்திய ரெயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ், அவரது மனைவியும் பீகார் முதல் அமைச்சருமான திருமதி ராப்ரி தேவி, மகள்கள், மகன்கள், மருமகள் மற்றும் பேத்தி என அவர் தம் குடும்பத்தினர்.

• ரெயில் நிலைய வாசலில் வரவேற்பு. கூட்டணிக் கட்சியினர் வந்திருந்தனர். குறிப்பாக தமிழ்நாடு யாதவ மகாஜன சங்கம், மதுரை கிளையினர் லாலுவுக்கு கிரீடம் சூட்டி, மலர் மாலை அணிவித்து மகிழ்ந்தனர். வாசலில் யானை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. யாதவ பண்பாட்டுக் கழகத்தினர் சார்பாக மேள தாளங்களுடன் தாரை, தப்பட்டை முழங்க வரவேற்பு!



• ரெயில் நிலையத்தில், லாலுவுக்கு வரவேற்பு தந்து முடிந்த பிறகே 6.45க்கு ரயில் பெட்டியிலிருந்து கீழே இறங்கினார் ராப்ரி தேவி. தம் குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும். மதுரை சர்க்யூட் ஹவுசில் தங்கியிருந்தனர்.

• சுவாமி தரிசனத்துக்காக காலை 8.30 மணிக்கு மதுரை



• மீனாட்சி அம்மன் கோயிலில்...

மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தம் குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அழைத்து வந்திருந்தார் லாலு. சுமார் அறுபது கார்கள் கீழச் சித்திரை வீதி வழியாக கோயில் வாசலில் வந்து நின்றிருந்தன.

• அம்மன் சன்னதி எதிரே அமைந்திருக்கும், பழைமை வாய்ந்த நகரா மண்டபம் வழியாக லாலு குடும்பத்தினர் ஒருவர் பின்





ஓரம்போ! ஓரம்போ! லாலுபிரசாத் ரயில் வருது!

ஒருவராக அணி வகுத்து நடந்து சென்றனர். அம்மன் சன்னதி உள்ளே நுழையும் முன்பாக, லாலு மட்டும் தனித்து நின்றுகொண்டு, தம் குடும்பத்தினரை ஒன், டூ, த்ரீ என ஒவ்வொரு நெம்பராக எண்ணி உள்ளே போகச் செய்து கொண்டிருந்தார். கடைசியாக லாலுவையும் சேர்த்து குடும்பத்தின் மொத்த உறுப்பினர்கள் இருபத்தி நான்கு!

- அம்மன் சன்னதி இடதுபுறம் அமைந்துள்ள விநாயகர் சன்னதியில் முதலில் வழிபாடு நடத்தினர். அதனைத் தொடர்ந்து நவகன்னியரைத் தரிசித்தனர்.

- ஆயிரம் விளக்குகள் அமையப் பெற்ற வளைவுக்கு அருகில், எப்பொழுதும் நின்று கொண்டிருக்கும் கோயில் யானை பார்வதி, லாலு குடும்பத்தினர் அனைவருக்கும் அலுக்காமல் சலிக்காமல் ஆசி வழங்கியது!

- பொற்றாமரைக் குளத்தைச் சுற்றியுள்ள கிழக்குப் பிராகாரம் வழியாக வந்தவர், பொற்றாமரைக் குளம் அருகே வந்து நின்றபோது, கோயிலின் தெற்கு கோபுர அழகுகளைக் கண்டு வியந்து போனார். கைக் குழந்தையுடன் வந்திருந்த ஒரு செல்ல மகளை அருகே அழைத்தார் லாலு. அவர்களுக்கு அதனைச் சுட்டிக்காட்டினார். வாண்டுக் குழந்தையான லாலுவின் பேத்தி கோபுரம் பார்த்து கை குவித்தது.

- பொற்றாமரைக் குளத்தின் படிக்கட்டுகளில் ஆளுக்கொரு புறமாக 'ஹாய்'யாக சற்று நேரம் அமர்ந்திருந்தனர்!

- தெற்கு உள் பிராகாரத்தில் வீற்றிருக்கும் விபூதிப் பிள்ளையாருக்கு, விபூதியை அள்ளி வீசி விட்டுப் பிரார்த்தனை செய்தார் லாலு. அவரைத் தொடர்ந்து ராப்ரி தேவி, மகள்கள் என ஒவ்வொருவரும் விபூதியை அள்ளி விநாயகர் மீது வீசி விட்டு சுவாமி கும்பிட்டனர். மீனாட்சி அம்மன் தவிர, முருகன், முக்குறுணி விநாயகர், நவக்கிரகங்கள், வெள்ளியம்பல நடராஜர், வீரபத்திரர், காளி என்று ஒரு சன்னிதி விடாமல் நின்று வழிபட்டனர்.

- காலை நேரம் என்பதால் போக்குவரத்



துக்கோ, பொதுமக்களுக்கோ எவ்வித இடையூறும் இல்லாமல், லாலு குடும்பத்தினர் சுவாமி தரிசன விஜயம் விறுவிறுப்பாக நிறைவேறியது.

• காலை 10.30. மதுரை சந்திப்பு. மதுரையிலிருந்து நிஜாமுதீனுக்கு சென்று வருகின்ற அதிவேக துரித ரயில் இயக்கும் விழா. லாலு. ரெயில்வே இணை அமைச்சர் வேலு முக்கிய பங்கேற்றிருந்தனர். விழா அழைப்பிதழிலும், கல்வெட்டிலும் இடம் பிடித்திருந்த ராப்ரி தேவி, மதுரை ரெயில் நிலைய விழாவில் மட்டும் ஏனோ பங்கேற்கவில்லை.

• விழாவில் முப்பது நிமிட லாலுவின் பேச்சு ஆங்கிலத்திலும், இந்தியிலுமாக மாறி மாறி வந்து விழுந்தது. அத்தனையும் நகைச்சுவைத் துளிகள், கரங்களை ஏத்தி உயர்த்தி விதவிதமான சேஷ்டைகளிடையே பேசினார்:

"என் மனைவியும், பீகார் முதல்வருமான ராப்ரி தேவி தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார். இந்த நேரத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா டெல்லிக்குச் சென்றிருக்கிறார். உடனே, நீங்கள் ஏதோ செல்வி ஜெயலலிதா அவர்கள் எங்களுக்குப் பயந்துகொண்டு டெல்லி சென்றுவிட்டார் என எண்ணிட வேண்டாம். ஒரு நகைச்சுவைக்காக குறிப்பிட்டேன். தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் எனக்குச் சகோதரி போன்றவர்.

"கோத்ரா ரயில் எரிப்பு தொடர்பாக முழு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணையின் முடிவில் அந்த நெருப்பு எங்கிருந்து வந்தது எனத் தெரிய வந்துவிடும். உள்ளிருந்தா அல்லது வெளியில் இருந்தா என்று எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகி விடும்.

'பா.ம.க' இன்ஜின்?

பொதுவாக ரெயில் எஞ்சின்கள் மட்டும் பெரும்பாலும் பச்சை வர்ணம் மட்டுமே (ஜெ. கலர்?) முழுவதுமாகப் பூசப்பட்டிருக்கும். சில குறிப்பிட்ட ரெயில் எஞ்சின்களுக்கு சிவப்பு வர்ணம் மட்டுமே அடிக்கப்பட்டிருக்கும். ஆனால், மதுரை டு ஹஸ்ரத் நிஜாமுதீன் அதிவேக துரித ரயிலின் எஞ்சின் பெட்டிக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் வர்ணம் அடிக்கப்பட்டிருந்தது. மதுரைக்காரங்க இது பற்றிப் புலம்பிக்கிட்டே இருக்காங்க!

• விழா மேடையின் முன்பாக ஆளுயர குத்து விளக்கு ஒன்று பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எண்ணெய் விட்டு, திரிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால், விழா நிறைவு பெறுகின்ற வரைக்குமாக ஏனோ அந்தக் குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்படவேயில்லை!



தொகுப்பு, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



தெய்வ மகாத்மா!

அமரர் கல்கி

மாநிலத்தை வாழவைக்க வந்த மகாத்மா!
மாந்தர் குலம் உய்ந்திடவே வந்த மகாத்மா!
தீனர்களின் தந்தையான காந்தி மகாத்மா!
தீயவர்க்கும் நன்மை எண்ணும் தெய்வ மகாத்மா!

வானுலகைத் தாம் அணுகிச் சென்ற போதிலே
வாசலிலே நின்று வரவேற்றவர் யாரோ?
வானவரும் தேவியரும் வந்து வணங்கி
வாசமலர் தூவி ஜெய போற்றி சொன்னாரோ?



பாலன் ப்ரஹலாதன் தங்கள் பாதமலரைப்
பணிந்து கண்ணீரருவி சொரிந்து நின்றானோ?
ஞாலமெலாம் வாழ முதுகெலும்பினை ஈந்த
ஞானமுனியாம் ததீசி ஆசி சொன்னாரோ?

முன்னொருநாள் அன்பு நெறி தந்தருளி
மோன புத்தர் இமை திறந்து முக மலர்ந்தாரோ?
சின்னஞ்சிறு வயதினிலே தம்மை மணந்த - எங்கள்
அன்னையாம் கஸ்தூரிபாயும் கரங்குவித் தாரோ?

- 'அமரர் கல்கி பாடல்கள்'
வானதி பதிப்பகம்







சேது என் காதலி

விசிறி எறிகிற சோற்றுக்கு ஆலாய்ப்பறக்கிற காக்கைகள் மாதிரி, அரசியல்வாதிகள் அனைவரும் 'சேது சமுத்திர திட்டத்துக்கு' உரிமை கொண்டாடுகிறார்கள். பாவம் நம்ம நிருபர், ஒரே நாள்ல எல்லாரும் பிரஸ் மீட் வைக்க, தலையப் பிச்சுக்கிட்டு அலையறாரு.

நிருபர்: ஹலோ, நான் தலைமைச் செயலகத்துல தான் இருக்கேன். அம்மா சொல்றதைக் கேட்டுட்டு, அய்யா சொல்றதக் கேட்க அறிவாலயம் வர்றேன்... வைச்சிரவா...

(ஜெ பிரஸ் மீட்)

ஜெ: என் இதய தெய்வங்களாகிய தமிழக மக்களுக்கு இந்த நேரத்தில் நான் ஓர் உண்மையைக் கூறியே ஆகவேண்டும். அதாவது, நான் பிறந்ததே சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றத்தான். நான் வளர்ந்தவுடன் நடிகையாக திட்டம் போட்டேன். நடிகையான பின் அரசியலுக்கு வரத் திட்டம் போட்டேன். அரசியலுக்கு வந்து, சேது சமுத்திர திட்டம் போட்டேன். சட்டமன்றத்திலுள்ள செங்கற்களை, பாராளுமன்றத்திலுள்ள பல்லிகளை, ஏன் வாஜ்பாய் வீட்டு வாட்ச்மேனை கேட்டுப் பாருங்கள். 'சே.ச.தி' என்றால், 'ஜெ.கொ.தி' (ஜெ. கொண்டு வந்த திட்டம்) என பதில் வரும். இதெல்லாம் வரலாறு அறியாத வைகோ, வாய்ப்பாடு தெரியாத கருணாநிதி, பால் கணக்குக் கூட தெரியாத ராமதாஸ், இவர்களுக்குப் புரியாது. நீதி அறிந்த தமிழக மக்களுக்குப் புரியும்.

(உடனே பொன்னையன் உணர்ச்சிவசப்பட்டுப் பாடுகிறார்)

"கலைஞரு பண்றாரு சூது!
வைகோவுக்கு புத்தி லேது!
ராமதாஸுக்கு ஒண்ணும் தெரியாது!
அம்மாதான் கொண்டு வந்தாங்க சேது!

(நம் நிருபர் காது வலியோடு அறிவாலயத்துக்கு ஓடுகிறார்)

கலைஞர்: ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் கூறி, மக்களை உண்மை என நம்ப வைக்கும் ஹிட்லரின் அமைச்சர் கோயபல்ஸ் போன்றோர் இங்கே நிறைந்துள்ளனர்.

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து

அதாவது - "தேர் கடலில் ஓடாது - கப்பல் நிலத்தில் ஓடாது" என என் முப் பாட்டனார் அய்யன் வள்ளுவர் அன்றே என்னிடம் கூறினார். எனவே கடல் நிலத்தை ஆழப்படுத்த, நான் கொண்டு வந்த திட்டம் சேது. பிறர் சொல்லும் பொய்கள் அனைத்தும் ஈது.



துரைமுருகன்: தலைவரே இதெல்லாம் போதாது. "சேது - என் காதலி"ன்னு உடனே 600 பக்கத்துக்கு ஒரு புக் போடுங்க. அதோட விடாதீங்க. 'கண்ணம்மா' படத்துல 'கடல்' பத்தி அலை அலையா வசனம் வைச்சிங்கன்னா மக்கள் நம்ம பக்கம்தான்.

(செல் அடிக்கிறது. 'வைகோ பிரஸ்மீட்' என செய்தி வர, தாயகத்திற்கு ஓடுகிறார்

முகில்

நம் நிருபர்)

வைகோ:

என்னோடு நடை பயணம் வந்தீர்களா?
பொடா பயணம் வந்தீர்களா?
கடல் மணல் தகிக்க, கால் கொதிக்க,
கருவாடு காய வைக்க வந்தீர்களா?
சேதுவின் அலைகளில் என்னுடன் தோணியில்
இலங்கைக்கு வந்தீர்களா?

இல்லை, அங்கே வலைவீசி விளையாடும் என் மீனவ மக்களுக்கு குழம்பு வைத்துக் கொடுத்தீர்களா?

மாமனா? அத்தையா?
மானம் கெட்டவர்களே?
சேதுவின் வெற்றியில் பங்கு' கேட்க யார் நீங்கள்?

(என வைகோ கட்டபொம்மனாக அநியாயத்திற்கு கர்ஜித்துக் கொண்டிருக்க, அங்கிருந்து எஸ்கேப் ஆகி, இசகு பிசகாக





ராமதாஸ் மீட்டிங்கில் மாட்டிக் கொள்கிறார் நமது நிருபர்)

ராமதாஸ்:

எல்லோரும் கேட்டுக்கோங்க. 'பாபா' படம் ஓடலைன்னா, அதுக்குக் காரணம் நான் இல்லை. 'கஜேந்திரா' லேட்டானதுக்கும் நான் காரணம் இல்ல. ஆனா அதே மாதிரி சேது சமுத்திர திட்டத்துக்கும் நான் காரணம் இல்லைன்னு நீங்க நினைக்கக் கூடாது. அதுக்கு யாராவது உரிமை கொண்டாடினாங்கன்னா - சேது கதாநாயகன், கதா நாயகின்னு யாராவது போஸ்டர் ஒட்டினாங்கன்னா, சினிமாக்காரங்களுக்கு ஏற்பட்ட கதிதான் அவங்களுக்கும். சொல்லிப்புட்டேன்.

(நிருபருக்குத் தலை சுற்றுகிறது. அதற்குள் 'நடிகர் விக்ரம் பிரஸ் மீட்' என செல் சொல்ல, எகிறிக் குதித்து ஓடுகிறார்)

விக்ரம்: எனக்கு 'வாழ்க்கை' கொடுத்தவர், எனக்கு 'லைஃப்' கொடுத்தவர், எனக்கு 'ஜிந்தகி' கொடுத்தவர், அண்ணன் பாலா தான். அண்ணன் என்னை மிருகமாக்கலேன்னா, இந்த 'பிதாமகன்' இல்ல! அண்ணன் என்னை பைத்தியமாக்கலேன்னா, இந்த 'சீயான்' இல்ல. அதான் இனிமே 'சேது சமுத்திர திட்டத்தை'- 'சீயான் சமுத்திர திட்டம்'னு மாத்தணும்னு கவர்மெண்ட்டுக்கு கோரிக்கை வைக்கப் போறேன். இந்தத் திட்டத்தோட வெற்றி, அண்ணன் பாலாவுக் குத்தான்! (நிருபர் மயக்கமடைகிறார்) ○

நட்சத்திர பலன்கள்

மேஷம்: உங்க செல்போனைத் தட்டினா திருப்பதி பாலாஜிக்கு சுப்ரபாத ரிங்டோன் கேக்கற அளவுக்கு தெய்வபலம் கூடியிருக்கு. துணிவு, நம்பிக்கை, தெளிவு கூடும். எதிரிகளைத் தேடாதீங்க, இருக்க மாட்டாங்க. உத்தியோகத்தில் உற்சாகச் சூழ்நிலை நிலவும். உபகரணங்கள், சினிமா, நாடகம், சங்கீதம், மருத்துவத் துறையினருக்கு ஏற்றம் கிட்டும். குடும்பத்தில குரு பார்வையால சுப மங்களக் காரியம் கைகூடும். பெண்களுக்கு உடன்பிறந்தவர்கள் ஆதரவு கிடைக்கும்.

ரிஷபம்: திருப்பத்துக்குத் திருப்பம் விருப்பமானதாகவே அமையும். ஆரோக்கிய மேன்மையும், எதிர்பாராத பயணமும் ஏற்படும். கோவில் குளம்னு ஏதேனும் போகாம விட்டிருந்தா கௌம்பிடுங்க, நன்மையே கிட்டும். உத்தியோகத்தில பதவி, இடமாற்றம் ஏற்படலாம். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், பத்திரிகை தொழில்கள்ல இருக்கறவங்களுக்கு மேன்மை கிட்டும். குடும்பத்தில நெருக்கடிகள் தீர்ந்து நிம்மதி கிட்டும். சுபச் செலவுக்குத் தயாராயிருங்க. பெண்களுக்கு உற்சாக வாரம்.

மிதுனம்: 'ஞாபகம் வருதே'ன்னு பாட்டுப் பாட எதிர்பாராத சந்திப்பும், வி.ஐ.பி.க்கள் ஆதரவும் ஏற்படும். உத்தியோகத்தில தூங்கிட்டிருந்த உங்க கோரிக்கை ஃபைலை தூசி தட்டி நிறைவேத்து வாங்க. நின்னு போன வரவுகளெல்லாம் வரிசையில வந்து நிக்கும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர்ல வேலையா இருக்கறவங்களுக்கு லாபத்தை எண்ண நேரமில்லாமப் போகும். சட்டம், காவல் துறையினருக்குக் கொஞ்சம் சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும். குடும்பத்தில செலவு கூடினாலும் மகிழ்ச்சி நிலவும்.

கடகம்: எல்லோரையும் கவர்ந்திழுக்கிற காந்தம் உங்ககிட்ட இருக்கு. அதோட பவர் கூடி, புது அறிமுகம், தனவான்கள் ஆதரவுன்னு உங்க மார்க்கெட் வேல்யூ எங்கேயோ போயிடும். உத்தியோகத்தில புது முயற்சிகள் எல்லாம் வெற்றிதான். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துடும். கலைத்துறை, கமிஷன், காண்ட்ராக்ட் தொழில்கள் லாபம் பெறும். குடும்பத்தில கருத்து வேறுபாடு மறைஞ்சு, சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். பெண்களுக்கு யோகமான வாரம்.

சிம்மம்: உண்மையிலேயே உங்க ஸ்டார்தாங்க சூப்பர் ஸ்டார். தொட்டதெல்லாம் அநியாயத்துக்கு வெற்றிகளா குவிக்கும். செலவு ஆக, ஆக, வரும்படியும் கூடிக்கிட்டே வரும். உத்தியோகத்திலயும் சுக்ரதசை உங்களை அடிச்சுத் தள்ளப் போவுது. ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ் தொழில்கள்ல இருக்கறவங்க நோட்டு எண்ணுற மெஷின் வாங்கிடலாம். குடும்பத்தில புது வீடு, புதுக் காருன்னு கலக்கப் போறீங்க. நல்ல செய்திகள் தேடி வரும். பெண்கள் ராஜ்யம் கொடி கட்டிப் பறக்கும்.

கன்னி: நீங்க போற பஸ் தாங்க பிரேக் டவுன் ஆகும். கவலைப்படாதீங்க. வேற ரூட் பிடிங்க. கொஞ்சம் அலைச்சல், கஷ்டம்னு வந்தாலும் கடைசியில வெற்றியை எட்டிப் பிடிச்சுடுவீங்க. பர்ஸையும் கொஞ்சம் பாத்துக்கோங்க. உத்தியோகத்தில இடமாற்றம், பதவி உயர்வுன்னு அனுகூலங்கள் கிடைக்கலாம். பத்திரிகை, சட்டம், காவல், அரசியல் துறைகள்ல நிதானமா இருக்கறது நல்லது. குடும்பத்தில செலவு காத்திருக்கு, உஷாரா இருங்க. விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் எல்லாத்

செப்டெம்பர் 29 முதல் அக்டோபர் 5 வரை

துன்பத்துக்கும் உங்களுக்கு மருந்து.

துலாம்: எடுத்த வேலையெல்லாம் ஒரளவுக்குச் சாதகமாவே நடக்கும். எதிர்ப்புகள் மெல்ல மறையும். சில புதுமுகம் அறிமுகம் ஆகலாம். உத்தியோகத்தில ஆதரவு தெரிஞ்சாலும், புதிய முயற்சிகளை தள்ளிப் போடறது நல்லது. வெளிநாட்டுத் தொடர்பு, யந்திர வகை, பொன், வெள்ளி ஆபரணத் தொழில்கள் முன்னேற்றம் பெறும். ரியல் எஸ்டேட் அனுகூலமா இருக்கும். குடும்பத்தில கோர்ட், வழக்கு, விரோதங்கள் தீர்ந்து நிம்மதி கிடைக்கும். பெண்கள் ஆரோக்கியத்தில கவனமா இருக்கறது நல்லது.

விருச்சிகம்: தெய்வ ஆசியும், பெரியவர்கள் ஆசியும் பல நல்ல பலன்களைக் கொடுக்கிற வாரம். ஆரோக்கியம் மேன்மை பெறும். உத்தியோகத்தில எல்லாவகை அனுகூலங்களும் கிடைக்கும். கூட்டுத் தொழில், ரியல் எஸ்டேட், கலைத்துறை, காவல், சட்டம் துறைகள் மேன்மையாக வளரும். குடும்பத்தில ஒற்றுமை, அமைதி, சுப காரியத் தொடக்கம்னு மகிழ்ச்சி நிலவும். சொத்து விவகாரம் லாபம் தரும். பெண்கள் நினைச்சதைச் சாதிப்பாங்க.

தனுசு: சென்னையை



அப்பப்போ குளிர வைக்கிற மேகம் மாதிரி, உங்க மனசைக் குளிர வைக்கும் யோகம். திடீர்ப் பரிசுன்னு ஒரு ஜாக்பாட் அடிச்சாலும் அடிக்கும். நட்பு, உறவு, வி.ஐ.பிக்கள் ஆதரவு எல்லாம் உங்க பக்கம் தான், ஜமாய்ங்க. உத்தியோகத்தில சகஜமான நிலையும், வெளியூர்/ வெளிநாட்டுப் பயணமும் வரலாம். ஏற்றுமதி இறக்குமதி, சுய தொழில், கலைஞர்கள்னு சிந்தனையோட உழைக்கிறவங்களுக்கு ஏற்றமான நேரம். குடும்பத்தில நெருக்கடி தீர்ந்து நல்ல செய்திகள் குதூகலம் ஏற்படுத்தும். அனுகூலக் காற்று பெண்கள் பக்கமாவே வீசும்.

மகரம்: புதுப்புது அறி

...நடக்கும்!


இது நல்ல நேரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	செப்.29 புரட்.13	ரேவதி	பிரதமை	மஹாளய பக்ஷம் ஆரம்பம்
வியாழன்	செப்.30 புரட்.14	அஸ்வினி	துவிதியை	-
வெள்ளி	அக்.1 புரட்.15	அஸ்வினி	திருதியை	மஹா பரணி
சனி	அக்.2 புரட்.16	பரணி	சதுர்த்தி	காந்தி ஜயந்தி சங்கட ஹர சதுர்த்தி
ஞாயிறு	அக்.3 புரட்.17	கார்த்திகை	பஞ்சமி	-
திங்கள்	அக்.4 புரட்.18	ரோகிணி	சஷ்டி	சங்கரன்கோயில் கோமதியம்மன் உற்சவம்
செவ்வாய்	அக்.5 புரட்.19	மிருகசீரிஷம்	ஸப்தமி	சூரிய பூஜை - சுவாமி மலை உற்சவம்

முகங்கள், அதில தனவான்கள் ஆதரவு, ஆரோக்கிய மேன்மைன்னு உற்சாக மழை பொழியப் போகுது. பெரியவங்க ஆசியாலே பல நன்மைகளும் கூடும். உத்தியோகத்தில கடினமான உழைப்பு தேவைப்பட்டாலும் அதற்கான பாராட்டும் கிடைக்கும். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், ஃபர்னிச்சர், ஆப ரணம் தொழில்கள் ஓகோன்னு நடக் கும். குடும்பத்தில ஒற்றுமை கூடும். திரு மணம் ஆகாதவங்களுக்கு சுபவேளை கூடி வரும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கையால மகிழ்ச்சிகர மான வாரம்.

கும்பம்: போன ஜென்மத்துப் புண்ணியம் இன்னும் உங்க கிரெடிட்ல இருக்கறதால, அதோட பலன் கிடைக் கிற நேரம் இது. துணிவு, நம்பிக்கை, தெளிவு எல்லாம் கூடி உயர்த்தக் காத்திருக்கு. சுய தொழில், கூட்டுத் தொழில்காரங்க நிதானமா சிந்திச்சி முடிவெடுக்க வேண்டிய நேரம். கெமிக்கல், மருத்துவம், எண்ணெய், தோல்பொருள் துறையினருக்கு லாபம் கூடும். குடும்பத்தில சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு நிதா னம் அவசியம்.

மீனம்: அடிக்கப் போற அதிர்ஷ் டக் காத்தில திக்குமுக்காடப் போறங்க. எதிர்ப்புகள் இருந்த இடம் தெரியாமப் போயிடும். உத்தியோகத்தில கடின மான வேலையெல்லம் உங்க கைபட் டதும் கரைஞ்சிடும். அரசாங்க, பாங்க் உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் சம்பந்தமான தொழில் கள் லாபம் குவிக்கும். கலைஞர்கள் புகழும், பொருளும் கிடைச்சி மேன்மை பெறுவாங்க. குடும்பத்தில மனக்கஷ்டம் நீங்கி நிம்மதி கிடைக்கும். பெண்கள் உற்சாகமா, மகிழ்வா இருப் பாங்க.



அந்த நாளும் வந்திடாதோ!

போஸ்ட் கார்ட் கதை

ஒரு கோடைக்காலம். மழை பெய்து கொண்டிருந்தது. வானொலிச் செய்திகளும், தொலைக்காட்சி செய்திகளும் மிக முக்கியமாய் அந்த ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பப் படித்தன. தமிழக முதல்வரும், கர்நாடக முதல்வரும் கலந்து பேசி, இரு மாநில மக்களின் நலனைக் கருதி காவிரித் தண்ணீரை பாதிப்பாதியாக பகிர்ந்து கொள்ள, புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதுதான் கோடையில் இப்படி ஒரு மழை. அதே நாளில் நதிநீர் இணைப்புக்கான செயல்வடிவங்கள் தொடங்கின படம் ஓடியது.

அடுத்த காட்சிக்காகக் காத்திருந்தபோது பவர் கட். விழித்துக் கொண்டேன். வியர்வை மழையில் நனைந்திருந்தேன்.

சௌந்தர்யா . யூ



புக்போஸ்

ஈழத்துத் திருக்கோயில்கள் - பகுதி -1 வசந்தா நடராசன்

இதிகாசங்களும், தேவாரம் முதல் புறநானூறு, அல்லி அரசாணி வரை இலக்கியங்களும், கதம்பநதி, பஃறுளியாறு, குமரியாறு, ஆதிச்சநல்லூர் என்று அகழ்வாராய்ச்சிகளும், இலங்கையை தமிழகத்தின் சகோதர நாடாகவே சொல்கின்றன. தமிழையும், கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாட்டையும் வளர்த்தவை இங்கும் அங்கும் ஆலயங்கள்தாம். ஈழத்து ஆலயங்களையும், வரலாற்றையும், தமிழகத் தொடர்பையும் கூறும் ஆய்வு நூல்.

- மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 100/-

இந்திய தத்துவஞானம் வளர்ந்த கதை - பி.சி. கணேசன்

உலகம் அறிவைத் தேடி அலைந்த போது, ஞானத்தைத் தேடி உணர்ந்தது பாரத நாடு. எப்படியும் வாழ்ந்தால் போதும் என்று மற்றவை வளர்ந்த போது, வாழ்வின் நெறிகளை வகுத்தது இந்த நாடு - நெறிகளையும் விதிகளையும் வகுத்தவர்கள், பகுத்தவர்கள், வாழ்வாங்குத் தொகுத்தவர்கள் என்று ஞானச் செல்வர்களின் வரிசையையும், வரலாற்றையும் கூறும் ஞானத் தொகுப்பு.

- புதிய புத்தக உலகம், 52.C. வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.50/-

வெளிச்ச நதி - ஈஸ்டர்

அவலங்களைக் கண்டு ஆர்ப்பரிப்பது அல்லது அழுவது என்றில்லாமல், ஆரம்பக் கவிஞர்களுக்கென்றே இருக்கும் இப்போதைய தப்பித்தலிஸமும் இல்லாமல், மாற்றமும், மருந்தும் சொல்லி, ஏற்றம் கூறும் உரைக் கவிதைத் தொகுப்பு. வார்த்தைகளில் சற்று ஆழம் குறைந்தாலும், கூறும் வடிவங்களின் தாக்கம் வாசிக்கத் தூண்டுகிறது.

- அ.ஈஸ்டர் சாம்ராஜ், முன்னூர் அஞ்சல், கரூர் - 639 111. விலை. ரூ.30/-

பரிபாடல் - உரை: பெ.சுப்பிரமணியன், கு.வெ.பாலசுப்பிரமணியன், அ.தட்சிணாமூர்த்தி.

தமிழர் மரபும், பண்பாடும் மீண்டும் பலரும் அறியச் செய்யும் முயற்சியில் வந்த சங்கத் தொகுப்பில், இசையோடு இயற்றப்பட்ட ஒரே இலக்கியமிது. தமிழர் வழிபாட்டையும், வாழ்வையும், வளமான காலத்தையும் நினைவூட்டும் இலக்கியத் தொகுப்பு.

- நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98. (எட்டுத்தொகை பத்துப் பாட்டு தொகுப்பு ரூ.3000).


- விஷ்வக்

பிரமிட் தேசம் - 4

மரணத்துக்கு அப்புறம் ஒரு வாழ்க்கை இருப்பதிலும், பழைய சடலத்தில் ஆவி புகுந்துகொண்டால் மீண்டும் வாழ முடியும் என்பதிலும், ஆதி எகிப்தியர்களுக்கு இருந்த நம்பிக்கைக்கு அடிப்படைக் காரணம் சூரியனும், நைல் நதியும்தான் என்றார் பாப்! கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் அஸ்தமனமான பிறகு, பூமிக்கடியில் மற்றொரு பயணத்தை மேற்கொண்டு மறுபடியும் கிழக்கில் உதிக்கிறது. தெற்கு ஆப்ரிக்காவிலுள்ள விக்டோரியா ஏரியில் உற்பத்தி ஆகி, சில நாடுகளைக் கடந்து எகிப்தில் நுழைந்து, வடக்கில் மத்திய தரைக்கடலில் சங்கமித்தாலும், பூமியினுள் நைல் நதி திரும்ப தெற்கு நோக்கிச் சென்று, மீண்டும் ஆரம்பத்திலிருந்து தன் பயணத்தைத் தொடர்கிறது. அதேபோல், மனிதனின் ஆவியும் - இதை 'கா' (ka) என்று குறிப்பிடுகிறார்கள். இப்பூமியில் வாழ்ந்து உயிரை விட்டதும், சூரியனோடு பயணம் செய்து, பின் மறுபடியும் பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் தன் பழைய உடலில் புகுந்துகொள்ளும் - என்பதை, அந்தக்கால எகிப்தியர்கள் அழுத்தம் திருத்தமாக நம்பினார்கள். அதனால் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே தனது சாவுக்கும், பிணப்படுத்துதலுக்கும் (Mummification) அவர்கள் தங்களைத் தயார் பண்ணிக் கொண்டார்கள். அதன் விளைவுதான் நாடெங்கிலும் காணப்படும் சமாதிகளும் - tombs - கோவில்களுமாம்! அதுவும் பெரோக்களிடையே இந்த நம்பிக்கை மிக ஆழமாக வேர்விட்டிருந்ததில், தங்களுடைய சமாதிகளும், அதனுள் ஆவியின் மற்றொரு வாழ்க்கையின் தேவைக்காக புதைக்கப்படும் விஷயங்களிலும் அவர்கள் முழுக் கவனத்தைச் செலுத்தியிருப்பதை, அங்குள்ள நினைவுச் சின்னங்கள் நமக்குத் துல்லியமாய் எடுத்துச் சொல்கின்றன.



• கீஸா பிரமிடுகளும் பாலைவனக் கப்பல்களும்...



• ஸ்ஃபிங்ஸ் பின்னணியில் சிவசங்கரி

ஒருவர் மரித்த எழுபது நாட்களுக்குள் சடலத்தை 'பாடம்' செய்துவிட வேண்டும் என்பதால், மூளை, குடல், இத்தியாதிகளை வெளியே எடுத்துவிட்டு, சுமார் நாற்பது நாட்களுக்குப் பிணத்தை நேட்ரான் (natron) உப்பில் ஊற வைப்பார்களாம். பின்னர் அச்சடலத்தை வாசனைத் திரவியங்கள், எண்ணெய் முதலியவற்றால் நிரப்பி, ஆண் என்றால் சிவப்பு வர்ணமும், பெண்ணுக்கு மஞ்சள் வர்ணமும் பூசி, செயற்கைக் கண்களைப் பொருத்தி, கோந்து தடவப்பட்ட மெல்லிய துணியால் உச்சந்தலையிலிருந்து





அமிதாப் அலை!

உள்ளங்கால் வரை 'பாண்டேஜ்' போட்ட மாதிரி கட்டி, 'மம்மி'களைத் தயார் செய்வார்களாம்! அனைத்து உள்ளுறுப்புகளையும் எடுத்து, தனி ஜாடியில் காய வைத்தாலும், இருதயத்தை மட்டும் சுத்தம் செய்து, வாசனைத் திரவியங்களால் நிரப்பி, தீர்ப்பு தினத்திற்குத் தேவை என்பதால், மீண்டும் சடலத்துள் வைத்து விடுவார்களாம்! ('தீர்ப்பு தினம்' என்றால் என்ன என்பதை, அடுத்து வரும் அத்தியாயத்தில் விளக்குவதாக இருக்கிறேன்.)

பெரோக்கள் இறந்துபோனால் அவர்களின் பிணங்களைப் பதப்படுத்துவதில் இன்னும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஓர் அரசர் இறந்ததும், முதலில் அவர் சடலம் நைல் நதிக்கரையிலுள்ள ஒரு கோவிலுக்கு (எந்தக் கோவில் என்பது ஒவ்வொருவருக்கும் மாறுபடும்) எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு குருமார்களால் மேலே சொன்ன விதத்தில் 'பாடம்' செய்யப்படும். சொந்தக்காரர்களும், குருமார்களும் தங்களைப் 'பரிசுத்தம்' செய்துகொண்ட பிறகு அந்த 'மம்மி'யை, இதற்கென உருவாக்கிய பாதை (Causeway) வழியாக, இறுதிச் சடங்குகளைச் செய்யும் மண்டபத்திற்கு (இதுவும் இந்த நிகழ்ச்சிக்கெனக் கட்டப்பட்டதுதான்!) கொண்டு வருவார்கள். அங்கு சடங்குகளைச் செய்து பிறகு சமாதிக்கு எடுத்துச்சென்று, சடலத்தைப் பெட்டிக்குள் (Sarcophagus) வைக்கும் முன் 'வாய் திறப்பு' (opening of the mouth) சடங்கைச் செய்வார்கள். சில மந்திரங்களைச் சொல்லி மம்மியின் வாய், கண்கள் முதலியவற்றைத் திறந்து வைப்பதைத்தான் 'வாய் திறப்பு' சடங்கு என்கிறார்கள். இதைத் தொடர்ந்து, இறந்தபின் வாழும் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விஷயங்களையும், உணவு, பானம், உட்

சிவசங்கரி

கார நாற்காலி, படுக்க கட்டில், பணி செய்ய ஆட்கள், உடை, ஆயுதம் - என்று சகலவற்றையும், பெட்டியோடு உள்ளே வைத்து, சமாதி அறையை சீல் செய்து, அதன் மேல் ராஜாவின் முத்திரையைப் பதித்து விடுவார்கள்!

கீஸாவில் இரண்டாவது பிரமிட்டுக்குச் சொந்தக்காரரான கெப்ரானின் இறுதிச் சடங்குகள் நடந்த ஆலயம் (Funerary Temple) இன்றும் கட்டுக்கோப்பாக நிலைத்திருப்பதில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வுகளை, நம்மால் ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடிகிறது. இதைத் தவிர சடங்குகளின் விவரங்கள் அடங்கிய பபைரஸ் வரைபடங்களும், பழைய அரச பரம்பரையில் நிலவிய பழக்கவழக்கங்களை எடுத்துக் கூறுகின்றன. கெப்ரானின் 'இறுதிச்சடங்கு ஆலயத்தில்' பெரும் தூண்களைக் கொண்ட கூடம், சில அறைகள், 'மம்மி' உருவான புனித இடம், முதலியவற்றைக் காண முடிகிறது. சுமார் நாற்பது அடி நீளத்தில் 1,63,000 கிலோ எடை கொண்ட கற்களைக் கொண்ட முகப்பு வாசல்களோடு நிற்கும் அந்தக் கட்டடத்தின் அளவு, நம்மைப் பிரமிக்க வைக்கிறது. அதுவும், ஒரே ஒரு தரம் ஒருவருக்கு இறுதிச்சடங்கு நடத்த மட்டும்



''என் அம்மாவும் மனைவியும் போட்ட சண்டையில் வீடு ரெண்டாயிடுச்சுன்னு சொன்னா நம்ப மாட்டேன்னியே, பார்த்துக்கோ!''

– உ. ராஜாஜி

உபயோகப்படுத்தவென, அதுபோன்ற கட்டடங்கள் அந்தக் கால ஃபெரோக்களால் உருவாக்கப்பட்டிருக்கும் செய்தி திகைப்பைத் தருவதாகவே இருக்கிறது!

கெப்ரானின் பிரமிடுக்கு நேர் எதிரில் உள்ளது பிரும்மாண்டமான ஸ்ஃபிங்ஸ் சிலை. இதன் காலம் என்ன, எப்போது, யாரால் உருவாக்கப்பட்டது என்பது குறித்துப் பல கருத்துகள் இருக்கின்றன. பெரோ கெப்ரான் இதற்கு சிங்கத்தின் உடலையும், தம் சாயலை ஒத்த மனித முகத்தையும், பெரோக்களுக்கே உரிய தாடியையும், சின்னங்களையும் தந்தவர் என்பது, சில ஆய்வாளர்களின் கணிப்பு. கெப்ரானின் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் கழித்து ஆட்சி செய்த துட்மோஸிஸ் (Tutumosis) என்பவரின் கனவில் ஸ்ஃபிங்ஸ் தோன்றி, ''நான் மண்ணில் புதைந்திருக்கிறேன், என்னை வெளிக் கொணர்ந்தால் உன்னை அரசனாக்குவேன்'' என்று கூற, அதன்படி இன்றைக்கு நாம் காணும் ஸ்ஃபிங்ஸைத் தோண்டியெடுத்து, அவரும் பெரோ ஆனார் - என்றார் பாப்.

ஆதிநாட்களில் காக்கும் கடவுளாக வழிபடப்பட்ட ஸ்ஃபிங்ஸுக்கு, அந்தப் பெயரைத் தந்தது கிரேக்கர்கள். கிரேக்க மொழியில் ஸ்ஃபிங்ஸ் என்பது சிங்க உடலும் பெண் தலையும் கொண்ட ஒரு கற்பனை பெண்தெய்வத்தைக் குறிக்கும். அந்த ஸ்ஃபிங்ஸ் எல்லோரிடமும் ஒரு புதிரைக் கேட்டு, சரியான பதில் கூறாதவர்களை சாப்பிட்டு வந்த பழக்கம், ஒடிபஸ் (Oedipus) அதற்குச் சரியான விடை கூறிய பின்னர்தான் நின்றதாம்! இன்று நாம் காணும் ஸ்ஃபிங்ஸின் மூக்கு உடைந்திருப்பதற்குக்கூடப் பல காரணங்களைச் (கட்டுக்கதைகளை?) சொல்கிறார்கள். மாம்லுக் அரசர்களும், நெப்போலியனின் படையினரும் ஸ்ஃபிங்ஸின் மூக்கைக் குறியாக வைத்து, துப்பாக்கிச் சுடுதல் பழகியதனால்தான் அது உடைந்து போனது என்பது ஒரு கர்ணபரம்பரைக் காரணம்.

கிரேக்கர்கள், 'இது கடவுள் இல்லை, வெறும் சிலை. அந்த மூடநம்பிக்கையைத் துடைத்தெறிய இதை உடைப்பதுதான்


வழி' என்று அழிக்கத் துவங்கியபோது மூக்கு உடைந்தது என்பது, இரண்டாவது காரணம். ஆனால் இவை எதுவுமே சரியான விளக்கங்கள் அல்ல என்பது ஆய்வாளர்களின் கருத்து. நைல் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் சமயங்களில், வேகமாய் அடித்துவரப்பட்ட வண்டல் மண்ணால், காலப்போக்கில் நீட்டிக் கொண்டு நின்ற மூக்கு உடைபட்டிருக்கலாம் என்பது இவர்களின் கருத்து! ஸ்ஃபிங்ஸ் தலை, வால் பகுதிகளிலிருந்து செல்லும் சுரங்கப் பாதைகள், இன்றுவரை யாரால் கட்டப்பட்டன, எங்கு சென்று முடிகின்றன என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

கிஸா பிரமிடுகள், ஸ்ஃபிங்ஸைப் பார்த்துவிட்டு, சற்றுத் தொலைவில் ஸுவனீர்கள் விற்கும் கடைகள் நிறைந்த பாலைவன மேடுக்குச் சென்றோம். இங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று கையை நீட்டி, பிரமிட் நம் கையில் தொங்குகிற மாதிரி, அல்லது உள்ளங்கையில் பிரமிட்டைத் தாங்கி நிற்கிற மாதிரி தந்திரப்படங்களை எடுப்பது சாத்தியமாகிறது.

முதல்நாள் பிரமிட்டில் துவங்கி, கடைசி நாள் வரை எகிப்தில் நாங்கள் தங்கிய எல்லா தினங்களிலும், ஒருமுறை அல்ல, நூறு முறைகள் தப்பாமல் கிட்டிய அனுபவம் என்னவென்றால் - இந்தி நடிகர் அமிதாப்பச்சன் புராணத்தைக் கேட்டதுதான்! எந்தச் சாலையில் நடந்தாலும், கடையுள் நுழைந்தாலும், சின்னக் குழந்தையில் துவங்கி பெரியவர் வரை, முதலில் நம்மைப் பார்த்ததும் 'இந்தியரா?' என்று கேட்கிறார்கள். அப்புறம், 'அமிதாப் பச்சன் தெரியுமா?' என்று நச்சரிக்கிறார்கள். அமிதாப் நடித்த பழைய படங்களின் பெயர்களைச் சொல்லி, 'ஆஹா, அவர் எப்படி நடிக்கிறார்! என்னமாய் சுழன்று சுழன்று சண்டை போடுகிறார்!' என்று வாய் மூடாமல் புகழ்கிறார்கள். அந்த அளவுக்கு 'அமிதாப் பைத்தியம்' அங்கு பரவியுள்ளது. அமிதாப் எகிப்தில் ரசிகர் மன்றம் துவங்கினால், லட்சக்கணக்கானவர் அங்கத்தினர் ஆவதும், தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டுத் தேர்தலில் நின்றால், ஜனாதிபதி ஆவதும் சர்வநிச்சயம்!

இருபது வயதுப் புயல்!

இன்றைய டாப் மாடல் ரேச்சல்! இருபது வயது அழகுப் புயல்! "எனக்கு சின்ன வயசுலேர்ந்தே நல்லா ட்ரஸ் பண்ணிக்கறதுக்கு பிடிக்கும். கண்ணாடி முன்னால மணிக்கணக்கா நிப்பேன். ஃபாஷன் டீவி மாத்திரம்தான் பார்ப்பேன்..."



"நான் ஆங்கிலோ இந்தியப் பெண். பிறந்து வளர்ந்ததெல்லாம் பெங்களூரில். அம்மா டீச்சரா இருக்காங்க. ஒரு தம்பி. நான் இப்ப கரஸில் டிகிரி படிச்சுக்கிட்டிருக்கேன். மாடலிங்கில் படுபிஸி. அதான்... தில்லி, மும்பை, சென்னை... என பறந்து கொண்டிருக்கேன்..." என்கிறார்.

"இந்தத் துறை ரொம்பக் கஷ்டமானதுதான். கடுமையான உழைப்பு, தோல்வியைக் கண்டு துவளாத மனசு, தன்னம்பிக்கை எல்லாம் வேணும். கண்ட மாடல் கோ-ஆர்டினேட்டர்களிடம் மாட்டிக்கக் கூடாது.

ரேச்சலின் ஒரே குறிக்கோள், சர்வதேச மாடலாவதுதானாம்! வாழ்த்துக்கள்!

- லதா

அமிதாப்புக்கு அடுத்தபடி, அங்குள்ளவர்கள் விரும்பிக் கேட்பது நாங்கள் அணிந்திருந்த நெற்றிப் பொட்டுக்களை! கைப்பையிலிருந்த அட்டையிலிருந்த பொட்டுக்களை வினியோகம் செய்தும் போதாமல், பிரியாவும் நானும், எங்கள் நெற்றிப்பொட்டுக்களைக்கூட 'தானம்' செய்யும் அளவுக்கு அவர்கள் 'பொட்டு' ஆசை இருக்கிறது! இங்கிருந்து டூரிஸ்டுகளாக எகிப்துக்குச் செல்பவர்கள், கையோடு அமிதாப்பச்சன் புகைப்படங்கள், பொட்டு அட்டைகள், மலிவான பால்பாயிண்ட் பேனாக்கள் எடுத்துக் கொண்டு போக, நான் பலமாய் சிபாரிசு செய்கிறேன். இவற்றை ஆங்காங்கு வினியோகிப்பதன் மூலம் நிறைய விஷயங்களை அவர்கள் சுலபமாய் சாதித்துக் கொள்ளலாம் என்பதில் சந்தேகமே இல்லை! (தொடரும்)

தலைமுடி, தாடி இரண்டையும் ஒட்ட வெட்டி, பிரௌன் நிற 'டை' அடித்திருக்கிறார். "படத்துக்காக பதினைந்து கிலோ எடையைக் குறைத்திருக்கிறேன். தொப்பை இருக்கா பாருங்க?" சிரிக்கிறார். வழக்கமான அடுக்கு மொழி வசனங்கள், உணர்ச்சி வசப்படல் இரண்டுமில்லாமல் படக் படக்கென்று பதில் வருகிறது. 'வீராசாமி'-யாக புதிய அவதாரம் எடுத்திருக்கும் விஜய டி. ராஜேந்தரிடமிருந்து...

சிம்பு, தனுஷ் போன்ற இளவட்டங்களின் பேட்டையாகிவிட்ட தமிழ் சினிமாவில், மீண்டும் ஹீரோவாக எந்த தைரியத்தில் இறங்கியிருக்கிறீர்கள்?



இன்றுவரை இடைவிடாமல் உடற்பயிற்சி செய்கிறேன். இதைவிட மனப்பயிற்சியால் என் மனத்தை இளமையாக வைத்திருக்கிறேன். தனி மனித ஒழுக்கத்தோடு வாழ்கிறேன். ஆகவே மனதும் உடலும் இளமையாக இருக்கின்றன. பங்கவாலிட்டி உண்டு. என் மகன் காலத்தில் மட்டுமல்ல, பேரன் காலத்திலும் என்னால் ஹீரோவாக ஜெயிக்க முடியும். இது அகம்பாவம் அல்ல. தன்னம்பிக்கை.

இனி, நானே தமிழினத் தலைவர்!

சினிமாவில் சரி, பூங்காநகர் சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் ஜெயிக்க முடியவில்லை. அரசியலில் உங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறீர்களா?

ஒரு விழுக்காடுகூட ஒப்புக் கொள்ள மாட்டேன். பூங்காநகர் சட்டமன்ற உறுப்பினராக ஓடி ஓடி உழைத்தேன். தொகுதி மக்களைப் போய்க் கேட்டுப் பாருங்கள், எனது பணியாற்றும் தகுதி குறித்துச் சொல்லுவார்கள். வெறும் ஆயிரத்துச் சில்லறை வாக்குகளில் வெற்றி வாய்ப்பை இழந்தேன். அதற்குக் காரணம் நான் சார்ந்திருந்த தி.மு.க.வின் உட்கட்சிப் பூசல்தான்.

நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் ஜெயிக்கும் என்று தெரிந்தும் தி.மு.க.விலிருந்து நீங்கள் வெளியே வந்தது, அ.தி.மு.கவிலிருந்து அழைப்பு வரும் என்ற கணிப்பில்தானே?

அப்படி அழைப்பு வரும் என்று எதிர்பார்த்திருந்தால், வெளியேறிய மாலையே நான் ஏன் லட்சிய தி.மு.கவைத் தொடங்க வேண்டும்?

உங்கள் கட்சியில் உங்கள் மகன் சிலம்பரசனே சேரவில்லையே?

எனது அரசியல் களம் வேறு! அவனது திரையுலகக் களம் வேறு. கலைஞரின் மகன் மு.க. முத்து ஏன் அ.தி.மு.க.வில் இருக்கிறார்? எல்லா குடும்பங்களிலும் கொள்கை என்பது அப்பாவுக்கும் பிள்ளைக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் புகை பிடிக்கிற மாதிரிகூட நடிக்க மாட்டேன். அவன் 'தம்' என்ற படத்தில் தம்மடித்துக் கொண்டே நடிக்கிறான். என் மகனை மட்டுமல்ல, யாரையுமே நீ என்னைப் போல் இரு என்று சொல்ல மாட்டேன்.

மாயவரம் டி. ராஜேந்தர் என்ற பெயரை வைத்துக் கொண்டுதானே சினிமாவில் ஜெயித்தீர்கள்! இப்போது எதற்கு இந்தப் பெயர் மாற்றம்?

ஜோதிடக் கலையில் இருபத்தைந்து வருடமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். மெட்ராஸ் இன்று சென்னையாகிவிட்டதே. கலைஞரது இயற்பெயர் என்ன கருணாநிதியா? இல்லையே.

விஜய டி.ஆர் அதிரடி பேட்டி!

தட்சிணாமூர்த்திதானே, ஏன் அந்தப் பெயர் மாற்றப்பட்டது?

மாற்றம் நிகழ வேண்டும் என்று இருந்தால் நிகழ்ந்தே தீரும். ஜாதக ரீதியாக எனக்குத் திறந்திருக்கிறது ஒரு புதிய திசை. அது எனது தசை. அடுத்த பத்தாண்டுகளில் விஜய டி.ராஜேந்திர சோழனுக்கு அரசியலில் கிடைக்கப் போகிறது, அசைக்க முடியாத ஓர் இடம்.

உங்கள் பார்வையில் உண்மையான தமிழினத் தலைவர் யார்?

தமிழின் பெயரையும், தமிழினத்தின் பெயரையும் சொல்லி, மக்களை ஏமாற்றுகிறவர்களின் பின்னால் இனி நான் போகத் தயாராக இல்லை. தமிழினத்தை வழி நடத்திச் செல்லத்தக்க தலைவனாக நானே உருவாக விரும்புகிறேன். இதற்குத் தகுதியானவனாக என்னை நான் பக்குவப்படுத்திக் கொள்ளப் போகிறேன். தமிழ்மொழியைத் துதிக்க வேண்டும். மற்ற மொழிகளையும் மதிக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

பெண்களைத் தொடாமல் நடிக்கிறீர்கள்! ஆனால் உங்கள் படங்களில பெண்களைக் கவர்ச்சியாகக் காட்டுகிறீர்களே?

'ஒரு தலைராக'த்தில் தொடங்கி எனது படங்களில் கதாநாயகியின் கணுக்கால்கூடத் தெரியாமல் படமெடுத்தேன். இன்று இதுபோல் படமெடுத்தால் முடியாதோ என்ற மாயை ஏற்பட்டு விட்டது, பிரியாணி விற்கிற முனியாண்டி விலாஸ் ஹோட்டல்கள் நிறைந்த ஊரில், நான் கந்தவிலாஸ் என்று நெய்ப் பொங்கல் போட்டால் சாப்பிட மறுக்கிறார்கள். அதற்காக நான் ஆபாசமாக எடுப்பதில்லை. கொஞ்சம் கிளாமர் கலந்து எடுக்கிறேன். இது குறைபாடு என்று சொன்னால், அந்தக் குறைபாட்டைச் செய்யக் கூடியவனாக இருக்கிறேன் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரம் பெண்ணின் அங்கத்தை மட்டும் பார்க்காதே. அதைத்தாண்டி அவள் ஆழ் மனத்தையும் பார் என்பதை ஆபாசம் இல்லாமல் சொல்கிறேன். இது பார்க்கக்கூடிய கண்களைப் பொறுத்தே இருக்கிறது.

'வீராசாமி' படம் பற்றி...

காதல், பாசம், வீரம் மூன்றும் கலந்த கரம் மசாலா. எனக்கு காட்ஃபாதர் வேஷம். ஆனால் ஒரு கம்யூனிச சித்தாந்தவாதி. காதலை மட்டுமல்ல, ஏழைகளையும், கொள்கைகளையும், தர்மத்தையும் காவல் காப்பது எனது பாத்திரத்தின் குணம். 'காதல் இவனுக்கு தெய்வம்! அந்த காதலுக்கு இவனே காவல் தெய்வம்.' இதுதான் வீராசாமி படத்தின் கேப்ஷன். இதுவே படத்தின் கதையை உங்களுக்குச் சொல்லிவிடும்.

- ஜெயந்தன்

படம்: **ஸ்ரீஹரி**





தொடங்கி விட்டது ஒலிம்பிக்ஸ்!

"ஐய்ய, 'முடிந்துவிட்டது' என்றல்லவோ தலைப்பு இருந்திருக்க வேண்டும்" என்பவர்களுக்கு ஒரு சின்ன விளக்கம். இது கொஞ்சம் மாறுபட்ட ஒலிம்பிக்ஸ். பாராலிம்பிக்ஸ்.

உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படுவது.

ஒலிம்பிக்ஸ் நடந்து முடிந்தவுடன் அதே இடத்தில், இந்த பாராலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெறும். கடந்த பதினேழாம் தேதி துவங்கிவிட்டது. வரும் இருபத்தியெட்டாம் தேதிவரையில் ஏதென்ஸில் நடக்கவிருக்கும் இந்தப் போட்டிகளில், 145 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். பத்திரிகை உலகிலிருந்து மூவாயிரம் பேரும், நடுவர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் என்று ஆயிரம் பேரும், இதற்காக ஏதென்ஸில் குழுமியிருக்கிறார்கள். விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்கும் பலருக்கும் உதவியாளர்கள் தேவைப்படுவார்கள் என்பதால், இந்த வகையிலும் இரண்டாயிரம் பேர் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.


இப்படி ஒரு யோசனை முதலில் வடிவம் பெற்றது 1948ல். லண்டனில் அந்த ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் தொடங்கிய நாளில், அதே நேரத்தில் பிரிட்டனில் வேறு ஒரு இடத்தில் (ஸ்டோக் மண்டேவினிலே) சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு காலிழந்தவர்கள் வேகமாகச் செல்லும் போட்டியில் கலந்து கொண்டார்கள். நான்கு வருடங்களுக்குப் பிறகு ஹாலந்தில் இதே போன்று போட்டி ஒன்று நடத்தப்பட்ட போதுதான் பாராலிம்பிக்ஸ் ஐடியா பிறந்தது.

ஒலிம்பிக்ஸ் ஸ்டைலிலேயே உடல் ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டிகள் முதலில் நடத்தப்பட்டது 1960ல் ரோம் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றபோதுதான். இருபத்திமூன்று நாடுகளைச் சேர்ந்த நாநூறு விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொண்டார்கள். இப்போது ஏதென்ஸில் நடைபெறும் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில், நான்காயிரம் விளையாட்டு வீரர்கள் பங்கேற்கிறார்கள்.

எல்லாப் பிரிவுகளிலும் ஏதோ ஒரு ஊனம் கொண்ட எல்லோரும் கலந்து கொண்டுவிட முடியாது. உதாரணத்துக்கு பாராலிம்பிக் ஜூடோ போட்டிகளில், பார்வை இழந்தவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.

ஒலிம்பிக் விளையாட்டு சாதனைகளையும், பாராலிம்பிக்ஸ் விளையாட்டு முடிவுகளையும் ஒப்பிடவே முடியாது என்றும் அலட்சியமாக எண்ண வேண்டாம். இரண்டுக்குமுள்ள வேறுபாடு அப்படியொன்றும் அதிகமல்ல. நூறு மீட்டரை 8.54 நொடிகளில் கடந்து உலகசாதனை படைத்தார் கனடாவைச் சேர்ந்த டொனோவன் பெய்லி. அதே தூரத்தை ஒரு கையை இழந்த அஜிபோலா அடோயே என்ற நைஜீரிய விளையாட்டு வீரர், 10.72 நொடிகளில் கடந்திருக்கிறார். எடை தூக்கும் போட்டிகளின் நான்கு பிரிவுகளில், ஒலிம்பிக் வெற்றியாளர்களை விட அதிக எடையைத் தூக்கி இருக்கிறார்கள் பாராலிம்பிக் வீரர்கள்!

- ஜி.எஸ்.எஸ்



கிரிக்கெட் கிறுக்குப்புடிச்சு அலையற மக்கள் மத்தியில, டென்னிஸ்னா எனக்குச் சோறு தண்ணி வேண்டாம்னு சொல்ற ஆளா நீங்க... உங்களைக் கூப்பிடுது tennis.com. டென்னிஸ் மேட்ச் ரிசல்ட் எல்லாம் 'லைவ்'வா அப்டேட் ஆகுது. உங்க டென்னிஸ் ஹீரோ - ஹீரோயின்ஸ் பத்தி லேட்டஸ்ட் நியூஸ் ஹாட்டா கிடைக்குது. எங்கெங்க என்னன்ன மேட்ச், எப்ப நடக்குது, டிக்கெட் விவரங்கள், டென்னிஸ் விளையாட டிப்ஸ், ஃபிட்னெஸ் குறிப்புகள் என அசத்துறாங்க. 'டென்னிஸ்'க்காக இவங்க பண்ற 'சர்வீஸ்' சூப்பர்!



போலீஸை ஓட்டும் தளம்!

தமிழ் நாட்டுல ஏற்கெனவே போலீஸ் விவகாரம் ரொம்ப 'ஜெயமா' போயிக்கிட்டு இருக்குது. இதுல போலீஸை மையமா வைச்சு, அவங்களைக் கிண்டலடிக்கிற மாதிரி 'கேண்டிட்' ஷாட்களை கடை பரப்பியிருக்கிறது funnysnaps.com தளம். ஆனா எல்லாம் ஃபாரின் போலீஸ்தான். அதுவும் பொதுமக்கள் எடுத்து அனுப்புற ஸ்டில்களைத்தான் வைச்சிருக்காங்க.

(ஆஹா... இப்படியொரு தளத்தை தமிழக போலீஸை வைச்சு தொடங்கலாமேன்னு யாருக்காவது 'ஐடியா' தோணிச்சுன்னா, 'ப்ரௌசர்' பொறுப்பல்ல!)



தஞ்சாவூர் ஓவியங்கள் பற்றி தனியா சொல்லணும்னு அவசியமில்ல. ஆனா அவற்றை 'தளம்' வழியா ஆன்லைன்ல வாங்கிறதுக்கு தகவல் வேணுமா? indiamart.com/tanjorepainting போங்க. அழகழகாக அசத்துற ஓவியங்களை ரசிங்க... வேணும்னா 'சில' 'பல' க்ளிக் செய்து, ஆர்டர் பண்ணிக்கோங்க. உங்கள் வரவேற்பறையில மாட்ட, ஓவியங்கள் வாசக் கதவை வந்து தட்டும்.

ஜாலி sms

கடவுள் உலகைப் படைத்தார்.
மரங்களை, மலைகளைப்
படைத்தார்
உன்னையும் படைத்தார்.
புரிந்து கொண்டேன்
கடவுளுக்கும் அடி சறுக்கும்!

- ப்ரௌசர்



ஒரு துளி நெருப்பாய்
அகலின்
தலையில் இருந்த
காதல்
விழுந்து தொலைத்தது
கானகப் புதரில்.

இப்போது
கொழுந்து விட்டெரிவதும்
சுடராய் ஒளிர்ந்ததும்
ஒரே நெருப்பென்றால்
ஒத்துக் கொள்ள
மறுக்கிறாய் நீ.

திரியில் எரிந்த
அளவைக் கேட்கிறாய்
மீண்டும்.

எப்படி இனிமேல்
அத்தனைத் தீயையும்
சின்னத் துளிக்குள்
இறுக்கித் திணிப்பேன்
நான்?

இயலுமா என்னால்?

–சேவியர்

ஆறாவது புலன்

-சாமிநாத மூர்த்தி

ஐம்புலன்களின் ஆட்சி
தேய்மானம் அடைந்த
அந்திமக் காலம்.

எண்பது வயது அம்மாவுக்கு
யாவும் தடுமாற்றம்.

சொன்னது நினைவில்லை;
தெளிவாய்க் கேட்பதில்லை;
பார்வை முழுமையில்லை;
பசியில் நாட்டமில்லை!


சதையற்ற உடம்பில்
எஞ்சிய எலும்புகளில்
உயிரும் உணர்வும்
ஒட்டிக் கொண்டிருக்கின்றன!

எல்லாம் மீறி...
'சந்ததிகளை அழைத்து
முகத்தை வருடும் வாஞ்சையில்...
சாப்பிடச் சொல்லும் சைகையில்...
சோர்ந்து கிடக்கும்
என்னைத் தொட்டு
'சுகமில்லையா..? மருத்துவரிடம் போ'
எனக் காட்டும் பாவனையில்...'
அம்மாவின்
'ஆறாவது புலன்' மட்டும்
தேயாமலேயே
அப்படியே இருக்கிறது!



இராமேஸ்வரத்திலிருந்து தென் திசையில் சுமார் எழுபது கி.மீ. தொலைவில் உள்ளது தேவிப்பட்டினம். அழகிய கடலோர கிராமம். இங்குள்ள நவபாஷாண நவக்கிரக க்ஷேத்திரம் ஏற்கெனவே பலருக்குப் பரிச்சயமானதாக இருந்தாலும், 'மெட்டி ஒலி' மெகா சீரியல் மூலமாக மக்கள் கூட்டத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

அப்படி என்ன சிறப்பு இதற்கு? ஸ்ரீ இராமபிரான் இலங்கைக்குப் புறப்படுமுன் அம்பாளிடம் உத்தரவு கேட்க, அதற்கு அம்பாள், "நீ மனிதாவதாரம் எடுத்துள்ளதால் உன்னை நவக்கிரக தோஷம் பிடித்துள்ளது. அதனைப் போக்க தேவிப்பட்டினம் சென்று, ஸமுத்திர ஸ்நானம் செய்து, கடற்கரையில் மணலால் நவக்கிர லிங்கங்களை பிரதிஷ்டை செய்து, பூஜை செய்து இலங்கைக்குப் புறப்படு" என உத்தரவிட்டாளாம். அவ்வாறே செய்ய இராமபிரான் எத்தனிக்கும் போது, அதற்கு கடலில் பொங்கும் அலைகள் இடையூறாக இருக்கவே, அங்குள்ள ஸ்ரீ ஜெகன்னாத பெருமாள் கடலலைகளை நிறுத்தி இராமபிரானுக்கு உதவ, அதன் பின்னர் அப்பூஜையை இனிதே நிறைவேற்றி, தோஷங்களை நீக்கிக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டதாக புராணம். இதன் காரணமாகவே இப்பெருமாள் பின்னர் ஸ்ரீ கடலடைத்த பெருமாள் என அழைக்கப்பட்டாராம். (ஏன் ராமேஸ்வரம் கடலில் அலை அடிப்பதில்லை என்ற சஸ்பென்ஸ் ரிவீல் ஆயிடுச்சுல்ல!)


• ஜெகன்னாத அய்யங்கார்


தேவிப்பட்டினம்

இராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஆஸ்தான ராஜகுரு, திரு ஜெகன்னாத அய்யங்கார் ஏழு வயதிலிருந்து இங்கு பரிகார பூஜைகளை நடத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்.

"நவக்கிரக தோஷம், கால சர்ப்ப தோஷம், மூத்தோர் சாபம், பிதுர்சாபம் போன்ற பல்வேறு தோஷங்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஏகப்பட்ட இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். குறிப்பாகச் சொல்லணும்னா, சுய திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பமே கிடைக்காது. எல்லா விஷயத்துக்கும் அனாவசிய கால தாமதமாகும் - வியாபாரத்துறையில எதிர்பார்த்தபடி முன்னேறுவது சிரமம். இதற்கெல்லாம் பரிகாரம் பண்ண இங்க வந்து எம்பெருமான் ஸ்ரீ கடலடைத்த பெருமாளை வணங்கணும். அப்புறம் முப்பத்தாறு முழுக்குகள் ஸமுத்திரத்தில் முழுகி, கடலுக்கு நடுவில் இருக்கிற நவபாஷாண நவக்கிரக லிங்கங்களுக்கு பூஜை செய்யணும். அடுத்ததா என் ஹோமம் செய்து, அதில் கிடைக்கும் சாம்பலை அருகிலுள்ள சேதுக்கரை எனும் கடற்கரை நீரில் கரைச்சிடணும். நேரா அருகிலுள்ள திருப்புல்லாணி எனும் ஸ்ரீ ஜெகன்னாத பெருமாள் ஸ்தலத்துக்குப் போய் அர்ச்சனை செய்து, அங்கு விநியோகிக்கப்படும் அவல் பாயசத்தைப் பருகினால், அனைத்துச் சாப, தோஷங்களும் விலகும் என்பது அக்மார்க் உண்மை" என்று புன்னகைக்கிறார் இந்த எண்பத்தி நான்கு வயது கைராசி இளைஞர்.

(இதுல முக்கியமான விஷயம் என்னன்னா, அங்கங்க சில நூறுகளை

“நவக்கிரக தோஷம், கால சர்ப்ப தோஷம், மூத்தோர் சாபம், பிதுர்சாபம் போன்ற பல்வேறு தோஷங்களால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே வந்து பரிகாரம் செய்து கொள்ளலாம்.”





வெட்டியாகணும்.)

பூஜை புனஸ்காரம் எல்லாம் சரிதான். நல்ல படியா போயி பரிகாரம் பண்ணிட்டு வாங்க. அதுக்கு முன்னாடி திரைமறைவில் என்ன நடக்குதுன்னும் தெரிஞ்சுக்கங்க. அதாவது இந்த பூஜையை முறைப்படி வேதம், சாஸ்திரங்கள் பயின்றவர்கள் மட்டும் செய்யறது கிடையாது. நவக்கிரக ஸ்தோத்திரங்களை மனப்பாடம் செய்து கொண்ட உள்ளூர் ஆசாமிகள் பலர் அப்பகுதியில் உலவிக் கொண்டேயிருப்பார்கள். விஷயம் தெரியாமல் அவர்களிடம் சிக்கிக் கொண்டால் போதும். பூஜை என்ற பெயரில் ஒரு சில மந்திரங்களை ஓதி பணத்தைக் கறந்து விடுவார்கள். ‘அத்தகைய ஆசாமிகளிடமிருந்து தப்பித்தாலே பாதி தோஷம் விலகியதற்குச் சமம்’ என அப்பகுதி மக்கள் கிண்டலடிக்கின்றனர். அதுமட்டுமின்றி இந்த நவபாஷாண லிங்கங்கள் அமைந்திருக்கும் பகுதியிலுள்ள தண்ணீர், மிகுந்த அசுத்தமாக உள்ளது. அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் மோசமான கதியில் உள்ளன. இதற்கும் ஏதாவது பரிகார பூஜை செய்து நற்பயன் கிட்டச் செய்வாரா ஸ்ரீ கடலடைத்த பெருமாள்!

கட்டுரை, படங்கள்:

இரா. முத்துக்குமார்

சிம்ரனின் இடத்தை ரீமாசென் பிடித்து விட்டார் என்று ஒரு வழியாக பிரகடனம் செய்து விட்டது கோலிவுட். ஆனால், "நூறு ரீமாக்கள் வந்தாலும் ஒரு சிம்ரனுக்கு ஈடாக முடியாது. அவருக்கு இணையாக நடனமாட இப்போதைக்கு யாருமில்லை" என்று தன்னடக்கத்துடன் தன்னிலை விளக்கம் தருகிறார் 'செல்லமே' வெற்றிக்களிப்பில் திளைத் திருக்கும் ரீமா.



• ரீமாசென்

சிம்ரன் சிம்ரன்தான்!

செல்லமே படத்தின் அறிமுகநாயகன் விசாலின் இயல்பான நடிப்பைப் பார்த்துவிட்டு, முதலில் வந்த பாராட்டு வைரமுத்துவிட மிருந்துதான். அடுத்து கே.பி. "முதல் படத்தி லேயே எல்லா உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கு மென்று கனவிலும் நினைக்க வில்லை" என்று உணர்ச்சி வசப்படுகிறார் விசால்.



'செவ்வேள்'-மீரா

ராம்கோபால் வர்மா இயக்கிய 'பூத்' ஹிந்திப் படத்தை, தமிழில் ரீமேக் செய்து தமிழ் மக்களை பயமுறுத்தினார் தியாகராஜன். 'ஷாக்' வெற்றி கொடுத்த தைரியத்தில் ஹிந்திப் படங்களின் மீது தியாகராஜனுக்கு காதல் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. அமிதாப்பச்சன், அஜய் தேவ்கன், அக்ஷய் குமார், ஐஸ்வர்யா ராய் என்று பெரிய கூட்டணி கலக்கிய 'காக்கி' ஹிந்திப்படத்தை,

இப்போது மகன் பிரசாந்துக்காக 'போலீஸ்' ஆக்கும் பணியில் தீவிரமாக இருக்கிறார். இது இன்னொரு 'சாமி' மாதிரி இருக்காது என்று உத்திரவாதம் தரலாம்!

மிஷா! 'செவ்வேள்' படத்துக்காக ஜெய் ஆகாஷுடன் ஜோடி சேர்ந்திருக்கும் மும்பை மாடல். ஹிந்தியில் வெளிவந்த 'ஃபிரெண்ட்ஸ்' படத்தின் நாயகி. "மீனவ சமுதாயத்திலிருந்து கஷ்டப்பட்டுப் படித்து வழக்கறிஞர் ஆவதுபோல் எனக்கு நடிக்க வாய்ப்புத் தந்திருக்கிறார்கள். நான் கிளாமருக்கு வாய்ப்பில்லையே என்று வாய்விட்டு அழுதேன். அவ்வளவுதான். ஒரு கும்மாங் குத்து பாடலை எனக்காகவே சேர்த்து விட்டார்கள்" என்கிறார் இந்த மிஷா. கலிகாலம்டா சாமி!



• 'அகரம்' படத்தில்



• விசால்



• 'போலிஸ்' பிரசாந்த்

'மௌனம் பேசியதே' படத்தில் 'பேச்சிலர் கண்ணனாக' யுவதிகளின் இதய மேன்ஷன்களில் இடம் பிடித்த நந்தா, அமெரிக்காவுக்கு தமது கம்ப்யூட்டரோடு மூட்டை கட்டி விட்டார் என்று நினைத்தால், அது பொய் என்று வந்து நிற்கிறார். "நல்ல கதைக்காகக் காத்திருந்தேன். அல்வா மாதிரி அமைந்து விட்டது 'அகரம்' என்கிறார். "காதலை தகரம் என்று விமர்சிக்கிற ஒருவன், அதுவே வாழ்க்கைக்கு அகரம் என்று உணர்வது தான் கதை" என்கிறார் பந்தா இல்லாத நந்தா.

- ரவுண்ட்ஸ் பாய்

பெருநோக்கு

மகேந்திரன்

இலக்கியப் பார்வை, எழுத்தாளனுக்கு மட்டும்தான் உண்டு என்று சொல்ல முடியாது. எழுத்தறிவு அல்லது எழுத்துப் பயிற்சியற்றவர்களுக்கும் இலக்கியக் கண் உண்டு. எழுத்தறிவற்ற பலரின் வாழ்க்கைத் தத்துவம் நம்மை பெரிதும் வியக்க வைத்து விடுகிறது.

பாதையோரங்களில் வாழ்பவர்கள், வயல் வெளிகளில் கடும் உழைப்பில் ஈடுபடுபவர்கள், மூட்டை சுமக்கும் பாட்டாளிகள் இவர்கள், வாழ்க்கையை நேர் கொள்ளும் விதமும் மிகுந்த பிரமிப்பைத் தந்துவிடுகிறது. சில நேரங்களில் மின்சாரம், பேருந்து, தடைப்பட்டுப் போனால், வாழ்க்கையே அழிந்து போய் விட்டதாக புலம்பித் தீர்த்து விடும் மத்தியதர வர்க்கத்தைப் பார்க்கும் போது, இந்த உழைப்பாளி மக்கள் மீதான மதிப்பு மிகவும் கூடிவிடுகிறது.


முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, நேர்மையின் வழியே வாழ்க்கையைப் பார்க்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இலக்கிய வாழ்வு கிட்டுகிறது. எத்தகைய கடின வாழ்க்கையையும் ரசனையுடையதாக இவர்கள் மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்.

இலக்கியம் குறித்தவற்றை யோசிக்கும் போதெல்லாம் எனது பாட்டியின் ஞாபகம் எனக்கு தவிர்க்க இயலாமல் வந்து விடுகிறது. பாட்டி என் தந்தையின் மாற்றாந்தாய்.

பாட்டியின் வாழ்க்கை முழுவதும் துயரம் நிரம்பியது. இலங்கையிலுள்ள கண்டிக்கு பிழைப்புக்காகச் சென்றவர்களின் குடும்பம் அவருடையது. தாயும் தந்தையும் திடீரென்று வந்த கொள்ளை நோயில் இறந்து விடவே, ஆறு மாதக் குழந்தையான எனது பாட்டியை, உறவினர்கள் தமிழகத்தின் பூர்வீக கிராமத்திற்கு எடுத்து வருகிறார்கள்.

அறுபது வயதைக் கடந்த என் தாத்தாவுக்கு, பாட்டி மணமுடித்து வைக்கப்படுகிறார். மணமுடித்து மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த பின் தாத்தாவும் இறந்து விடுகிறார். வாழ்நாள் முழுவதும் பாட்டியின் வாழ்க்கை விதவை வாழ்க்கைதான்.

குழந்தைகளை வளர்த்தெடுக்கும் இளம் விதவையின் துயரம் விவரிக்க இயலாதது. இந்த வேதனை மிக்க பின்னணியைக் கொண்ட பாட்டியால், முழு வாழ்க்கையையும் சிரிப்பும், மகிழ்ச்சியுமாக எப்படிக் கழிக்க முடிந்தது என்பதுதான், இப்பொழுதும் என்னை யோசிக்க வைக்கிறது.



பாட்டி ஓர் ஆலமரம் போன்றவர்.

இவருடைய நிழல் அனைவருக்கும் தேவைப்பட்டது. வாழ்க்கை என்பது பிறருக்குப் பயன்படுவதற்கானது என்ற தத்துவத்தை, படிப்பறிவில்லாத இவர் எப்படியோ புரிந்து கொண்டு விட்டார். பிறருக்கு உதவுதல் என்பது, இவர் வாழ்நாள் கடமையாகிப் போனது. இந்தப் புரிதலால் பாட்டியிடம் தனித்துவமான குண இயல்புகள் அமைந்திருந்தன.

பாட்டியுடன் எனது குழந்தைப் பருவ நினைவுகள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நூறு வயதைத் தொட்டுக் கொண்டிருந்த பாட்டி இறக்கப் போவதாக தகவல் கிடைத்தது.



வேதனையான வாழ்க்கைப் பின்னணியைக் கொண்ட பாட்டியால், எப்படி வாழ்நாள் முழுதும் சிரிப்பும், மகிழ்ச்சியுமாகக் கழிக்க முடிந்தது, என்பது என்னை இப்போதும் யோசிக்க வைக்கிறது.

இடையில் பல ஆண்டுகள் பாட்டியை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு இல்லாமல் போயிற்று. இறுதியில் உயிருடன் பார்த்து விடுவது என்ற உறுதியோடு புறப்பட்டேன். காய்ந்து உலர்ந்து, உதிர்ந்த சருகுகளை பாட்டியின் நிலை நினைவுபடுத்தியது. ஒரு வாரமாக கோமா நிலையில் இருப்பதாகக் கூறினார்கள். அருகில் இருந்த ஒருவர் பாட்டியின் காதருகில் சென்று என் பெயரைச் சொல்லி, "உன் பேரன் வந்துள்ளதைப் பார்" என்றார். சருகாகிப் போன அந்த உடலில் ஏற்பட்ட சிலிர்ப்பு, ஒரு நொடி என்னைக் கலங்க வைத்தது. உடல் துடித்தது. உதடுகள் துடித்தன. பாட்டியின் கண்களில் கண்ணீர் வழிந்தது. நான் வாய்விட்டே அழுதுவிட்டேன். சுற்றியிருந்த அம்மா, தம்பி, சகோதரிகள், அத்தை, அத்தையின் பிள்ளைகள் அனைவருக்கும், கண்களில் கண்ணீர் ததும்பி நின்றனர்.

இலக்கிய மேன்மைகள் எதையும் கற்றறியாத என் பாட்டியின் எளிய வாழ்க்கையில் இணைந்திருந்த சுயநலமற்ற அன்பு, என்னைத் திகைக்க வைக்கிறது. பாட்டியின் உலகம், தன் குடும்பம், ஊர் என்ற எல்லையைத் தாண்டியதில்லை. அந்த உலகில் யாருக்கும் பாகுபாடு கிடையாது. ஆனால் நான் அவளின் வாரிசு - வாழ்வின் தொடர்ச்சி என்பது, அவளின் நம்பிக்கை. மரணத்தின் இருப்பில், தனது வாழ்வின் தொடர்ச்சி குறித்த சத்திய வெளிப்பாடுகள்தான், அவளது கண்ணீர் துளிகள். இதுபோல் எழுதப்படாத இலக்கியங்கள் வீடுதோறும் உண்டு. ○

உங்கள் நண்பர்

பாலுசத்யா

அன்றிரவு நான் தூங்கும்போது ஒரு மணி. அபூர்வமாக ஒரு நல்ல சினிமாவை தொலைக்காட்சியில் ப:ார்த்துவிட்டு, நானும் மேகலாவும் உறங்கத் துவங்கியிருந்தோம். 'தடதட'வென கதவை இடிக்கிற மாதிரி யாரோ தட்டிய சத்தத்தில், நான் அலறி அடித்துக் கொண்டு எழுந்தேன். என் அரவத்தில் எழுந்து கொண்ட மேகலா, "போய் யாருன்னு பாருங்க" என்றாள்.

பக்கத்து வீட்டு லட்சுமி வாசலில் நின்றிருந்தாள். கூடவே, வீட்டுக்கார அம்மாள், அவர் கணவர், கடைசி வீட்டு ரேவதி, ராகவன், மேல் போர்ஷனில் குடியிருப்பவர்கள் என்று ஒரு கூட்டமே நின்றிருந்தது.

"அண்ணா! அவரை போலீஸ்காரங்க புடிச்சிட்டுப் போய்ட்டாங்கண்ணா" வெடித்து வருகிற அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு லட்சுமி சொன்னாள்.

சென்னைப் புறநகர்ப்பகுதியில் இருந்தாலும், கொஞ்சம் பாமரத்தனம் கலந்த மனிதர்கள் மத்தியில் நான் வசித்து வந்தேன். லட்சுமியின் கணவன் செல்வராஜ் ஒரு வேன் டிரைவர். ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஒரு பழைய பாடாவதி வேனை, அநியாய விலை கொடுத்து வாங்கியிருந்தான். மாதாமாதம் சேட்டுக்கு தவணை கட்ட முடியாமல் முழி பிதுங்கிப் போயிருந்தான். வீட்டு உரிமையாளருக்கு ஆடு வியாபாரம். மற்றவர்களும் அன்றாடம் உழைத்துப் பிழைக்கிறவர்கள்தாம். ஏதோ கொஞ்சம் படித்துவிட்டு, ஒரு அலுவலகத்தில் குமாஸ்தா வேலை பார்க்கிற குறைந்தபட்ச தகுதியின் அடிப்படையில்தான், இந்த விஷயத்தில் என்னை நாடியிருக்கிறார்கள் என்று பின்பு யூகித்துக் கொண்டேன்.

செல்வராஜின் ஒன்றுவிட்ட அண்ணன் மகன் முருகன். தாய் தந்தையை இழந்தவன். வேன் வாங்கிய பிறகு 'உதவியாயிருக்கட்டுமே!' என்று ஊரிலிருந்து அவனை அழைத்து வந்ததுதான் வினையாகப் போனது செல்வராஜுக்கு. கிளீனராக இருந்த முருகன், கொஞ்சம் கொஞ்சமாக வேன் ஓட்டவும் கற்றுக் கொண்டு விட்டான். சம்பவம்(!) நடந்த இரவு வழக்கம் போல வேனில் படுத்திருந்த முருகனை, போலீஸ்காரர்கள் வந்து ஏதோ விசாரிக்க, அவன் என்ன சொன்னானோ, செல்வராஜையும் அள்ளிக் கொண்டு போய் விட்டது போலீஸ்.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் கேட்டேன். "எந்த போலீஸ் ஸ்டேஷன்?" லட்சுமி, நாலு கிலோ மீட்டர் தள்ளியிருக்கும் ஒரு போலீஸ் ஸ்டேஷனைச் சொன்னாள். நான் உடை மாற்றிக் கொண்டு, என் பழைய மாடல் டிவிஎஸ். வண்டியில் ஏறினேன். என்னுடன் வருவதற்கு யாராவது ஆர்வமாக இருக்கிறார்களா என்று பார்த்தேன். அந்த முகங்களில் எந்தச் சலனமுமில்லை. நான் மட்டும் கிளம்பினேன். ஒரு பலிகடா மாதிரி உணர்ந்தேன்.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் யாருமில்லை. ஒரு டியூப்லைட் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. உள்ளே தனியாகப் போகப்



பயமாயிருந்தது. அப்போதுதான் எனக்கு ராதாகிருஷ்ணன் சாரின்

நினைவு வந்தது. ராதா அந்தப் பகுதியில் ஒரு வார்டு கவுன்சிலர். சுயேச்சையாகப் போட்டியிட்டு அமோகமாக ஜெயித்தவர். மாதக் கடைசிகளில் என் பணப் பற்றாக்குறைக்கு உதவுகிற பரோபகாரி. வண்டியைத் திருப்பினேன்.

ராதா அந்த நேரத்தில் என்னை எதிர்பார்க்கவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது. அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். முகம் கழுவி, உடைமாற்றி நிமிஷத்தில் கிளம்பி விட்டார். வரும் வழியில், "ஆளு எப்படி? தப்புத் தண்டாவுக்குப் போவானா?'' என்று கேட்டார்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

"சே...ச்சே...! பாவம்! நல்ல டைப்பு."

இப்போது ராதாவுடன் ஸ்டேஷனுக்குள் நுழையும் போது பயமில்லை என்றாலும், பதற்றமாக இருந்தது. உள்ளே ஒரு போலீஸ்காரர் அந்த நேரத்தில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். மற்றொரு போலீஸ்காரர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். லாக்கப்பில் ஒருவன் சுருண்டு படுத்திருந்தான். ஒரு மூலையில் மண்ணைக் கொட்டி, அதன்மேல் தண்ணீர்ப் பானை வைத்திருந்தது. ஒரு பெஞ்சுக்குக் கீழே ஜட்டியுடன் ஒருவன் படுத்திருந்தான். தரையில் செல்வராஜும், முருகனும் சட்டையில்லாமல் குத்தவைத்து உட்கார்ந்திருந்தார்கள்.

எழுதிக் கொண்டிருந்த போலீஸ்காரருக்கு ராதா 'விஷ்' பண்ண, அவர் தலையசைத்து சிநேகமாகச் சிரித்தார்.

"என்னண்ணே! இந்த நேரத்துல..."

"ஒண்ணுமில்ல. சார் நம்ம ஃபிரெண்டு... இவரு பக்கத்து வீட்டுக்காரப் பையன் செல்வராஜுன்னு... இந்த



ஸ்டேஷனுக்குத்தான் கூட்டிட்டு வந்த தாகச் சொன்னாங்க..."

"யாரு... அந்தப் பையனா...? இங்க வாங்கப்பா..."

செல்வராஜூம் முருகனும் அருகே ஓடி வந்தார்கள். செல்வராஜின் கண்களில் மிரட்சி தெரிந்தது.

"யாருப்பா உங்களக் கூட்டிகினு வந்தது? மகேந்திரன் எஸ்.ஐ.-யா?"

"ஆமா சார்."

"அவரு இப்பதான் போனாரு. காலைல வரீங்களாண்ணே! நான் சொல்லி வைக்கிறேன்."

ராதா என்னைத் திரும்பிப் பார்த்தார். பின் போலீஸ்காரரைப் பார்த்து,

"அண்ணாச்சி! அய்யாகிட்ட சொல்லுங்க, ராதா வந்துட்டுப் போனேன்னு. நம்ம பசங்க. கையகிய்ய வச்சுராதீங்க. நான் காலைல வரேன்."

ராதா திரும்பி நடந்தார். செல்வராஜ் என்னை பரிதாபமாகப் பார்த்தான். நான் அவனைப் பார்த்து தலையசைத்துவிட்டு வெளியே வந்தேன்.

ராதா காலையில் வருவதாக சொல்லிவிட்டு, ஒரு ஆட்டோவில் ஏறிப் போனார். நான் என் வண்டியை ஸ்டாண்ட் எடுக்கும்போது, உள்ளே பேப்பர் படித்துக் கொண்டிருந்த போலீஸ்காரர் வேகமாக வெளியே வந்தார்.

"நீங்கதானே... அந்த டிரைவர் கேஸுக்கு வந்தவரு..."

"ஆமா சார்..."

"நைட்டு ஸ்டேஷன்ல எல்லாரும் டீ சாப்டோம். நாப்பத்தொம்போது ரூவா ஆச்சு."

ஒரு ஐம்பது ரூபாயை எடுத்து நீட்டினேன். வாங்கிக் கொண்டார்.

"காலைல சீக்கிரம் வந்துருங்க. எஸ்.ஐ. ரவுண்ட்ஸ் போய்ட்டாருன்னா பாக்க முடியாது."

காம்பவுண்டிலுள்ள மொத்த மனிதர்களும் வெளியே குழுமியிருந்தார்கள்.

"என்னப்பா ஆச்சு?" வீட்டுக்காரம்மாள் கேட்டார். சொன்னேன். யாருக்கும் தூங்க வேண்டும் என்று தோன்றவில்லை. விடிய விடிய வெளியே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அத்தனையும் போலீஸ் கதைகள்.

> "என்னது! உனக்கு குறைந்த பட்சம் இன்னும் நாலு கண் வேணுமா! எதுக்கு?"
> "மெகா தொடர் பார்த்து ஆசை தீர அழத்தான், இறைவா!"
> - உ. ராஜாஜி

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் எனக்கு முன்பாக ராதா காத்திருந்தார்.

"நைட்டெல்லாம் தூங்கல போலிருக்கு" என்று சொல்லி விட்டு பளீரென சிரித்தார். இருவரும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தோம். அந்த சப்-இன்ஸ்பெக்டர் பெரிய மீசையுடன் கரடுமுரடாகத் தெரிந்தார். ராதாவை உட்காரச் சொன்னார். அவர் அமர, நான் பவ்யமாக நின்று கொண்டிருந்தேன். ராதாவிடம் பேச ஆரம்பித்தார்.

"இந்த மாதிரி கேஸுங்களுக்கெல்லாம் நீங்க வரவே கூடாது சார்! திருட்டுக் கேஸு... என்னாலயே ஒண்ணும் பண்ண முடியாது. வண்டி ஓனரு நல்லவன் சார்... அந்தப் பையன் இருக்கான் பாருங்க, டேஞ்சரஸ் ஃபெலோ. இவனை நம்பி வண்டிய ஸ்டாண்டுல விட்டுட்டு அவன் போயிர்றான். இவனுக்கு என்னடான்னா, ராத்திரி ரெண்டு மணிக்கு வேண்டாத சகவாசம். இப்போ திருட்டு ஜாஸ்தியாயிடுச்சு சார். வண்டிய எடுத்துட்டுப் போயி, ஆளில்லாத வூடுங்கள்ல கெடைக்கறத அள்ளிட்டு வந்துர்றானுங்க. டேய்! இங்க வாடா!"

முருகன் ஓடி வந்து கைகட்டி நின்றான்.

"முந்தா நாளு... ராத்திரி எங்க சவாரி போனே?"

முருகன் என்னையும் ராதாவையும் பார்த்தான்.

"சொல்றா..."

"மண்ணிவாக்கத்துல வீடு காலிபண்ணணும்னு ரெண்டு பேரு கூப்டாங்க சார்."

"எத்தனை மணிக்கு?"

"ரெண்டு மணிக்கு. அங்கே போனதும் இன்னிக்கி வேணாம். இன்னொரு நாளு பாத்துக்கலாம்னாங்க... திரும்பிட்டோம்."

"இதை உங்க ஓனர்ட்ட



சொன்னியா?"

"இல்ல சார்!"

"பாருங்க சார். இவன் லேசுப்பட்ட ஆளு இல்ல. மொதல்ல எதுவுமே தெரியாதுன்னு சாதிச்சான். ரெண்டு தட்டு தட்டுனதும் ஒத்துக்கிட்டான். இன்னும் என்னென்ன பண்ணிருக்கானோ? டேய்! அன்னிக்கி உன்கூட வந்தவன் பேரு பெருமாளுதானே?"

"தெரியாது சார்..."

"தெரியாதா? இன்னும் கொஞ்ச நேரத்துல தெரியும்னு சொல்லுவ பாரு. போ! போயி உக்காரு. வர்றேன்."

முருகன் தளர்வாய் நடந்து போய் மூலையில் உட்கார்ந்தான். அடிக்கு பயந்தே ஒத்துக் கொண்டிருப்பானோ என்று தோன்றியது.

சப்-இன்ஸ்பெக்டர் என்னென்னமோ பேசினார். இடையில் குறுக்கிடாமல், புன்னகை மாறாமல் ராதா கொண்டிருந்தார். சப்-இன்ஸ்பெக்டர் இரண்டு கட்டு காகிதங்களைக் கொடுத்து ஜெராக்ஸ் எடுத்து வரும்படி சொன்னார். ராதா சார் கண்காட்ட வெளியேறினேன். ஜெராக்ஸுக்கே இருநூறு ரூபாய் ஆனது. ஸ்டேஷனுக்குத் திரும்பிய போது ராதா வெளியே நின்றிருந்தார். என்னிடம், 'மாதக் கடைசிகளில் போலீஸ்காரர்கள் பணம் வசூல் பண்ண, இது ஒரு வழி' என்று சொன்னார். 'இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் செல்வராஜ், முருகன் இரண்டு பேரையுமே வெளியே விட்டு விடுவார்கள்' என்று சொன்னார். எனக்கு ஆத்திரமாக வந்தது.

"பேசாம ஒரு நல்ல வக்கீலாப் பாத்து கூட்டிட்டு வருவோம். என்ன நடக்குதுன்னு பாக்கலாம். ஜாமீன்ல கூடவா விடமாட்டாங்க?"

"விட்டுருவாங்க. ஆனா நீங்க ஒன்னைப் புரிஞ்சிக்கணும் கோபால். செல்வராஜும் முருகனும் டிரைவர்கள். ரோட்ல நிக்கிறவங்க. ஏதாவது சாக்கு வெச்சு அடிக்கடி ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு வருவாங்க. அடிக்கடி குடைச்சல் குடுப்பாங்க."

அவர் சொல்லிக்கொண்டிருந்த போதே "என்னா சார். பேசி முடிச்சிட்டீங்களா? அய்யா பாத்துட்டு வரச் சொன்னாரு" என்றபடி ஒரு போலீஸ்காரர் அருகில் வந்து நின்றார். ராதா ஜாடை காட்டினார். நான் இரண்டாயிரம் ரூபாயை எடுத்து ராதாவிடம் நீட்ட, அவர் போலீஸ்காரரிடமே கொடுக்கச் சொன்னார். போலீஸ்காரர் பணத்தை பொறுமையாக எண்ணி வாங்கி பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். சிரித்து தலையாட்டியபடி உள்ளே போனார். சிறிது நேரம் கழித்து அவரே வந்து எங்களை அழைத்தார். சப்-இன்ஸ்பெக்டரின் முகத்தில் கடுமை கொஞ்சம் குறைந்திருந்தது.

"ஏதோ சார்! நீங்க சொல்றீங்கன்னு தான் விடுறேன். இனிமே தப்புத் தண்டாவுக்குப் போகக் கூடாதுன்னு சொல்லி வைங்க. டேய்! ஒழுங்கா இருக்கணும் தெரியும்ல."

முருகன் வேகமாகத் தலையாட்டினான். வெளியே வந்தோம். ராதா விடைபெற்று ஆட்டோ ஏறிப்போனார்.

முருகனை பஸ்ஸில் வரச் சொல்லி விட்டு, நானும் செல்வராஜும் வண்டியில் கிளம்பினோம். சிறிது தூரம் சென்றதும் செல்வராஜ், "மொதல்ல இந்த முருகன் பயல ஊருக்கு அனுப்பி வைக்கணும் சார்" என்றான். அதற்குப் பிறகு நானும் அவனும் வீடு வரும் வரை ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. தெரு முக்கில் திரும்பும்போதே கைக்குழந்தையை இடுப்பில் வைத்தபடி லட்சுமி வாசலில் நின்றிருப்பது தெரிந்தது.

நானும் செல்வராஜும் வீட்டுக்குள் போவதற்கு முன்னால், பாத்ரூமுக்குப் போய் ஆடைகளை நனைத்துவிட்டு, நன்றாகக் குளித்தோம். ○

டபுள் கொண்டாட்டம்!



உங்கள் மனங்கவர் 'கல்கி' தீபாவளி மலரை இலவசமாகப் பெற இனிய வாய்ப்பு!

'கல்கி'க்கு ஒன்றரை ஆண்டு சந்தா ரூ.495/- கட்டுங்க.

ரூ.80/- பெறுமானமுள்ள 'கல்கி' தீபாவளி மலர் அன்பளிப்பாகப் பெறுங்க.

இந்த அறிவிப்புக்குப் பிறகு வரும், அல்லது நீட்டிக்கப்படும் முதல் 500 சந்தாக்களுக்கு மட்டுமே இந்த அரிய சலுகை!

முந்துங்க! முந்துங்க!

கடைசித் தேதி: 30.10.04

சந்தாத் தொகையை டி.டி/எம்.ஓ/ காசோலை மூலம் 'கல்கி' என்ற பெயருக்கு அனுப்ப வேண்டும். வெளியூர் காசோலைகளுக்கு ரூ.30/- சேர்த்து அனுப்ப வேண்டும்.

56

கல்கி தீபாவளி மலர்-2004

காசநோய்க்கு கல்தா!

இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒருவர் காச நோயால் இறந்து போகிறார்.

ஒவ்வொரு நொடியும் ஒருவர் டீ.பி தொற்றுக்கு ஆளாகிறார்.

எச்.ஐ.வியை விடவும் வேகமாகப் பரவுகிறது டீ.பி. தேசிய டீ.பி. கட்டுப்பாட்டுக் கழகம் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் இவை. எய்ட்ஸை விடவும் அதிக உயிர்களைக் காவு கேட்கும் காசநோய்க்கு மருந்து உண்டு. இருந்தும் போலியோ, பெரியம்மை நோய்களைப் போல, டீ.பியை ஏன் ஒழித்துக் கட்ட முடியவில்லை? "விரைவில் அது சாத்தியமாகும்...'' என்கிறார் ஹ்யூமா மருத்துவமனையின் தலைவர், டி.பி. சிறப்பு மருத்துவர், டாக்டர் ஹிஸாமுதின் பாப்பா.



• டாக்டர் ஹிஸாமுதின் பாப்பா


"பெரும்பாலும் ஏழை எளியவர்களையே தாக்குகிறது டீ.பி. இந்நோய் குறித்து எச்சரிக்கை உணர்வோ, அதன் அறிகுறிகளை அறியும் திறனோ அவர்களுக்கு இல்லை. முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வரும்போது நோயாளியைக் காப்பாற்றுவது கடினம். மேலும், நீண்ட காலத்துக்கு மருந்து உட்கொண்டால்தான் டீ.பி. குணமாகும். சிகிச்சையை ஆரம்பித்துச் சில வாரங்களில் முன்னேற்றம் தெரிகிறபோது, நோயாளிகள் மருந்து எடுத்துக் கொள்வதை நிறுத்தி விடுகிறார்கள்! இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள, நோயாளிகளைத் தேடிச் சென்று மருந்துகள் வழங்கும் குறுகிய கால சிகிச்சை முறையை, அரசு ஓர் இயக்கமாகவே அறிமுகப்படுத்தியது. ஆனால் பல காரணங்களால் இந்த தேசிய டீ.பி. ஒழிப்பு இயக்கமும் தோல்வியுற்றது.

''இப்போது ரோட்டரி போன்ற தன்னார்வ நிறுவனங்கள் கைகொடுக்க, அரசு டீ.பி. ஒழிப்பில் முழு மூச்சுடன் இறங்கவிருக்கிறது. ஆரம்பக் கட்டத்திலேயே டீ.பியைக் கண்டறிய உதவும் எக்ஸ்ரே பரிசோதனையை, நாடு தழுவிய இயக்கமாகச் செயல்படுத்தவிருக்கிறது.

"இதிலே முக்கியமான சிறப்பு, இந்த கம்ப்யூட்டரைஸ்ட் எக்ஸ்ரே முறையில் ஃபிலிம் பயன்படுத்தி, அதைக் கழுவி, பிறகு நோய் அறியும் அவசியம் இராது. பட்டனைத் தட்டினால், கம்ப்யூட்டர் திரையில் நோயின் தன்மை என்ன என்று தெரிந்துவிடும். ஆகவே செலவு குறைவு. நேரமும் மிச்சம்.

அக்டோபர் 2 அன்று, சென்னை தென் மேற்கு (சர்வதேச மாவட்டம் 3230) ரோட்டரி சங்கம், இந்த கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட நடமாடும் எக்ஸ்ரே பரிசோதனையை இலவசமாக நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இதற்கென உலகின் லேட்டஸ்ட் பி.ஆர்.500 எக்ஸ்ரே கருவியை இறக்குமதி செய்து வைத்துள்ளோம். தமிழகம் முழுவதும் இம்முறையில் விரைவாக சோதனை நடத்திவிடலாம். அப்புறம் போலியோவை ஒழித்தது போல, டீ.பியையும் விரைவாக, முழுமையாக ஒழிக்க முடியும்" என்கிற டாக்டர் பாப்பா, ஒரு தீவிர ரொடேரியன்.

• கம்ப்யூட்டர் ரேடியோகிராஃபி கருவி



— ஸ்ரீ

முதல் சந்திப்பு





அந்தப் பக்கம் லியாகத் அலி, இந்தப் பக்கம் சௌகத் அலி. நடுவில் வருகிறது அந்த காந்தம். இந்த காந்தம் இழுப்பது மனிதர்களை. டாக்டர் ராஜன் ஓடிப்போய் மாலை போட்டு வரவேற்கிறார். அவர் மகள் குங்குமப் பொட்டு வைக்கிறாள். நம்மவர் ஓரமாக, கை கட்டிக்கொண்டு, வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நிற்கிறார். கூட்டம்... கூட்டம்... அப்படியொரு கூட்டம். காந்தம்தான் அவர்!

அது இழுத்த இழுப்பில், படித்த படிப்பைப் பாதியில் தூக்கி எறிந்துவிட்டு, குடும்பப் பொறுப்பையும், தமையன் தலையில் சுமத்திவிட்டு, ஓடி வந்தவர் இவர். நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இப்போதுதான் நிறைவேறுகிறது. அப்படி இழுத்தவரை காந்தமென்றும் சொல்லலாம், பெயரைத்தான் சொல்ல வேண்டுமென்றால், 'காந்தி' என்றும் சொல்லலாம்.

1921, செப்டெம்பரில் திருச்சியில் நடந்த கூட்டத்தில்தான் முதன் முதலில் அத்தனை நெருக்கத்தில் மகாத்மாவை தரிசிக்கிறார் இவர். கூட்டத்தில் மகாத்மா பேச, சாஸ்திரி மொழி பெயர்க்கிறார். "நாம் எத்தனையோ தீமைகளுக்கு அடிமைகளாய் இருக்கிறோம். நாம் எளிமைக் கோலம் பூண வேண்டும். நாடு அடிமைப் பட்டு வருந்த, நாம் நகை நட்டுக்களைப் போட்டு மினுக்குவது பாவம்... சுய ராஜ்ய நிதிக்கு தியாகம் பண்ணுங்கள்."

யாரும் அசையவில்லை. பார்த்தார் நம்மவர். ஓர் உண்டியலுடன் பெண்கள் கூட்டத்தில் நுழைந்தார். "மாமி, அவரே சொல்லிட்டாரே, இன்னுமா நகை மோகம்? அல்ப கொலுசு, காப்பு, சங்கிலி எல்லாம் நாட்டுக்காகத் தியாகம் பண்ணக் கூடாதா?" - கொஞ்சம் நகைகள் விழுந்தன. ஒரு தங்க மோதிரத்தை எடுத்துக் கொண்டு உரத்த குரலில் சொன்னார், "ஆகா, தங்க மோதிரம். என்ன தாராள மனது இந்தப் பெண்மணிக்கு. மற்றவர்கள் போட்டி போட வேண்டாமா?" - மளமளவென்று குவிந்தன நகைகள்.

அடுத்தது ஆண்கள் பகுதி. "நகைப் பித்தான பெண்களே இத்தனை தியாகம் பண்ண முன் வரும்போது, உங்கள் கதை என்ன? பெண்கள்தாம் தியாகத்தின் திருவுருவங்களா?" என்றார்.

கடுக்கன், மோதிரம், பணம் என்று குவிந்தன மலையாக. அப்படியே கொண்டு மகாத்மாவிடம் சேர்த்தார். மூன்றே வார்த்தைகள் பரிசாகக் கிடைத்தன.

"அச்சா தேச சேவக்!"

போதாதா?

மகாத்மாவைச் சந்தித்த முதல் சந்தர்ப்பத்தில் வாங்கிய விருது! அதன்பிறகு தேச சேவை, தேச நலன் என்று மூழ்கியவர்தான், பிறகு கடைசி வரை எழுந்து கொள்ளவே இல்லை.

சரி, யார் அந்த நம்மவர்? வேறு யார், அமரர் கல்கிதான்.

(ஆதாரம்: சுந்தா எழுதிய 'பொன்னியின் புதல்வர்' வானதி பதிப்பகம்)

- விஷ்வக்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

அன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை காட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த ட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் தவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு ங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் பெற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO'**மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

ாமி ஸ்ரீ அம்பிகானந்தா — நல்லாசியுடன் — A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

10. இந்திர ஜாலம் – சந்திர காந்தம்

மகுட வைரம்



இரவு நன்றாக ஏறிவிட்ட அந்த நேரத்திலும்கூட குணவர்மரின் ரதம் மகாராணி ரேவா தேவியின் மாளிகையை அடைந்ததும், எந்தத் தடையுமின்றி உள்ளே பிரவேசித்தது. கிடைத்த வரவேற்பும் அபரிமிதமாயிருந்தது. மாளிகை வாயிலை அடைந்ததும் குதித்து இறங்கிய குணவர்மரைத் தொடர்ந்து, இரு சீன வணிகர்களும் தந்தப் பேழையைச் சுமந்தபடி பின் தொடர்ந்தனர். மகாராணியின் மெய்க்காவல் யவனப் பெண் வெளியே வந்து குணவர்மரை வரவேற்றாள். வழியில் நின்ற காவலர்களுக்கும், பணிப் பெண்களுக்கும் சிறு சிறு முடிப்புகளை அளித்தபடியே வந்த குணவர்மர், மகாராணி இருந்த அறையில் நுழைந்து வணங்கினார்.

குணவர்மரைக் கண்டதும் மகாராணியின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. “வாருங்கள் குணவர்மரே. வெகு காலமாக நீங்கள் தேடிய அபூர்வமான கல் கிடைத்ததாகச் செய்தி அனுப்பியிருந்தீர்கள். அந்த அபூர்வக் கல்லைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?” என்றவள் சீன வணிகர்கள் இருந்த பக்கம் திரும்பி, “யாரிவர்கள்? புதிதாகத் தெரிகிறதே” என்றாள்.

“ஆம் மகாராணி. இவர் காஞ்சிக்குப் புதிதாக வாணிபம் செய்ய வந்திருக்கிறார். ஈழத்திலிருக்கும் எனது நண்பரொருவரின் அறிமுக ஓலையுடன் இன்றுதான் வந்தார். நான் கூறிய அபூர்வக்கல் இவரிடம் இருக்கிறது. எனவேதான் இவரை அழைத்து வந்தேன்” என்றார் குணவர்மர்.

சீன வணிகர் இருவரும் மகாராணியை வணங்கினர்.


“வணக்கம் மகாராணி. என்னிடம் இருக்கும் அபூர்வக் கல்லைப் பற்றித் தங்களிடம் கூறியிருப்பதாக குணவர்மர் தெரிவித்தார். உடனே தங்களுக்கு அதை அளிக்க வேண்டுமென்று அடிமைகள் ஓடோடியும் வந்தோம் மகாராணி. தாங்கள் உத்தரவிட்டால் இப்போதே அந்தக் கல்லைத் தங்களுக்குக் காட்டுகிறோம்” என்றான் முதலில் நின்ற சீன வணிகன்.

“சரி, அந்தக் கல்லைக் காட்டுங்கள். அதில் என்ன அத்தனை அபூர்வமாக இருக்கிறதென்று பார்க்கிறேன்” என்ற மகாராணி, மஞ்சத்தில் சென்று அமர்ந்தாள்.

சீன வணிகன் தந்தப் பேழையுடன் முன்னால் வந்தான். “மகாராணி, இந்த அறையிலிருக்கும் பந்தங்களையும், சரவிளக்குகளையும் சற்று நேரம் அணைத்துவிட உத்தரவிடுங்கள்”

மகாராணியின் முகத்தில் ஆவல் தெரிந்தது. திரும்பி யவன மங்கையரைப் பார்த்தவள், பார்வையாலேயே உத்தரவிட்டாள்.

அறைக்குள் இருள் சூழ்ந்தது.



விஷ்வக்ஸேனன்

''மகாராணி, உங்கள் கரங்களை முன்னால் நீட்டுங்கள்'' கேட்டுக் கொண்டான் சீன வணிகன்.

மகாராணியின் நீட்டிய கரங்களில் பனித்துளிகளின் குளிர்ச்சியோடு, உருண்டையான வழவழத்த பொருள் ஒன்று வைக்கப்பட்டது. மங்கலான வெண்ணிற ஒளியுடன் வட்ட வடிவமாகத் தெரிந்த அந்தக் கல், மெல்ல உயிர் பெற்றது. மெல்ல மெல்ல ஒளி கூடத் தொடங்கிய அந்தக் கல், அரை நாழிகை நேரத்தில் பளீரென்ற வெண்ணிற ஒளியுடன் ஜொலித்து, அறை முழுவதும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியது. சர விளக்குகளும், பந்தங்களும் சேர்ந்து அளித்ததைவிட, அதிக ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிய அந்தக் கல்லைக் கண்ட மகாராணி பிரமித்தாள்.

மகாராணியின் அறையில் இருள் சூழ்ந்து, பின் திடீரென ஒளி வெள்ளம்

பரவியதைக் கண்ட பணிப் பெண்களும், காவல் மங்கையரும், காவல் வீரர்களும் அந்த அறையின் வாயிலில் நெருக்கியடித்து நின்று அந்த அற்புதத்தைக் கண்டு அதிசயித்தனர். மாளிகையே ஆச்சரியத்தில் ஆழ்ந்து கிடந்தது வெகு நேரம்.

அற்புதங்களை நிகழ்த்திய சித்தர்களின் மெய்ஞான அறிவும், விஞ்ஞான அறிவும் தமிழகத்தில் அன்றும் இன்றும் ஏராளம். அவற்றை உலகுக்கு உதவுமாறு அவர்கள் எழுதி வைத்துச் சென்ற சுவடிகளும் ஏராளம். அவ நம்பிக்கையாலும், புரிந்து கொள்ளவும், பாதுகாக்கவும் தகுதியுள்ளவர்கள் அற்றுப் போய் விட்டதால், அத்தகைய அற்புதங்கள் பல மறைந்து போய்விட்டன, பல அயல்நாடுகளுக்குச் சென்றுவிட்டன.

ஏதோ முழு நிலவைத் தரையிலிறக்கி, மகாராணியின் தந்தக் கைகளில் வைத்து விட்டது போல ஒளி வீசிய அந்தக் கல்லும், அத்தகைய அற்புதங்களில் ஒன்றுதான்.

இருள் சூழ்ந்த கணம் முதல், ஒளி பரவத் தொடங்கிய வரையிலும், அதற்குப் பின்னரும்கூட, மற்றொரு சீன வணிகன் அந்த அறையில் காணப்படவில்லை என்பதை, எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

கரங்களில் ஒளிவீசிய அந்தக் கல்லைக் காண விழிகள் கூசியதால், ஒரு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த மகாராணியின் ஒரு பக்கக் கன்னமும், செவியும் பளிங்குகளாக மின்னின. அறையிலிருந்த சிற்பங்களும், சித்திரங்களும் புதுவிதமாகத் தெரிந்தன.

அந்தக் கல்லை யவன மங்கையிடம் அளித்த மகாராணி, குணவர்மரையும் சீன வணிகனையும் ஏறிட்டாள். அப்பொழுதே பின்னால் வந்து அதிபவ்யமாக சேர்ந்து நின்று கொண்ட மற்றொரு சீனனின் வருகைகூட, எவராலும் கவனிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

குணவர்மர் தமது வலையை விரிக்க ஆரம்பித்தார். "மகாராணி, இதற்கு சந்திர காந்தம் * என்று பெயர். செயற்கை ரத்தின வகைகளில் ஒன்று. சில கடல்மீன்களின் விழிகளும், மூலிகைகளும், முத்துக்கள் சிலவும் குறிப்பிட்ட பதத்தில் கலந்து உருவாக்கப்படுகிறது. இத்தகைய அற்புதங்கள் பல இங்குள்ளவர்களின் அசிரத்தையாலும், பாதுகாக்கும் மனமில்லாததாலும் அயல் நாடுகளுக்குச் சென்றுவிட்டன."

சீனத்து வணிகன் குறுக்கிட்டான், "ஆம் மகாராணி. மல்லையிலும், கொற்கையிலும் கிடைத்த பொருள்களை வைத்தேதான் இதை உருவாக்கினேன். உங்கள் பொருளை அயல் நாட்டவன் உங்களுக்கே பரிசாக அளிக்கும்போது அதன் மதிப்பு உயர்ந்து விடுகிறது பாருங்கள்! மகாராணி உத்தரவிட்டால் நாளையே இந்த மாளிகை முழுவதும் இந்த சந்திர காந்தங்களைப் பொருத்தி விடுகிறேன். மகாராணி மனம் குளிர்ந்து, எங்கள் வாணிபம் காஞ்சியில் நடக்க அனுமதியளித்தால் போதும்."

"இன்னும் சில கற்களும் இவரிடமிருக்கின்றன. அதன் நீலநிற ஒளியில் இரு நாழிகை நேரம் நிற்பவர்கள் மயக்கமடைவார்கள். விழித்ததும் அவர்கள் அறிந்த உண்மைகளைக் கூறி விடுவார்கள். சீனத்தில் ஒற்றர்களை வசப்படுத்தப் பயன்படும் கற்கள் அவை" என்றார் குணவர்மர்.

ஆவல் பொங்கியது மகாராணிக்கு. பாண்டியரின் படை பலத்தையும், திட்டங்களையும் அறியவும், உடைக்கவும் தனது திட்டங்களையும், பாண்டிய இளவரசி சிக்கியிருப்பதையும் எண்ணியவள், "சீன வணிகரே, அப்படியொரு நீலக்கல் உங்களிடமிருந்தால், அதையும் நாளை நான் கூறும் அறையில் பொருத்தி விடுங்கள்" என்றாள்.

"நாளை மாலை வந்து, மகாராணியின்

ஒற்றை மரம்!

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள 'மான்ட்ரே பே'யின் கடற்கரை ஓரம் காரிலேயே 17 மைல்கள் பீச்சை ரசித்துக் கொண்டு போகலாம். நம்பர் 16 என்னுமிடத்தில் ஒற்றை சைப்ரஸ் மரம் உள்ளது. அதன் வயது 250 வரு


---

* சந்திரகாந்தம் பற்றிய குறிப்பு ர. சௌரி ராஜனின் 'இந்தியாவின் கலையும் கலாசாரமும்' நூலில் உள்ளது.

டங்கள்.

அதைச் சுற்றி வேலி அமைத்து பாதுகாத்து வருகின்றனர். இந்த 'ஒற்றை மரம்' பெபிள் பீச் கம்பெனியின் அடையாளச் சின்னமாகவும் உள்ளது. அடுத்து நம்பர் 17ல் பேய் மரம் உள்ளது. இங்கு கடல் காற்றும் உப்பு நீர்த்துளிகளும் மரங்களின் மேல் படுவதால் மரங்கள் பசுமை நிறத்தை இழந்து வெள்ளை வெளேர் எனக் காட்சி தருகின்றன.

- பெங்களூர் பத்மா தேசிகன்



உத்தரவை நிறைவேற்றிவிடுகிறோம். விடை கொடுங்கள் மகாராணி'' என்று வணங்கியவர்கள், குணவர்மருடன் வெளியேறினார்கள்.

மறுதினம் பெரும் பேழைகளுடன் வந்து இறங்கிய சீன வணிகர்களுக்கு, மகாராணியின் மாளிகையில் கிடைத்த வரவேற்பு அபரிமிதமாயிருந்தது.

''மகாராணி, தாங்கள் சற்று மேன்மாடத்தில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். கீழ்த்தளம் முழுவதும் சந்திரகாந்தத்தைப் பொருத்தி விடுகிறேன். தாங்கள் கீழே இறங்கி வரும்போது மாளிகை ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைக் காணலாம்'' சீன வணிகன் வெகு அடக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

இளவரசியிருந்த அறையில் நீலக்கல்லைப் பொருத்த உதவுமாறு யவன மங்கைக்கு உத்தரவிட்ட மகாராணி, மேன்மாடத்துக்குச் சென்றாள்.

அடுத்து சர விளக்குகளையும், பந்தங்களையும், முழுதுமாக அணைத்துவிடும்படி கேட்டுக் கொண்ட சீன வணிகர்கள், பேழைகளைத் திறந்து, சிறு மூங்கில் குழாய்களையும், கறுப்புத் துணிகளில் சுற்றப்பட்ட சந்திரகாந்தங்களையும் கூடத்தில் பரப்பி கடை விரித்தார்கள். பணிப்பெண்களும், காவலரும் வணிகன் கேட்ட உதவிகளைச் செய்ய போட்டி போட்டனர்.

ஒவ்வொரு சந்திரகாந்தத்தையும் பொருத்தி, அருகில் இரு பணிப்பெண்களை நிற்கவும், தான் கூறும்போது துணிகளை அப்புறப்படுத்தவும் கேட்டுக் கொண்டான் வணிகன்.

மாளிகையின் கீழ்த்தளம் முழுவதும் இருள் சூழ்ந்து கிடந்தது. பணிப்பெண்களோ, காவலரோ தென்படாததையும் கவனித்த இளவரசி, கார்குழலியை அழைத்தாள்.

''கார்குழலி, அருகில் பணிப்பெண்களைக் காணவில்லையே, மாளிகையும் ஏன் இருளடித்துக் கிடக்கிறது?'' என்றாள்.

''தெரியவில்லை இளவரசி. ஆனால் நேற்று வந்து ஓலை கொடுத்துச் சென்ற சீனன் வருவதாகச் சொன்ன நேரம் இது தான்.''

''எனக்கு நம்பிக்கையில்லை கார்குழலி. இத்தனை கட்டுக் காவலை மீறி, நம்மைத் தப்புவிக்க அந்தச் சீனனால் இயலுமா?''

கார்குழலி பதில் கூறுமுன் அறைக்கதவு திறக்கப்பட்டது.

யவன மங்கையொருத்தி சிறு தீபத்துடன் உள்ளே நுழைந்தாள். தொடர்ந்து சீன வணிகர் இருவர் நுழைந்தனர். அடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகள் குமுதவல்லியின் திகைப்பை உயர்த்தின.

ஒரு சீனன் கதவைத் தாளிட, சற்றுப் பருத்திருந்தவன் யவனமங்கையைப் பின்னாலிருந்து இறுக்கி, அவள் முகத்தில் சீலையொன்றை வைத்து அழுத்தினான். அவள் மயங்கிச் சரிந்தாள்.

கதவைத் தாளிட்ட சீனன் தன் சதுரத் தலைப்பாகையையும் நீண்ட மீசையையும் விலக்கி, இளவரசியை நெருங்கி வணங்கினான். கீழே உருண்டு கிடந்த தீபத்தின் ஒளியில், அவன் கரத்தில் முத்திரை மோதிரமொன்றும் பளபளத்தது.

''இளவரசி, நான் பராந்தகன். உங்கள் படைத் தலைவராலும், எமது விக்கிரமவரையராலும் அனுப்பப்பட்டவன்'' என்றான்.

அவன் வார்த்தைகளை முடிக்குமுன்பாக, அறையில் கார்குழலியின் குரலில்



அருள்வாக்கு

சொத்து ஸ்வதந்திரங்களை நாமே வைத்துக் கொண்டு அநுபவிப்பதில் பெறுகிற ஸுகம் ரொம்பவும் தாற்காலிகமானது. இந்தத் தாற்காலிக ஸுகம் நித்ய ஸௌக்யமான ஆத்மாபிவிருத்திக்கு ஹானியாகவும் ஆகிறது. ஆனால் இதே உடைமைகளை நாம் வைத்துக்கொண்டு அநுபவிப்பதைவிட, கொடுத்து அநுபவித்தால், இதுவே பரம ஆனந்தத்தைத் தருகிறது; சாச்வத ஸௌக்யத்துக்கும் வழி கோலுகிறது. இதனால்தான் உபநிஷத்துகளில் முதலாவதான ''ஈசாவாஸ்ய''த்தில் முதல் மந்த்ரத்திலேயே ''த்யாகம் பண்ணி அநுபவி'' என்று சொல்லியிருக்கிறது. காந்திகூட இதில்தான் தம்முடைய ஃபிலாஸஃபி முழுக்க இருக்கிறது என்று சொல்லி, இந்த உபநிஷத்தைத் தலைக்கு மேலே வைத்துக்கொண்டு ச்லாகித்து வந்தார்.

கொடுக்க வேண்டும். அதுதான் த்யாகம். த்யாகம் பண்ண வேண்டும்; அதைவிட முக்யமாக, த்யாகம் பண்ணினேன் என்ற எண்ணத்தை த்யாகம் பண்ணிவிட வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

''அண்ணா'' என்ற விம்மல் வெடித்தது. துக்கம் பொங்கிவரப் பாய்ந்த கார்குழலி, கண்களில் நீர் வழிய பராந்தகனின் மார்பில் சரிந்து அணைத்தபடி கேவினாள்.

ஒரு கரத்தால் அவளை அணைத்து, குழல்களைக் கோதிய பராந்தகன் குரலில் சோகம் வழிந்தது. ''கார்குழலி, நீயும் மடிந்து விட்டாயென்றே எண்ணி விட்டேனம்மா. இங்கு வந்தபின் பகதத்தன்தான் அனைத்தையும் கூறினான்'' என்றான் பராந்தகன்.

பராந்தகன் மார்பில் புதைந்து கிடந்த முகத்தைத் திருப்பி, விழிகளை உருட்டிக் கொண்டு சீன வணிகனாக நின்ற பகதத்தனைக் கண்ட கார்குழலியின் முகத்தில், கண்ணீரோடு சேர்த்து வெட்க நகையொன்றும் பூத்து மின்னியது. இளவரசிக்கு சகலமும் ஒரு கணத்தில் புரிய, உணர்ச்சி பொங்க நின்றாள்.

பகதத்தனின் குரல் சற்று உயர்ந்து ஒலித்தது. ''அடேய், பராந்தகா, இளவரசி, கார்குழலி... நாம் உணர்ச்சிவசப்பட்டு நிற்கும் நேரமல்ல இது. இருவரையும் சாளரத்தின் வழியே வெளியே இறக்கிவிடு.''

கார்குழலியை விலக்கி சாளரத்தை அடைந்த பராந்தகன், ''இளவரசி, வாருங்கள்'' என்று அழைத்தான். அருகில் நெருங்கியவளை, ஏதோ சிறு குழந்தையைத் தூக்குவது போல் தூக்கி, மறுபுறம் இறக்கியவன், ''இளவரசி, வலதுபுறச் சுவரோரமாகச் சென்றால் மாளிகையின் முகப்பில் நிற்கும் எங்கள் சீன ரதத்தை அடையலாம். அதன் பின்புறத்தில் அடிமைகளுக்கான இருக்கை, சீலைகள் மூடப்பட்டு இருக்கிறது. சென்று அமர்ந்து கொள்ளுங்கள். சற்று நேரத்தில் வந்து விடுகிறோம். காவலர் எவரும் இல்லை. அஞ்ச வேண்டாம்'' என்றான்.

கார்குழலியையும் சாளரத்தின் வழியே மறுபுறம் இறக்கி, இருவரும் சுவரோரமாக, அரவமின்றிச் சென்று முகப்பில் நின்ற ரதத்தின் பின்பகுதியில் பதுங்குவதைப் பார்த்து, பின்பே உள்ளே திரும்பிய பராந்தகன் ''அந்த நீலக்கல்லை எடு'' என்றான்.

நீல நிறச் சந்திரகாந்தக் கல்லை அறைக்குள் பொருத்திய இருவரும், மீண்டும் சீன வணிகராக தலைப்பாகையையும், நீண்ட மீசையையும் பொருத்திக் கொண்டனர்.

கீழே உருண்டு கிடந்த யவன மங்கை இலேசாகப் புரண்டு முனக ஆரம்பித்தாள்.

மயக்கம் தரும் மூலிகைச் சீலையை மீண்டும் அவள் முகத்தில் வைத்து அழுத்திய பகதத்தன் ''பராந்தகா, வா, நாம் விரைவில் வெளியேற வேண்டும்'' என்றான்.

இருவரும் இருளில் மெல்லத் தடவியபடி, கூடத்தை அடைந்தபோது, ''என்ன, சீன வணிகரே, உங்கள் பணி முடிந்து விட்டதா?'' என்ற அதிகாரக் குரல் ஒலித்தது.

மேன்மாடத்திலிருந்து இறங்கிய படிகளில், மகாராணி ரேவாதேவி வெகு ஒயிலாக நின்றிருந்தாள்.

(தொடரும்)



“தோற்றாலும் ஜெயித்தேன்!”

–லட்சுமி பார்வதி

ஆந்திர முன்னாள் முதல்வர் என்.டி.ஆரை அதிரடியாக திருமணம் செய்து கொண்டதன் மூலம் அகில இந்திய அளவில் பரபரப்பாகப் பேசப் பட்டவர் லட்சுமி பார்வதி. என்.டி.ஆர். மறைவுக்குப் பிறகும் அரசியலி லிருந்து விலகவில்லை இவர். நடந்து முடிந்த ஆந்திர சட்டமன்றத் தேர்தலில் இவரது தெலுங்கு தேசம் (என்.டி.ஆர்.) கட்சி படு தோல்வி அடைந்தது. இப் போது எப்படி இருக்கிறார் லட்சுமி பார்வதி!

ஹைதராபாத் நகரின் காஸ்ட்லியான பஞ்சாரா ஹில்ஸ் ஏரியாவில் பழைய காலத்து வீட்டில் வசிக்கிறார் லட்சுமி பார்வதி. வீட்டில் அவரது நாற்காலிக்குப் பக்கத்தில் இன்னொரு நாற்காலியில் தத்ரூப மாக என்.டி.ஆரின் வண்ணச் சிலை! “என்.டி.ஆர். இறந்த சில நாட்களில், அவருடைய விசிறி ஒருவர் இந்தச் சிலையைக் கொண்டு வந்து அளித்தார். என் அருகிலேயே இருந்து, என்னை அவர் வழிநடத்திச் செல்லுவது போல உணர்கிறேன்” என்று சென்டிமெண்டாகப் பேசுகிறார் லட்சுமி பார்வதி.

சட்டசபைத் தேர்வில் சந்திரபாபு நாயுடு தோல்வி கண்டவுடன், என்.டி.ஆரின் அஸ்தியைக் கரைத்து சபதம் நிறைவேறியதாக அறிவித்தீர்களே!

“ஆமாம்! என்.டி.ஆரை முதுகில் குத்தி விட்டு, முதலமைச்சரானவர் சந்திரபாபு நாயுடு. அவரது நம்பிக்கைத் துரோகம், என்.டி.ஆரை மிகவும் ஆழமாய்ப் புண்படுத்தி விட்டது. என்.டி.ஆர். மரணத்துக்கு சந்திரபாபு நாயுடுதான் காரணம் என்று நான் நம்புகிறேன். எனவேதான், நாயுடுவை, பதவியிலிருந்து இறக்காமல் ஓய மாட்டேன் என்று சபதம் செய்தேன். என்.டி.ஆரின் அஸ்தியை, இதே வீட்டில், மாமரத்தின் கீழ் உள்ள துளசி மாடத்துக்குப் பக்கத்தில் பாதுகாத்து வந்தேன். நாயுடு பதவி இழந்தவுடன், அஸ்தியைக் கரைத்தேன்.”

“தேர்தலில் சட்டசபைக்குப் போட்டியிட்ட நீங்களே தோற்றுப் போய் விட்டீர்களே?”

ஆனால், நானும் இந்தத் தேர்தலில் நாயுடுவை எதிர்த்துப் பிரசாரம் செய்ததை யாரும் மறுக்க முடியாது. நாயுடுவின் ஆட்சி போனதற்கு நானும் ஒரு முக்கியக் காரணம்.


உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

எங்கள் கட்சியில் இருந்த எல்லோரும், வெவ்வேறு கட்சிகளுக்குப் போய் விட்டார்கள். நான் மட்டும்தான் கட்சியில் இருக்கிறேன். கட்சி நடத்த என்னிடம் பணமில்லை. ஆனாலும், எதிர்காலத்தில், ஆந்திர அரசியலில் ஒரு முக்கிய சக்தியாக வருவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **கௌதம்ராம்**

தேமதுரத் தமிழோசை...



இப்போது, 'செம்மொழி செம்மொழி' என்ற குரல் தான் எங்கும் கேட்கிறது. 'செம்மொழி என்றால் என்ன? அதனால் தமிழுக்கு ஏற்படும் நன்மைகள் என்னென்ன?' என்ற கேள்விகளுடன் பத்திரிகையாளரும், தமிழறிஞருமான முஸ்தபாவை அணுகினோம்.

"ஒரு மொழியை செம்மொழியாக அறிவிக்க, அதற்கு சில தகுதிகள் அவசியம். அவை தொன்மை, தனித் தன்மை, பொதுமைப் பண்பு, நடுவு நிலைமை, தாய்மைத் தன்மை, பண்பாடு - கலை - பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமிலா தனித் தன்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு மற்றும் மொழிக் கோட்பாடு ஆகியன.

தமிழ் 'செம்மொழி'யாக அறிவிக்கப்பட்டதால், இனி இந்தியாவில் இருக்கக் கூடிய அனைத்து பல்கலைக் கழகங்களிலும், தமிழுக்கென ஓர் ஆய்வுத் துறை உருவாகும். அரசாங்கமே செம்மொழியாக ஏற்றுக் கொண்டதனால் இந்தியப் பல்கலைக்கழக மானியக்குழு அதற்கு ஒப்புதல் தந்துவிடும். இதன் காரணமாக உலகப் பல்லைக் கழகங்கள் தமிழை அங்கீகரிக்க வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி உதவிகள், புலமையாளர்கட்கு விருதுகள், வெகுமதிகள் போன்றவை, தேசிய அளவில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் வழங்கப்படும்.

டெக்கான் காலேஜ் ஆஃப் போஸ்ட் கிராஜுவேட் அண்ட் ரிசர்ச் என்ற அமைப்பு, சமஸ்கிருத ஆங்கில அகராதி வெளியிட்டதைப் போன்றே தமிழ் - ஆங்கில அகராதி வெளியிட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

யுனெஸ்கோ, ராக்பெல்லர் ஃபவுன்டேஷன் போன்றவற்றின் உதவியுடன் தமிழிலுள்ள செவ்விலக்கியங்கள் அனைத்தும் ஆங்கிலம், சீனம் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் தமிழிலக்கியங்களின் பெருமை உலகம் முழுவதும் பரவும்.

இதுவரை என்சைக்ளோபீடியா, பிரிட்டானிகா போன்ற உலகக் கலைக் களஞ்சியங்களில் தமிழ், தமிழ்நாடு, தமிழினம் தொடர்பான செய்திகளெல்லாம் அதிக அளவிலே இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது!"

- இரா.முத்துக்குமார்

விசையுறு பந்தினைப்போல்...

ஜப்பானியப் பயணத்தின்போது, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஒரு ஸ்வாமிஜி, டோக்கியோ பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். இரண்டு மணி நேர நிகழ்ச்சியில், ஒரு மணி நேரம் சொற்பொழிவு. ஒரு மணி நேரம் மாணவர்களின் கேள்வி - பதில் நிகழ்ச்சி. அந்த இரண்டு மணி நேரமும் அத்தனை மாணவர்களும், தரையில் ஆடாமல், அசையாமல் வஜ்ராசனத்தில் உட்கார்ந்து, சொற்பொழிவைக் கேட்டனர். இது எப்படி சாத்தியமாயிற்று? ஜப்பானிய மாணவர்களுக்கு, சிறுவயது முதலே உடல்கட்டுப்பாட்டுப் பயிற்சி தரப்படுவதுதான் காரணம்.

அரங்கிலோ, வகுப்பு அறையிலோ அமர்ந்து சொற்பொழிவுகளையோ, பாடங்களையோ கேட்கிறபோதுதான், உடல் கட்டுப்பாடு அவசியம் என்று இல்லை.

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் ஆடுகிறார். மைதானத்தில் பந்து வீச, அக்தர் ஓடி வருகிறார். அந்தப் பந்தை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர். அவ்வளவு வேண்டாம், ஒரு பவுண்டரி... அதுவுமில்லாது போனால் ஒரு டபுள்... அல்லது குறைந்தபட்சம் ஒரு சிங்கிள் ரன் அடிக்க வேண்டுமென்றால், சச்சின், கையில் கிரிக்கெட் மட்டையை கேஷுவலாகப் பிடித்துக் கொண்டு, ஜாலியாக போட்டோவுக்குப் போஸ் கொடுக்கிறாற்போல, புன்னகை முகத்துடன் நிற்கலாமா? அவரது உடம்பு முழுவதும், அவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமல்லவா? அவரது முழு கவனமும் பந்தின் மீது இருக்க வேண்டுமல்லவா? கவனமும், கட்டுப்பாடும் இல்லாமல் போனால், என்ன ஆகும்? சச்சின், அடுத்த பந்தை எதிர்கொள்ள அங்கே நிற்பதற்கு பதிலாக, பெவிலியனில் உட்கார்ந்து, அடுத்த பேட்ஸ்மெனின் ஆட்டத்தை வேடிக்கை பார்க்க வேண்டியதாகி விடும்!

உடம்புக் கட்டுப்பாடு இருந்தால், உடற்பயிற்சி செய்தால், வலிமை ஏற்படும். வலுவான உடம்பு இருந்தால்தான், கடுமையாக உழைக்க முடியும்; செய்கிற வேலையில் முழுமையாக கவனம் செலுத்த முடியும். எனவேதான், சுவாமி விவேகானந்தர், "பகவத்கீதையை விட, கால்பந்து விளையாட்டின் மூலமாக இறைவனை எளிதில் சென்றடையலாம்" என்று கூறி இருக்கிறார்.

நான் மாணவர்கள் மத்தியில், உடல் கட்டுப்பாடு, பாடி கண்ட்ரோல் என்று சொல்கிறபோது, அதை எப்படி அடைவது? அதற்குப் பயிற்சி ஏதாவது இருக்கிறதா? என்று பல மாணவர்கள் கேட்பது உண்டு. உடலைக் கட்டுப்பாட்டுக்குள்



மாணவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய தொடர்!



வைத்துக் கொள்ளுவது சிரமமான காரியமில்லை. அதே நேரம் டேக் இட் ஈஸி காரியமுமில்லை.

உடல் கட்டுப்பாட்டுப் பயிற்சியைச் சொல்லித் தர நான் ரெடி! கற்றுக் கொள்ள நீங்கள் ரெடியா?

ஒரு நாற்காலியிலோ, அல்லது தரையில் விரிப்பு மீதோ தோள்கள் துவளாமல், தலையில் சாய்வு ஏதும் இல்லாமல், நிமிர்ந்து, நேராக உட்கார்ந்து கொள்ளுங்கள். கண்களை மூடிக் கொள்ளுங்கள். மனதுக்குள், உங்கள் உருவத்தையே கற்பனை செய்து கொள்ளுங்கள். இது ஒன்றும் சிரமமாக இருக்காது. ஒரு மயில், ஒரு விமானம், உங்கள் அம்மா... இப்படி எதை அல்லது யாரை நினைத்துக் கொண்டாலும் உடனே, உங்களால் அந்த உருவத்தை மனத்திரையில் பார்க்க முடிகிறதில்லையா? அது போலத்தான், இப்போது உங்கள் உருவத்தையே மனத்துக்குள் பார்த்துக் கொள்ளுங்கள்.

அடுத்து, உங்கள் மனத்தின் கவனத்தை முழுமையாக உங்களுடைய பாதங்களின் மீது செலுத்துங்கள். சில நிமிடங்களுக்கு, உங்களது முழு கவனமும் உங்கள் பாதங்களின் மீதே இருக்கட்டும். அது உங்களுடைய உடலின் ஒரு பகுதி என்பதை உணருங்கள். அது உங்களது வாழ்க்கையில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நினைத்துப் பெருமைப்படுங்கள். உங்கள் சிந்தனை முழுவதும் உங்களுடைய இரண்டு பாதங்களைப் பற்றியதாகவே இருக்கட்டும்.

அடுத்து சற்றே மேலே வாருங்கள். உங்கள் கவனம், உங்களது கெண்டைக் கால் தசைப் பகுதியில் இருக்கட்டும். சில நிமிடங்களுக்குப் பின், சற்றே மேலெழும்பி, தொடைப் பகுதிக்கு உங்கள் கவனத்தைக் கொண்டு வாருங்கள்.

இப்படி, உங்கள் உடலை பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதி மீதும் கவனத்தைச் செலுத்திக் கொண்டே வாருங்கள்.

ஆரம்பக் கட்டத்தில் இது சிரமமாக சிலருக்கு இருக்குமானால், அவர்கள், கால் பாதங்கள் தொடங்கி தலைவரை, எந்தப் பகுதி மீது கவனத்தைச் செலுத்து

சுவாமி போதமயானந்தா

கிறீர்களோ, அந்தப் பகுதியை கைகளால் தொட்டுப் பார்த்துக் கொள்ளலாம். அப்போது, மனத்தைச் செலுத்துவது சுலபமாக இருப்பதுபோல உணருவீர்கள்.

இப்படி உடலின் ஒவ்வொரு பகுதியின் மீதும், முழுமையாக கவனம் செலுத்துகிற பயிற்சியை தினமும் செய்து வந்தீர்கள் என்றால், நாளடைவில், உங்கள் உடல் உங்களது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்.

இந்தப் பயிற்சியின் மேம்பட்ட நிலையில், உங்கள் உடம்பின் எந்தப் பகுதியிலாவது வலி இருந்தால், அந்தப் பகுதியின் மீது உங்கள் முழு கவனத்தையும் செலுத்தி, வலியிலிருந்து நிவாரணம் பெற முடியும். இதை நானே அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். பலன் அடைந்து இருக்கிறேன்.

இருபது வருடங்களுக்கு முன் எனக்கு முதுகு வலி வரும். அப்போது, நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்த இதே பயிற்சியைச் செய்து, என் முதுகு வலியிலிருந்து நான் நிவாரணம் அடைந்திருக்கிறேன்.

சரி! இந்தப் பயிற்சியை எப்போது செய்யலாம்? தினமும் காலையில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு முன்னால் செய்தால் நல்ல பலன் இருக்கும். காலையில் எழுந்து, அவசரம், அவசரமாக ஸ்கூலுக்குப் போவதே டென்ஷன் பிடித்த காரியம். இதில் பதினைந்து நிமிடத்துக்கு இந்தப் பயிற்சியை எப்படிச் செய்ய முடியும்?

மனசு வைத்தால் முடியாதது என்று ஒன்று இருக்கிறதா என்ன? கண்டிப்பாக முடியும். நீங்கள் சொன்னீர்களே காலையில் கிளம்புவது டென்ஷன் பிடித்த காரியம் என்று... அந்த டென்ஷன் இல்லாமல் இருக்கும் என்றால், எப்படியாவது பதினைந்து நிமிஷத்தை இந்த உடல் கட்டுப்பாட்டுப் பயிற்சிக்கு ஒதுக்க முடியாதா என்ன? அதுவும் இந்தப் பயிற்சியை வருடக் கணக்கில் தினமும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மூன்று இல்லையெனில் அதிகபட்சம் நாலே நாலு வாரங்கள் செய்தால் போதும். நிரந்தரமான பலன் கிடைக்கும்.

சரி! காலையில் இதைச் செய்ய முடியவில்லையா உங்களுக்கு! டோன்ட் ஒர்ரி! மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியதும், விளையாடப் போவீர்களா? விளையாடிவிட்டு, வீடு திரும்பியவுடன், கைகால், முகம் கழுவிக் கொண்டு படிக்க உட்காரும் முன்பு, இந்தப் பயிற்சியைச் செய்யலாம்.

கடுமையான உடற்பயிற்சி, உழைப்பு காரணமாக உடம்பில் வியர்வை ஏற்படுகிறதில்லையா, அது போல், மனதுக்குள்ளும் முழுமையான கவனத்துடன் அறிவைப் பெருக்கிக் கொள்ளுகிறபோது, அக்னி போன்றதொரு தகிப்பு ஏற்படும். கீதையில், கிருஷ்ணர் அறிவினால் ஏற்படும் தகிப்பில் கர்மா எரிந்து சாம்பலாகிறது என்கிறார். மாணவர்களான உங்களுக்கு கர்மா என்பதெல்லாம் பெரிய வார்த்தைகள். எனவே, எளிமையாக இப்படி வைத்துக் கொள்ளலாம். அறிவினால் ஏற்படும் தகிப்பில், அறியாமை எரிந்து சாம்பல் ஆகிறது.

எனவே, நீங்கள் படிப்பது, உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளுவதற்காகத்தான் என்பதை மறந்து விடாதீர்கள்! பரீட்சை மார்க் எல்லாம் அப்புறம் தான்!

(அடுத்த வாரம் சந்திப்போம்)

வாதாடிய குமரி!

'மணிஆர்டர் விண்ணப்பங்கள் தமிழிலும் அச்சிடப்பட வேண்டும்' என்று குமரி அனந்தன் போராடியது தெரிந்த விஷயம்.



'பயணிகளின் பணிவான கவனத்திற்கு' என்று அறிவித்துக் கொண்டிருந்த ரயில்வே ஒலிப்பெருக்கிகளை 'பயணிகளின் கனிவான கவனத்திற்கு' என்று சொல்ல வைத்ததும் இவர்தான்! ஆங்கிலத்தில் 'ப்ளீஸ்.' இந்தியில் 'க்ருபயா.' தமிழில் மட்டும் ஏன் பணிவு என்று அதிகாரிகளிடம் இவர் வாதாடினாராம்.

- வண்ணத்துப்பூச்சி



வெற்றிவேல்; வேகவேல்!



• வெற்றிவேல்

சமீபத்தில் இருங்காட்டுக்கோட்டையில் கார் பந்தயம் நடந்தபோது போட்டியில் கலந்து கொண்ட வீரர் ஒருவரைப் பார்த்தபோது 'அட எங்கோ பார்த்த முகமாயிற்றே' என்று மின்னல் வெட்டியது. விநாடிகளில் நினைவுக்கு வந்து விட்டது. மத்திய சென்னை அ.இ.அ.தி.மு.க பிரமுகரும், மாநகராட்சி கவுன்ஸிலருமான வெற்றிவேல்தான் அவர். பிரபலங்களில் நடிகர் அஜீத் கார் ரேசில் கலந்து கொள்வது தெரியும். இவருமா? மறுநாள் அவரை வீட்டில் சந்தித்தோம். வரவேற்பு அறை முழுக்க முதல்வரின் படங்களுக்கு விட்ட இடம் போக, கோப்பைகளும், ஷீல்டுகளும்தான். எல்லாம் கார் பந்தயத்திலும், மோட்டார் பைக் பந்தயத்திலும் வாங்கியவை!

"எனது பதிமூன்றாவது வயதிலேயே சவர்லைட் காரை ஓட்டிக் கொண்டு பள்ளிக்குச் சென்றவன் நான். சென்னை சாலைகளில் நான் வேகமாக கார் ஓட்டுவதைப் பார்த்து உடனிருக்கும் நண்பர்கள் அலறுவார்கள். எனது பதினெட்டாவது வயதிலேயே மோட்டார் பைக் ரேஸில் கலந்து கொண்டேன். அதன் பின் சில வருடங்கள் கழித்து கார் பந்தயத்திலும் கலந்து கொண்டேன். 1991 முதல் 1994 வரை நடந்த கார் பந்தயங்களில் ஒரு பிரிவில் முதலாவதாக வந்தேன்"


"அது சரி... இப்படி வெற்றிகளைக் குவித்த நீங்கள் தொடர்ந்து பந்தயங்களில் பங்கு பெறவில்லையே! ஏன்?"

"1994ம் ஆண்டு பந்தயத்தின்போது விபத்தில் சிக்கிக் கொண்டேன். நான் ஓட்டிய கார் ஒன்பது குட்டிக்கரணங்கள் அடித்து விட்டது. வெற்றிக் கம்பத்தை தொட்டவுடன் இது நடந்தது. உயிர் தப்பியது ஆச்சர்யம். தோள் எலும்பு முறிந்துவிட்டது. அதன்பின் பெரிய இடைவெளி ஏற்பட்டு இப்போதுதான் மீண்டும் கலந்து கொள்கிறேன்."

கார் ரேஸில் கலந்து கொள்வதென்பது காஸ்ட்லியான விவகாரம். பந்தய வீரர் போட்டிருக்கும் உடை நெருப்பால் பாதிக்கப்படாத ஒன்று. பந்தயத்துக்காக ஒரு காரைத் தயார் செய்யவும் நிறையச் செலவாகும். வெற்றிவேல் கார் பந்தயங்களில் கலந்து கொள்வது, அவரது மனைவிக்கு திகிலை உண்டாக்குகிறதாம். எனவே பயிற்சிகளின்போதும், பந்தயங்களின் போதும் சொல்லிக் கொள்ளாமலேயே ஜூட் விட்டு விடுவாராம்!

- கௌசி

படங்கள்: மீடியா ராமு









எஸ்.வி. சேகருக்கு சிரிக்க வைக்க மட்டும்தான் தெரியும் என்று நினைப்பவர்களுக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கும். கீழே இருக்கும் புகைப்படங்களை எடுத்தவர் அவர்தான். தமது புகைப்படங்கள் பற்றிய ஃப்ளாஷ்பேக்குகளைச் சொல்கிறார்...

1) அமெரிக்காவில் பணம் அச்சடிக்கும் இடம் இது!

2) இந்த நீளமான வண்டி ரோட்டில் போகும்போது 'சைடு' பார்த்து சொல்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு. பார்த்தவுடன் பக்கென்றிருந்தது எனக்கு!

3) டூர் சென்றிருக்கும்போது உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் நேரத்தில், நடுரோட்டில் சுகமாக தலையணை வைத்து ஒருவர் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து எடுத்தது.

4) கும்பகோணம் அருகிலுள்ள ஒரு ரயில்வே டிராக்கில் வண்டி நிற்கும் பொழுது, அருகிலிருந்த வீட்டு வாசலில் கண்ட இந்த காட்சி என் மனத்தை ஈர்த்து விட, உடனடியாக பதிவு செய்து கொண்டேன்.

5) காஞ்சி பாலபெரியவரின் தாய், தந்தையர் ஒரு ஹோமத்தில் பங்கு கொண்டபோது மிகுந்த மனமகிழ்ச்சியுடன் நான் எடுத்தது.

6) இந்த 'உல்டா' கடிகாரம் அமெரிக்காவிலுள்ள ஆர்யான்டோ என்னுமிடத்தில் இருக்கிறது. அங்கு ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொன்று வித்தியாசமாக இருக்கும்.

7) எல்லாக் குழந்தைகளும் டி.வியை மட்டுமே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, இக் குழந்தை மட்டும் வீடியோ கேமராவை பார்த்துக்





3



6



7



8

கொண்டிருந்தது. வித்தியாசமாகப்பட உடனே கிளிக்கினேன்.

8) இது தி.நகரில் நான் பார்த்த காட்சி. பிள்ளையை ஆட்டோவில் தூங்க வைத்து பெற்றோர்கள் ஷாப்பிங் சென்று விட்டனர்.

9) இதுவும் நான் எடுத்ததுதாங்க. ஆட்டோமெட்டிக் கேமிராவை செட் செய்துவிட்டு ஓடி வந்து உட்கார்ந்து கொண்டேன்.

- முத்து



9

‘ப்ளாஷ்’பேக்!

"பெண்களின் எதிர்ப்பு மகிழ்ச்சி அளிக்கிறது!"

–சென்சார் அதிகாரி பேட்டி

சமீபகாலமாக, அரசியல் கட்சிகளுக்கு ஈடாக கடும் விமர்சனத்துக்குள்ளாகி வரும் சென்சார் போர்டைத் தாக்கி கடும் அறிக்கைகள் விடுகிறார்கள் மகளிர் அமைப்பினர். இந்த நிலையில் நாம்



சென்னை சென்சார் போர்டு அதிகாரி ராஜீவைச் சந்தித்தோம்.

சமீபகாலமாகவே மகளிர் அமைப்புகளும் பத்திரிகைகளும் சென்சார் மீது கடுங்கோபத்தில் உள்ளார்களே?

மிக்க சந்தோஷம். காரணம், சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி என்பது மிக மிக அவசியம். நாங்களொன்றும் சூப்பர் மேன்கள் கிடையாது. தவறுகள் எங்கள் பக்கமும் உண்டு. அதைச் சரிசெய்து கொள்ள, இது மாதிரியான எதிர்ப்புகள் மிகவும் உதவுகின்றன. இன்று ஹிந்திப் படங்கள் எப்படி மாறிவிட்டன? பாய்ஸ், நியூ, ஆந்திராவில் எதிர்ப்பின்றி ஓடியதே. அங்குள்ள மகளிர் சங்கங்களும் இது போன்று போர்க்கொடி தூக்கினால் இன்னமும் சந்தோஷப்படுவேன்!

'அடல்ட்ஸ் ஒன்லி' படத்திற்குக் கூட்டம் கூட்டமாக பள்ளிச் சிறுவர்கள் வருகிறார்களே?

எங்களால் இவ்விஷயத்தில் வேடிக்கை பார்க்க மட்டுமே முடியும். ஒருபடம் சென்சார் செய்யப்படும் பொழுது, எங்களால் கட்டளைகள்தான் பிறப்பிக்க முடியும். அதன் பின்பு அவற்றை திரையரங்குகள் சரியாகப் பின்பற்றுகிறதா என்பதை, மாநில அரசும் காவல் துறையும்தான் கண்காணிக்க வேண்டும். ஒரு படத்திற்கு 'ஏ' சான்றிதழ் கொடுக்கத் தயாரானால், எந்த விதக் காட்சியையும் அனுமதித்து விடலாம். ஆனாலும் 'ஸ்ரக்' என்கிற ஹிந்திப் படத்தில் அரை நிர்வாணத்தை அப்படியே அனுமதித்தது போலில்லாமல், தமிழ்நாட்டின் கலாசாரம், சூழல் இவற்றைக் கருத்தில் கொண்டு 'கட்ஸ்' கொடுக்கிறோம்.

'நியூ' படத்தின் 'மார்க்கண்டேயா' பாடலை ஒலி நாடாவில் சுதந்திரமாக உலாவவிட்டு, படமாக்கப்பட்டபின் அதன் பாடல்வரிகள் ஆபாசம் என்பது, விசித்திரமாக உள்ளதே?

ஆபாசப் பாடல் வரிகள் ஆடியோ கேசட்டில் இடம் பெறுவதைத் தடுக்கவும் எங்களுக்கு அனுமதி கிடையாது. அது படமாக்கப்பட்டு முழுப் படத்தோடு இணைந்து வரும்போதுதான், எங்களால் நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பான சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'பாய்ஸ்' படம் ஹைதராபாத்தில் சென்சார் ஆனதுபோல், மற்ற தமிழ்ப்

படங்களும் உங்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா?

சட்டப்படி முடியும்தான். ஒரு படத்தின் டைட்டில் எங்கு பதிவு செய்யப்படுகிறதோ, மற்றும் எந்த லேபில்





• ராஜீ

பிரிண்ட் செய்யப்படுகிறதோ, அது அஸ்ஸாமாக இருந்தாலும், ஒரு தமிழ்ப் படத்துக்கு அங்கேயே சான்றிதழ் வாங்கி விடலாம்.

'நியூ' பிரச்னையின் பொழுது ஒரு பெண் சென்சார் உறுப்பினர், லஞ்சம் வாங்கியதாக செய்திகள் வந்தன. 'உண்மைகளை வெளியிடுவேன்' என்று எஸ்.ஜே.சூர்யாவும் மிரட்டியிருக்கிறாரே?

தைரியமாக எஸ்.ஜே.சூர்யா உண்மைகளை வெளியிடலாம். சி.பி.ஐ. விசாரணை வைத்தாலும், எங்களுக்குக் கவலையில்லை. மற்றபடி இந்த விஷயம் கோர்ட்டில் இருப்பதால் நான் எதுவும் பேசக் கூடாது.

நீங்கள் இங்கு கொடுக்கும் வெட்டுகளை மும்பை ட்ரிபியூனலில் முறையிட்டு, எவ்வித சேதமுமின்றி படத்தை ரிலீஸ் செய்து விடுவது உங்களுக்கு நெருடலாக இல்லையா?

ஆங்கிலம், ஹிந்தி, பெங்காலி என அவர்கள் அனைத்துப் படங்களையும் பார்ப்பதால், இந்தியக் கண்ணோட்டத்தில் வைத்து, பார்த்து ட்ரிப்யூனலில் நாங்கள் 'கட்ஸ்' கொடுத்து, 'ஏ' சான்றிதழ் அளித்த படத்திற்கு, 'யூ' சான்றிதழ் கொடுத்து விடுகிறார்கள்! "இதெல்லாம் ஒரு ஆபாசமா? ஏன் இருபது வருடத்திற்கு பின் தங்கியிருக்கிறீர்கள்?" என்று எங்களைக் கேலி வேறு செய்கிறார்கள். இப்படி அனுமதி பெற்ற படத்தைப் பார்த்துதான், இங்கு எங்களை பிலுபிலுவென பிடித்துக் கொள்கிறார்கள்.

இது தெரியுமா, 1954லிலேயே தமிழ்ப் படங்கள் மாணவர்களைச் சீரழிக்கின்றன என்று அப்பொழுதைய மகளிர் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆக எதிர்ப்புகளும் சர்ச்சைகளும் காலம் காலமாய்த் தொடருபவை.

உங்களுக்குப் போட்டியாக அரசியல் வாதிகள் 'இந்தத் தலைப்பு வைக்காதே, வன்முறைக் காட்சிகள் இடம் பெறக் கூடாது...' என தமிழ் சினிமாவுக்கு அறிவுறுத்துவது பற்றி?

தங்கள் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்த அரசியல்வாதிகளுக்கும் உரிமை உண்டு. என்ன, ஒரேயடியாக சென்சாரின் அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு எடுக்காத வரைக்கும் பிரச்னையில்லை.

யாரையும் விட்டு வைக்காத விவேக் உங்களையும் சேர்த்து கிண்டலடிக்கிறாரே?

(சிரிக்கிறார்...) அது அவருக்கு வியாபாரம். பொதுவாக காமெடிக் காட்சிகளின் பொழுதுதான் கவனமாக இருப்போம். சுலபமாக அதில் யாரையும் புண்படுத்தி விட முடியும். நாங்கள் நினைத்தால் காமெடிக் காட்சிகள் முறையாக இல்லை என்று ஒட்டுமொத்தமாக விவேக்கை ஒன்றுமில்லாமல் செய்துவிட முடியும்! அதுசரி, ஜனநாயக நாட்டில் விமர்சனங்கள், கிண்டல்களிலிருந்து யார்தான் தப்பிக்க முடிகிறது?

- ச.ந. கண்ணன்

படம்: செந்தில்

வலம்புரி முத்து

அழகப்பன் கைச்செலவுக்கு இருக்கட்டும் என கொடுத்த ஐயாயிரம் ரூபாய் பணம் மட்டும் கையில் இருந்தது. ஒரே ஒரு சூட்கேசுடன் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, வெள்ளை மனசுடன் சென்னை எழும்பூரில் வந்திறங்கிய கதிரேசன், சென்னை நகரத்தைப் பார்த்து பிரமித்து நின்றான். இனிமேல் தெய்வானை ஆச்சி முகத்தில் தினமும் விழிக்க முடியாது; சைக்கிளை எடுத்துக் கொண்டு காரைக்குடியை ஒரு ரவுண்ட் வரமுடியாது; மருந்து கம்பெனி விற்பனைப் பிரதிநிதிகளை ஏறக்கட்டிப் பேச முடியாது; தாமரையைப் பார்க்கவே முடியாது.

தான் திட்டமிட்டு தாக்கப்பட்டதாகவே உணர்ந்தான். அவன் உணர்வதற்குள் எல்லாமே நடந்து முடிந்துவிட்டன. அவனிடம் இப்பொழுது உள்ள ஒரே ஒரு துருப்பு, பிரபல ஆரோக்கிய பானம் ஒன்றைத் தயாரிக்கும் கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதி விஸ்வநாதன் மட்டும்தான்.

விஸ்வநாதனுக்கு அந்த நிறுவனத்தின் தென்மண்டல மேலாளர் பதவி. அடிக்கடி காரைக்குடிக்கு வரவேண்டிய வேலை இல்லை என்றாலும், நிறுவனத்தின் விற்பனையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும்பொழுது, தான் ஒரு தென்மண்டல மேலாளர் என்ற ஹோதா எதுவுமில்லாமல் தமது உதவியாளர்களை அழைத்துக் கொண்டு கடைகடையாக ஏறி இறங்குவார். விளம்பரமாகட்டும், பேசும் த்வனியாகட்டும், அந்தச் சுறுசுறுப்பாகட்டும் கண்ணில் ஒற்றிக் கொள்வது மாதிரி இருக்கும்.

அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் "கதிரு! சென்னைக்கு வந்து எங்களையெல்லாம் ஒரு வாட்டி பார்க்கப்படாதா? அது என்ன மெட்ராஸ் விஸிட்டுன்னா, நாகப்பன் மட்டும் வர்றான். நீங்களாம் வரப்படாதா?" என்பார்.



"கம்பெனி விஷயமாவா கூப்பிடுறீக? சும்மா ரெண்டு நாள் ஜாலியா சுத்திப் பார்க்க கூப்பிட மாட்டீங்களா?"

"நன்னா இருக்கே! கண்டிப்பா வா" என தமது விஸிட்டிங் கார்டை எடுத்து நீட்டினார்.

"என்ன சார் நம்பர் 20, 20வது



22

சத்தியப்ரியன்

குறுக்குத் தெரு. பெஸன்ட் நகரா? ரொம்ப ஈஸியா நினைவு வெச்சுக்கலாம் போலிருக்கே" என்ற அந்த அடையாளம்தான் துணை வர வேண்டும்.

எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து விசாரித்து, பேருந்து பிடித்து பெஸன்ட் நகர் போய்ச் சேர்ந்தான். அவன் விசாரிக்கக் கிளம்பிய பொழுதுதான் சென்னையில் அடுத்த வீட்டுக்காரனுக்குக் கூட, பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றி தேவைக்கு அதிகமாக ஒரு தகவலும் தெரியாது என்பது தெரிய வந்தது.

பால்கனியில் அவனைப் பார்த்துவிட்டு "வா! வா! கதிரேசன். வெல்கம்" என வாய் நிறைய வரவேற்று உள்ளே கூட்டிக் கொண்டு போன உபசரிப்பு, கதிரேசனுக்குப் பிடித்திருந்தது.

"தெய்வானை ஆச்சி சௌக்யமா?"

"சௌக்யம்."

"அழகப்பன் சார் சௌக்யமா?"

"சௌக்யம்."

"நாகப்பன் எப்படி இருக்கான்?"

"நல்லா இருக்கான்."

என அவருடைய எல்லாக் கேள்விகளுக்கும் தலையாட்டல் மூலம் பதில் சொல்லிக் கொண்டே வந்த கதிரேசன், விஸ்வநாதன் கடைசியாக "நீ எப்படி கதிரு இருக்க?" என்ற கேள்விக்கு,

"எனக்கொரு வேலை வாங்கிக் கொடுக்க முடியுமா விஸ்வநாதன் சார்?" என்ற பொழுது கலங்கிப் போய் விட்டார்.

"கதிரேசா! என்ன நடந்துச்சு! ஒண்ணு செய். நீ முகம், கை, கால் கழுவிட்டு வா. என் மனைவி ஃபர்ஸ்ட் க்ளாஸா ஃபில்டர் காஃபி கொடுப்பா. குடி-

டிபன் சாப்பிடு. என் ரெண்டு பசங்களைப் பள்ளிக்கூடத்துக்கு ரெடி பண்ணி அனுப்பிச்சுட்டு வந்துடறேன். சரியா?''

விஸ்வநாதனின் மனைவி இன்முகத்துடன் அவனை வரவேற்றாள். பல் துலக்கி விட்டு, ஷவரில் நன்றாகக் குளித்தான். ஆர்ட்டீசியன் ஊற்றுக்களையே குடிநீருக்கு நம்பி இருக்கும் காரைக்குடியில், தண்ணீர் என்பது பொன்தான். அண்டாவிலும், பெரிய ப்ளாஸ்டிக் ட்ரம்களிலும் அவனே நிரப்பி வைத்திருக்கிறான். இங்கே குழாயைத் திறந்ததும் தண்ணீர் வருவது சந்தோஷமாக இருந்தது. விஸ்வநாதனின் மனைவி அளித்த நிஜமாகவே மல்லிப்பூ போன்ற இட்லியை, இரண்டு மூன்று வித சட்னிகளைத் தொட்டுக் கொண்டு சாப்பிட்டான். அல்லாடிக்கொண்டிருந்த மனம் ஒரு நிலைக்கு வரும் போல் இருந்தது. முகத்தில் ஒரு தெளிவு பிறந்திருந்தது.

''நவ் யூ ஃபீல் அட் ஹோம்?'' என்றபடி அவன் எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

அவன் 'ஆம்' என தலையாட்டினான்.

"வீட்டை விட்டு ஓடி வந்துட்டியா?'' என்றார் விஸ்வநாதன். "ரொம்ப ப்ளன்டா கேக்கறேன்னு சங்கடப்படாத'' என சமாதானமும் சொன்னார்.

''ஓடி வரலை, துரத்திட்டாங்க'' என்றான்.

"என்ன சொல்ற கதிரு?''

கதிரேசன் நடந்த எல்லாவற்றையும் மறைக்காமலும், தன் குறிப்பு ஏற்றாமலும் கூறினான்.

''கடவுளே! நீ சிதம்பரம் செட்டியாரின் நேரடி வாரிசு இல்லியா?'' என்றார்.

"தெய்வானை ஆச்சியிடமோ, அழகப்பனிடமோ உன் நிலையை எடுத்துச் சொல்லி இருக்கலாமே. நாகப்பனின் கயவாளித்தனத்தை அம்பலப்படுத்தியிருக்கலாமே?''

''என்ன பயன்? சிதம்பரஞ்செட்டியாருக்கும், கனகத்துக்கும் பிறந்த ஒரு மகன், குற்றம் புரிவதற்கும், சிதம்பரம் செட்டியாருக்கும், தெய்வானை ஆச்சிக்கும் பிறந்த ஒரு மகன் குற்றம் புரிவதற்கும் வேறுபாடு உண்டில்லியா சார்?''

"யோசிக்க வேண்டிய விஷயம்...''

''அவங்களுக்கே தெரியும் என்ன நடந்திருக்கும்னு. குடோன் எரிஞ்சது எரிஞ்சதுதான். பழி விழுந்தது, விழுந்ததுதான். யாராக இருந்தால் என்ன? நான் என்றால் பழியிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு காரணமாவது கிடைச்சிருக்கு. நாகப்பன் எனத் தெரிந்தபின், ஒரு மனம் திறந்த மறுப்பைத் தெரிவிப்பதனால் அவங்க கௌரவம்தானே மேலும் பாதிப்படையும்?''

''ஆனால் உன் மேல் விழுந்த பழி உன்னை விட்டுப் போகாதே!''

"அதான் இங்க வந்துட்டேன்.''

"ஓடி...''

"எப்படியானாலும் சரி.''

''ஹெட்கிளார்க்குக்குக் குழந்தை மனசுன்னு சொன்னா நம்ப மாட்டேன்னியே...''

''ஆமா, அதுக்கென்ன இப்ப?''

''மானேஜர் பியூனைக் கூப்பிட மணி அடிச்சதும், ஸ்கூல் பெல் ஞாபகத்துல வீட்டுக்கு ஓடிப்போயிட்டாரு.''

\- எஸ்.எ.கேசவன்

"உனக்கு அவங்க மேல் வன்மமில்லையா?''

"வன்மம் என்ற அளவுக்குப் போக மாட்டேன். என் தெய்வானை ஆச்சி என்னை அப்படி வளர்க்கவும் இல்லை. ஆனால் பழின்னு வாரப்ப நாகப்பனுக்கு ஒரு மாதிரியாகவும், எனக்கு ஒரு மாதிரியாகவும் நடந்துப்புட்டாகளேன்னுதான் வருத்தம். 'ச்சீ, போ வேணாம்'னு அன்னிக்கு வெரட்டியிருந்தாகன்னா, நாங்க சிப்பட்டுல்ல போயிருப்போம். ஆமா இப்பம் மட்டும் என்னா வாளுது?''

"அடுத்து என்ன செய்யப் போற?''

''எனக்கு ஏதாவது உங்களுக்குத் தெரிஞ்ச ஃபார்மசியில் கணக்கெழுதற வேலை வாங்கிக் கொடுங்க. எனக்கு மருந்து, மாத்திரையை விட்டா வேற என்ன தெரியும்?''

''அது பெரிய கஷ்டமில்லை கதிரு. ஆனா ரெண்டாயிரம் ரூபாய் சம்

பளத்தில், உன்னால இந்த ஊரில் குடி யிருக்க முடியுமா?"

குடி இருக்க முடிந்தது. மேற்கு மாம்பலத்தில் ஒரு மேன்ஷனில் குடி புகுந்தான். புறாக்கூண்டு போல அறை. சிக்கு வாடை அடிக்கும் படுக்கை போடப்பட்ட கட்டில். பொதுக் கழிப் பறை; குளியலறை. இரண்டு நாட்களில் ஓடிப் போய் விடலாம் என வந்தது. விஸ்வநாதன் சிபாரிசின் பெயரில் மேற்கு மாம்பலத்தில் ஒரு மருந்துக்கடையில் சகல வேலைகளும் கலந்த ஒரு வேலை கிடைத்தது. மருந்து எடுத்துக் கொடுக்க வேண்டும்; கணக்கெழுத வேண்டும்; ஆர்டர் போட வேண்டும்; விற்பனைப்



பிரதிநிதிகளைப் பேசி சமாளிக்க வேண் டும். பன்னிரண்டு மணி நேர வேலைக்கு, காலை ஒன்பது மணிக்கே கிளம்பி விடுவான். சென்னையில் எதிர்க்கேள்வி கேட்கும் ஊழியர்களைப் பார்த்துச் சலித்துப்போன கடை முதலாளிக்கு, அவனுடைய வாய் மூடிக் கிடந்த செய்கை பிடித்திருந்தது. கொடுக்கும் இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தை சிரித்தபடி கொடுத்தார்.

"நான் வேணா ஒரு மீடியேட்டரா இருந்து அழகப்பன் சாரிடமும், தெய் வானை ஆச்சியிடமும் பேசிப் பார்க் கவா?" என்றார் விசுவநாதன் ஒரு நாள்.

"கையெடுத்துக் கும்பிடறேன். நான் சென்னையில் இருப்பது, இப்படி ஒரு நிலையில் இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம்."

"அவங்க தொடர்பே வேண்டாம்னு பார்க்கறியா?"

"அப்படியெல்லாம் இல்லை. என் முகவரியில்லாம, நான் சொகமா இருப்பதா அழகப்பன் அண்ணனுக்குக் கடுதாசு போட்டிருக்கேன்."

"அவங்களா ஒன்னக் கூப்பிடணும்னு எதிர்பார்க்கறியா?"

"ஆமாம். அதுதானே முறை...?"

"அப்படி அவங்க கூப்பிடவே இல்லைனா?"

"மாட்டாங்க. மனசாட்சி, வாழ்வின் நெறி இத்தனையும் கற்பித்துக் கொண் டுத்த ஆச்சிக்கு, நான் நல்லவன்னு தெரிய வரும். தேட ஆரம்பிப்பாங்க. ஒரு கண்ணாமூச்சி நிகழும். முடிவில் நான் அவங்க கண்ணுக்கு அகப்படுவேன்."

"ரொம்ப அப்பாவியாக இருக்க கதிரேசன்!"

ஆனால் கதிரேசனால் அப்படித் தான் இருக்க முடிந்தது. அவன் ஒரு சுழற்சியிலிருந்து தூக்கி எறியப்பட் டாலும் பின்னோக்கிச் செல்வது காலத் திற்குக் கிடையாது என்பது தெரியாமல், தன்னை ஒரு செட்டிமகன் என, சென்னை நகரத்தார் அலுவலகங்களில் அறிவித்துக் கொள்ளாமல், எட்டு மணிக்கு ராவ் மெஸ்ஸில் சாப்பிட்டு, இரவு ஒன்பது மணி வரையில் வேலை பார்த்து ஜடப்பொருளாய் இயங்கி வந் தான்.

"தாமரை எப்படி இருக்கா, எங்க இருக்கான்னு வேணா விசாரிச்சு வரட் டுமா?" என்றார்.

"வேணவே வேணாம். அவ பிரியப் பட்டோ பிரியப்படாமலோ, இன் னொருத்தருக்கு மனைவியாப் போயிட்டா. மாற்றான் மனைவியை நிமிர்ந்து கூடப் பார்க்கக் கூடாது."

"இந்த லெவலுக்குப் போனின்னா சென்னையில் உனக்கு மெரினா பக்கம் சிலை வெச்சிடுவாங்க."

"உள்ளூரில் விரட்டிவிட்ட பயலுக்கு வெளியூரில் மாலை மரியாதையா?" என கதிரேசன் சிரித்தபடி கேட்டான்.

அவனுடைய நெஞ்சில் ஆழமாய்ப் புரையோடிப் போன புண் ஆறி, தழும்பு மறைய, பல காலம் ஆகும் என விஸ்வ நாதனுக்குத் தோன்றியது.

(தொடரும்)



தமிழில் ஜெயிக்கணும்



ஒரு புதிய கதாநாயகி அறிமுகமாகும்போது, இவர் அவரைப் போல இருக்கிறார், இவரைப் போல இருக்கிறார் என ஏகத்துக்கும் ஒப்பீடுகள் தூள் பறக்கும். ஆனால் 'காதல்' படத்தின் கதாநாயகி சந்தியாவை யாரோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. அப்படியொரு பெக்கூலியர் முகம். மதுரைக்காரப் பொண்ணு!

படத்தின் இயக்குநர் பாலாஜி சக்திவேல், 'விநாடிகளில் முக பாவங்களை மாற்றி அபாரமாய் நடிக்கிறார்'என்று நற்சான்றிதழ் அளிக்கிறார்.

"நான் ஒரு தமிழ்ப் பெண். தமிழ் சினிமாவில் ஜெயிக்கணும்; அதான் என் ஆசை" என்று சிரிக்கிறார் சந்தியா.

— ஸ்ரீ




கல்கி
தீபாவளி மலர் தான்
2004
புத்தொளியுடன் தயாராகிறது...
கலக்கப் போவது எது?
மணக்கப் போவது எது?
எண்பதே ரூபாய்க்கு ஒரு பொக்கிஷம்!



இப்படியும் ஒரு முதலாளி!



• ராமசாமி

தம்மிடம் வேலை பார்த்த ஆறு தொழிலாளர்களை, முதலாளிகளாக்கி யிருக்கிறார் ஒரு முதலாளி!

திருச்சி பாய்லர் ஆலையில் வேலை பார்த்து வந்தவர் வெள்ளைக் கோயில் இராமசாமி. இவர் 1987ல் செல்லம் என்டர்பிரைசஸ் என்ற சிறிய தொழிலகத்தைத் துவங்கினார். வால்வுகள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிலகம் அது. இராமசாமியின் திட்டமிட்ட உழைப்பால் தொழிலகம் நல்ல லாபத்தில் இயங்கியது.

காலம் உருண்டோட... தமது இரு மகள்களுக்கும் திருமணம் செய்து முடித்த இராமசாமி, சொந்த கிராமமான வெள்ளக்கோயிலிலேயே செட்டிலாக விரும்பினார். அங்கு அவருக்கு விவசாய நிலங்களும், கோழிப்பண்ணை ஒன்றும் இருக்கிறது.

ஆகவே, தமது தொழிலகத்தை விற்றுவிடத் தீர்மானித்தார். விஷயத்தைக் கேள்விப்பட்ட பலர் இந்த தொழிலகத்தை வாங்க முன் வந்தனர். தொழிலகத்தின் சந்தை மதிப்பைவிட அதிகமாகத் தர முன் வந்தனர்.

ஆனால் இந்த நேரத்தில்தான் இராமசாமிக்கு ஒரு வித்தியாசமான எண்ணம் உதித்தது.

'தமது தொழிலகத்தில் பல ஆண்டுகளாக வேலை பார்த்து வரும் ஆறு ஊழியர்களுக்கே தொழிலகத்தை உடைமை ஆக்கினால் என்ன?' என்று யோசித்தார். அவர்களை அழைத்துப் பேசினார்.

"தொழிலகத்தின் தற்போதைய சந்தை மதிப்பான ஒன்பது லட்சத்தை மட்டும் கொடுத்தால் போதும்" என்றார்.

ஆனால் அவர்களால் அந்தத் தொகையை ஏற்பாடு செய்ய இயலாத பொருளாதாரச் சூழ்நிலை.

'நல்ல வாய்ப்பு கிடைத்தும் பயன்படுத்த முடியவில்லையே' என்று வருத்தப்பட்டனர் அந்த இளைஞர்கள்.

உடனே இராமசாமி, தமது தொழிலகம் உள்ள நிலத்தை வங்கியில் ஈடாக வைத்து, ஒன்பது லட்சத்தை இளைஞர்களுக்கு அளித்தார். அறுபது மாதத் தவணையில் வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தி, நிலத்தை மீட்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போது, சுப்ரமணி, மணிவாசகம், அங்கமுத்து, பெருமாள், சக்திவேல், பாலு என ஆறு இளைஞர்களும் செல்லம் என்டர்பிரைஸஸின் பங்குதாரர்கள்!

அட! இப்படியும் ஒரு முதலாளி!

கட்டுரை, படங்கள்:
திருநா

ஆசிரியர் பக்கம்

கொன்றால் பாவம்; தின்றால்...?



மனிதர்கள் மிகக் குரூரமாக நடந்து கொள்ளும் போது, "என்ன மிருகத்தனம்!" என்று விமர்சிக்கிறோம். இவ்வாறு விலங்குகளை, வாயில்லா ஜீவன்களை, ஆறாவது அறிவில்லா ஜந்துக்களை, மனிதனுடன் ஒப்பீடு செய்வது என்ன நியாயம்?

சமீபத்திய இரண்டு நிகழ்வுகளைப் பாருங்கள்:

மைசூர் மிருகக்காட்சி சாலையில் செப்டெம்பர் 4, 7 தேதிகளில் இரண்டு யானைகள் அடுத்தடுத்து இறந்து போயின. போஸ்ட் மார்ட்டம் செய்து பார்த்ததில், அவை விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது! யானைகளின் பரிதாபச் சாவுக்குச் சில தினங்கள் முன்னதாக ஒரு சிம்பன்ஸி குரங்கு, ஈமு என்ற பறவை வகை ஒன்று, ஒரு புலி ஆகியன மர்மமான முறையில், திடீரென்று அடுத்தடுத்து இறந்து போயின. இவை எல்லாமே விஷம் வைத்துக் கொல்லப்பட்டனவோ என்கிற சந்தேகம் எழுந்திருக்கிறது. மிருகக்காட்சி சாலையின் ஊழியர்கள் ஆறு பேர், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இறந்துபோன யானைகள் கணேசா (வயது 30) ரூபா (வயது 18) எத்தனை அழகாக விளையாடின என்பதை நினைவு கூர்ந்து, மாய்ந்து போகிறார்கள் விலங்கு அன்பர்கள். ரத்த நாளங்கள் வெடித்து, மூச்சுத் திணறத் திணற, அவை இறந்ததை அறிந்து துடித்துப் போகிறார்கள்.

நமது மகிழ்ச்சிக்காக, காட்டில் திரியும் விலங்குகளைப் பிடித்து வந்து, கூட்டில் அடைத்து வைக்கிறோம். சுதந்திர இயக்கமும், இயல்பு வாழ்வும் முடக்கப்பட்டு அவை வாடி வதங்குவது போதாதென்று, விபத்துகளுக்கும் நோய்க்கும் அவற்றைக் காவு கொடுக்கிறோம். இவையும் போதாதென்று, இப்போது திட்டமிட்ட விலங்கு கொலை வேறு நிகழ்கிறது.

லண்டனில் மற்றொரு குரூரத்தை எதிர்த்து பறவைகள் பாதுகாப்பு அமைப்பு, குரல் கொடுத்து வருகிறது.

கார்மோரண்ட் என்றொரு நீர்வாழ்ப் பறவை. கன்னங்கரேலென்று இருக்கும். நீண்ட கழுத்தும் பளபளக்கும் உடலுமாக அது வானத்தில் சிறகடிப்பதைப் பார்த்தால், சிருஷ்டியின் அற்புதத்தை எண்ணி வியப்பும் களிப்பும் உண்டாகும்.

இப்போது லண்டனில் இந்தப் பறவைகளுக்கும், மீன் பிடிப்போருக்கும் போட்டி. இவை நிறைய மீன்களைத் தின்று விடுவதால், மகிழ்ச்சிக்காக மீன் பிடிப்போரின் பாடு திண்டாட்டமாகிவிட்டதாம்! (தாங்களே மீன் பிடித்து, சமைத்து உண்பதென்பது அங்கு ஒரு பொழுதுபோக்கு) ஆகவே, ஆண்டுதோறும் மூவாயிரம் கார்மோரண்ட் பறவைகளைக் கொன்று தீர்க்க, இயற்கைப் பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி வழங்கி விட்டது. இத்தனைக்கும் கார்மோரண்ட் பறவைகளை, 'பாதுகாக்கப்பட்ட உயிரினமாக' அறிவித்துள்ளது பிரிட்டன்.

'இது அக்கிரமம்; இனி எங்கு மீன் பிடிப்பு குறைந்தாலும், கார்மோரண்டுகளே அதற்குக் காரணம் என்ற தவறான முடிவுக்கு வர இந்த ஆணை வழிசெய்கிறது...' என்று பறவைகள் பாதுகாப்புக் கழகம் குரல் கொடுத்திருக்கிறது.

"கார்மோரண்டுகளை அழிப்பது எங்கள் நோக்கம் அல்ல... மீன் பிடிப்புக்கு உதவுவதே நோக்கம்" என்று இயற்கைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் பென் பிராட்ஷா சமாதானம் சொல்லியிருக்கிறார்!

கார்மோரண்டுகளுக்கு நியாயம் கேட்கத் தெரியாது; விதண்டாவாதமும் தெரியாது; ஆனால் அவற்றுக்கு இந்த பூமியில் வாழவும், மீன் பிடிக்கவும் இருக்கிற உரிமை, மனிதனின் உரிமையைக் காட்டிலும் பழைமையானது, வலியது.

இப்போது சொல்லுங்கள்... மனிதன் மிருகம் போலவா நடந்துகொள்கிறான்...? ○

ஜெயலட்சுமி கேள்விக்குறியா?

● ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி

? தராசாரின் கண்ணோட்டத்தில் வைகோ கைது, தவறா? சரியா?

! நகருக்குள் நடந்துவரத் தடை விதித்ததே தவறு; கைதோ, இமாலயத் தவறு!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? மௌனிகா கழுத்தில் இருப்பது நான் கட்டிய தாலிதான் என்று பாலு மகேந்திரா ஒப்புக் கொண்டிருக்கிறாரே...?

! இப்படிப்பட்ட தனி நபர்களின் தோல்வி, திருமண அமைப்பின் தோல்வியாகி விடாது.

● ஆர். சாலமன், ஆலங்குளம்

? 'சோனியாகாந்தியை நான் தனிப்பட்ட முறையில் விமர்சித்ததில்லை' என்கிறாரே ஜெயலலிதா - மக்கள் செலக்டிவ் அம்னீஷியாக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாரா...?

! இன்னும் கொஞ்ச நாள் பொறுங்க... 'சோனியாதான் பிரதமரா வரணும்னு நான் அன்னிக்கே சொன்னேன்' என்று ஆரம்பிப்பார். வாஜ்பாயை சாட்சிக்கு அழைப்பார். அவரேதான் சொல்கிறாரே... 'அரசியலில் எதுவும் நிரந்தரமில்லை' என்று... அதற்கேற்ப அவர் செயல்பட வேண்டாமா!

● க. இராஜசேகரன், மயிலாடுதுறை

? ரேபரேலி தொகுதிக்குச் சென்ற சோனியா, மக்களுடன் மிகவும் நெருங்கி, அவர்களது குறைகளைக் கேட்டதைப் பார்த்தீர்களா...?

! ரொம்ப நல்லது; உ.பி.யில் காங்கிரஸை பலப்படுத்த அவர் எடுக்கும் முயற்சிகளை வரவேற்கலாம்; ஆனால, "உ.பி.யில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது" என்று அறிக்கை விட்டு முலாயம் சிங்கைத் தாக்குவது, எதிர்மறையான பலனைத்தான் உண்டாக்கும்.

• முற்றுப்புள்ளி...?



● அ. கஜைல் ரஹ்மான், திருச்சி - 21

? கேரள மாநில பாடப் புத்தகங்களில், தேசிய கீதத்தில் 'குஜராத்' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளதாமே?

! தவறுதலாக நடந்து விட்டதாகக் கூறி, மீண்டும் சேர்க்க ஆணை பிறப்பித்து விட்டார் கேரள கல்வி அமைச்சர். பெரிய தவறுதான். ஆனால் அச்சுப் பிழையை அரசியலாக்கி விட்டது பா.ஜ.க.

• குறையும் குற்றமும்...!



• கட்சி இலக்கணம்?



● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? "ஒரு முதல்வர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு காமராஜர் முன் மாதிரி... ஒரு முதல்வர் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு ஜெயலலிதா முன் மாதிரி" என ஜி.கே. வாசன் கூறியிருக்கிறாரே...?

! ஒரு கட்சி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி காங்கிரஸ் இருக்கிறதாமா...?

நீங்கள் கேட்டவை

- தராசு



• சரியான சபதம்?

ஆச்சர்யக்குறியா?

● **ரஞ்சிதம் கோபிநாத், வந்திராயிருப்பு**

? *குறும்படங்களைத் திரையரங்குகளில் காட்டும் நிலை ஏன் ஏற்படவில்லை?*

! திருட்டு வி.சி.டி யுகத்தில் தியேட்டர்கள் காற்றாடிக் கொண்டிருக்க, இந்த அரை மணி நேர கலைப் படங்களைப் பார்க்க யார் நேரமும் பணமும் செலவழிப்பார்கள்...? சின்னத்திரை சாம்ராஜ்யம் மனம் வைத்தால், இந்தப் படங்கள் வெளிச்சத்துக்கு வரும்.

● **ஜெயராமன், கூந்தலூர்**

? *இனி புதிதாக, வாங்கும் டீ.வி - ரேடியோக்களுக்கு லைசென்ஸ் வாங்க வேண்டுமாமே...?*

! அக்கிரமமான இந்த உத்தரவு அமலுக்கு வரும் தினத்திலிருந்து ஆறு மாதத் துக்கு டீ.வி/ ரேடியோ வாங்குவதில்லை என்று நுகர்வோர் முடிவெடுத்தால், இந்த லைசென்ஸ் யோசனை வாபஸ் பெறப் படுவது உறுதி. ஆனால் நுகர்வோர் ஒற்றுமையின் சக்தி நம் நாட்டில் இன்னும் உணரப்படவில்லை.

● **ஆர். ராமசுப்ரமணி, திருவாரூர்**

? *ஜெயலட்சுமி கேள்விக்குறியா? ஆச்சர்யக்குறியா?*

! இரண்டும்தான். வழக்கு விசாரணை, தீர்ப்பு இவற்றின் விளைவாக, வேறு பல ஜெயலட்சுமிகள் உருவாவதைத் தடுக்கும் சூழ்நிலை உருவானால், அவரே முற்றுப் புள்ளியாகவும் விளங்குவார்.

● **ஆர். கர்ணன், தனக்கர்குளம்**

? *இந்திய கலாசாரத்தின் இன்றைய நிலை...?*

! தாராளமயமாக்கப்பட்டிருக்கிறது!



• மறதியை நம்பி....

● **சுப்பிரமணியம், மேலையூர்**

? *தமிழ் செம்மொழி ஆனதற்கு கல்வியின் மானசீகமான பாராட்டுதல் என்ன...?*

! செம்மொழியானது மகிழ்ச்சி. ஆனால் அது போதாது. இன்றையச் சூழ

லுக்கு ஏற்ப துரித வளர் மொழியாவதற்கு அது அனுமதிக்கப்பட வேண்டும்.

• எம். ஜெயவிக்கிரமன், சின்னமனூர்

? சேது சமுத்திர திட்டத்துக்கு யார் முதலில் குரல் கொடுத்தார்கள் என்ற சர்ச்சரவு பற்றி...?

! குரல் மட்டுமல்ல... பொறியியல் முறைப்படி கட்டவேண்டிய, செயல் படுத்தக் கூடிய வழிமுறைகளை 1860லேயே பிரிட்டிஷ் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிய கடற்படை பொறியியல் வல்லுனர் டெய்லர். அவர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரில்லை; அதனால் அவர் அலட்டிக் கொள்ளவில்லை. பிரபலமடைய முயற்சி செய்யவில்லை.



• தனிப்பட்ட தோல்வி!



• பீஹார் வழியில்...

• ஈ.டி. தயாளன், சென்னை - 12

? "இந்திய ரயில்வேயை உலகின் முதல் இடத்துக்குக் கொண்டு வருவதே எனது நோக்கம்" என்று லாலு சொல்லியிருக்கிறாரே...?

! பீஹாரை முதலிடத்துக்குக் கொண்டு வந்தாச்சு; அடுத்தது இந்திய ரயில்வேதான்!

• யோகானந்தம், கலிங்கியம்


? மௌனத்தை எப்போது உடைத்தெறிய வேண்டும்...?

! அ) தட்டிக் கேட்கப்பட வேண்டிய தவறுகளை எதிர் கொள்ளும்போது ஆ) தகுதியானவர்களைப் பாராட்ட வேண்டிய தருணங்களில்.

கறை படிந்த எம்.பி.க்கள்!

எட்மண்ட்பர்க் ஒரு சமயம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பேசும்போது 'தொழில்ரீதியான கெட்டிக்காரத் திருடர்களே' என்று தம் பேச்சைத் தொடங்கினார். ஆத்திரமடைந்த பல எம்.பி.க்கள் "திருடர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள், நாங்கள் நாடாளுமன்றத்தின் கௌரவமான உறுப்பினர்கள்" என்றனர். உடனே எட்மண்ட்பர்க், "சிறைச்சாலைகளில் இருப்பவர்கள் எப்படித் திருடுவது என்று தெரியாமல் மாட்டிக் கொண்ட கற்றுக்குட்டிகள். ஆனால் நீங்களோ சட்டத்தின் ஓட்டைகளை நன்கு அறிந்தவர்கள்! தொழில் ரீதியான உங்கள் திறமைக்கு என் வணக்கங்கள்!" என்று கூறி அவர்கள் வாயை அடைத்தார்!

- இரா. சக்ரபாணி



• பொ. கணேசன், மும்பை - 37

? தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டி போட்டால் ஜெயலட்சுமி ஜெயித்து விடுவாரா...?

! ஒரு பூலன்தேவி அரசியலுக்கு வந்து தேர்தலில் வெற்றி பெற முடியுமெனில் ஜெயலட்சுமியால் முடியாதா...? அனுதாப வோட்டுக்களே அவரை எம்.எல்.ஏ ஆக்கிவிடும். ஆனால் பூலன் தேவியின் கதி அவருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதுதான் கவலை!

● எம். சாம்பமூர்த்தி, வேலூர்-1

? "தேசிய விருது பெற்ற பிறகே திருமணம்" என்கிறாரே நடிகை மீனா?

! நல்லவேளை, 'நதி நீர் இணைப்புத் திட்டத்துக்குப் பிறகே திருமணம்' என்று பேட்டி தரவில்லையே! (ஸாரி! மீனா... சும்மா சிரிச்சு வையுங்க.)

● டி.கே. சுப்பிரமணியன்,
திருப்பரங்குன்றம் ❐

? சரணடைந்த சிபு சோரன் என்ன தைரியத்தில் மறுபடியும் மந்திரி பதவி கோருகிறார்?

! கறை படிந்தவர்கள் பட்டியலில் தாம் தனித்து இல்லை என்ற தைரியத்தில் தான்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? 'கர்நாடகம் காவிரிப் பாசனத்தை விஸ்தரிப்பதைத் தடுத்து நிறுத்துங்கள்' என வைகோ மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளாரே...?

! சரியான நேரத்தில் பேசிய சரியான வார்த்தை. அத்துடன் நின்று விடாமல், தீவிர போராட்டத்தில் இறங்க வேண்டும்.

● பூதப்பாடி இராமலிங்கம்,
எஸ்.பி. கவுண்டனூர் ★

? கொள்ளை, திருட்டு நடக்காத நாள் கிடையாது... நமக்கு போலீஸ் தேவையா...?

! பாவம் ஸார்! கொள்ளையர், திருடர்களுக்கெல்லாம் தேவையாயிருக்கு, விடுங்க!

❐ ரூ 100 பரிசு பெறுபவர்:
டி.கே. சுப்பிரமணியன்
8/87, (பழைய எண் 81)
சன்னதி தெரு
திருப்பரங்குன்றம் 625 005


★ ரூ 50 பரிசு பெறுபவர்:
பூதப்பாடி இராமலிங்கம்
எஸ்.பி. கவுண்டனூர்
ஈரோடு மா.வ 638 311

“பெண்ட் இட் லைக் பெக்காம்” என்ற ஆங்கிலப் படத்தில் பஞ்சாபிப் பெண் வேடத்தில் நடித்து வருகிறார் ஐஸ்வர்யா ராய்.


“நான் பறவையல்ல, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு மாறிக் கொண்டே இருக்க. ஹாலிவுட்டில் நடித்தாலும், என் வாழ்க்கை பாலிவுட்டைச் சார்ந்ததே. நான் மும்பையில்தான் செட்டில் ஆவேன்” எனச் சொல்லி, பலர் நெஞ்சில் பிஸ்லெரி வாட்டரை வார்த்துள்ளார் ஐஸ்வர்யா ராய்.

மகேஷ் பட்டின் அடுத்த ஹாட்டான படம் ‘ஷாகிர்’. ஒரு ஹீரோ, இரண்டு ஹீரோயின்கள் கதையாம். படத்தில் இம்ரான் - தியா மிர்சா மீண்டும் இணைகிறார்களாம். முதலில் ரியாசென், அதாங்க, ‘தமிழ் தாஜ்மஹால்’ ஹீரோயின் தான் நடிப்பதாக இருந்ததாம். ஆனால் அவரை வீழ்த்தி விட்டு வாய்ப்பை அள்ளியிருக்கிறார் தியா மிர்சா.

• தியா மிர்சா



பிபாஷா பாசுவின் அந்தச் செயலைக் கண்டு பாலிவுட்டே வெடவெடத்துப் போய் நிற்கிறது. ‘செஹ்ரா’ என்றொரு படம். ஒரு ரிஸ்க்கான சண்டைக்காட்சி. பிபாஷாவும் பயமின்றி ஒப்புக் கொண்டார். ஷூட்டிங் நாளும் வந்தது. எல்லாம் ரெடி. பிபாஷாவுக்கோ அந்த நொடி கதி கலங்கி விட்டது. ஏனென்றால், இருபதாவது மாடியில் இருந்து கீழே குதிக்க வேண்டும்! ஆனால் சொன்ன வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே என்ற எண்ணத்தில், இஷ்ட தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டு பிபாஷாவே குதித்து விட்டாராம். இப்போது இந்த விஷயம் தான் பாலிவுட்டில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.



• ஹ்ருத்திக்

‘லக்ஷயா’ படத்துக்குப் பிறகு ஹ்ருத்திக், வேறெந்தப் படத்தையும் ஒப்புக் கொள்ளவில்லையாம். அவரை திருப்திப் படுத்தும் கதை கிடைக்க வில்லையாம். இதற் கிடையில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் ‘டார்சான் தி வொண்டர் கார்’ படத்தைக் கொடுத்த அப்பாஸ் மஸ்தானின் அடுத்த படத்தில் ஹ்ருத்திக் நடிக்கப் போகிறார், என்று ஒரு செய்தி வலம் வந்தது. ஆனால் ‘அதெல்லாம் பொய்ச் செய்தி’ என்று காட்டமாக மறுத்துள்ளார், அவர் அப்பா ராகேஷ் ரோஷன்.

• ரியாசென்



“தோஸ்த்’ மை பெஸ்ட் பிரெண்ட்” என்ற போனி கபூரின் படத்தில் ‘கடவுள்’ அவதாரமாக நடிக்கிறார் சஞ்சய் தத். பெற்றோரிடமிருந்து பிரிந்துவிட்ட ஒரு ஆறு வயதுச் சிறுமிக்கு உதவும் கதாபாத்திரமாம் அது. அடுத்து ‘எம்ராஜ்’ என்ற படத்தில் எமனாக நடிக்கிறார்! இந்தப் படத்தின் கதை, கிட்டத்தட்ட ரஜினி நடித்த ‘அதிசய பிறவி’ தான்!




• ப்ரீத்தி

பேனா பிடிக்கும் ப்ரீத்தி!

ப்ரீத்தி ஜிந்தா பேனா பிடிக்கப் போகிறார். bbc.comக்கு! அதில் வாழ்க்கை மற்றும் சினிமா என்ற பகுதிக்கு, மாதந் தோறும் எழுத ஒப்பந்த மாகியுள்ளாராம்.

தர்மேந்திரா, டிம்பிள் கபாடியா ஆகியோருடன் அமிதாப் இணைந்து நடித்த 'ஹம் கான் ஹெய்ன்' படு தோல்வி! அதே நேரத்தில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்த அபிஷேக் பச்சனின் 'தூம்' செம ஹிட்டாம்!

விது வினோத் சோப்ரா மீண்டும் 'முன்னா பாயை' களமிறக்குகிறார். இந்த முறை வக்கீலாக. படத்தின் டைட்டில் 'முன்னாபாய் எல்.எல்.பி. முன்னாபாய் எம்.பி.பி.எஸ்-இல் நடித்த அதே சஞ்சய் தத், அர்ஷத் வர்ஷி டீம்தானாம்! (அப்ப தமிழ்ல வசூல் ராஜா எல்.எல்.பியா?)



• சஞ்சய் தத்

- **வித்யன்**



✉ நீலாலயனின் 'தனிக் கணக்கு' போஸ்ட் கார்ட் கதை, தனிக் கணக்கு மட்டுமல்ல, பயனுள்ள கணக்கு; குடும்பத்தில் மதிப்பையும் மரியாதையையும் நல்கி, குடும்பத்தைப் பாதுகாக்கும் கணக்கு.

பெருமாள்தேவன்பட்டி, எஸ்.அசாதி

✉ இந்த வாரம் ஆசிரியர் பக்கத்தில், பத்திரிகையின் போக்கு பற்றி ஆதங்கப்பட்டிருக்கிறார். ரஷ்யாவில் கடைப்பிடிக்கிற பத்திரிகை ஒழுங்கு கூட தமிழகத்தில் இல்லாதது வருத்தமே. வாசகர்கள் தான் இது போன்ற பத்திரிகைகளைப் புறக்கணிக்க வேண்டும்.

திருவண்ணாமலை, பூ. சீனிவாசன்

✉ 'தராசு பதில்கள்' பகுதியில் LMP பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். முன்பு தி.மு.க. முதன் முறையாகப் பதவியேற்றபோது சாதிக் பாட்சா சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தார். 'அரசு மருத்துவமனைகளில், பணி புரியும் மருந்தாளுநர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி கொடுத்து கிராமப்புற மருத்துவர்களாக்கலாம்' என்று கூறினார். ஆனால் அதற்கு அப்போதிருந்த அரசு மருத்துவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், அத்திட்டம் கைவிடப்பட்டது. அதன் விளைவுதான் இப்போது பரவலாகப் பெருகியிருக்கும் போலி மருத்துவர்களின் ஆதிக்கம்.

திருவாரூர், டி.வரதன்


✉ 'பிரமிட் தேசம்' தொடர் ஓர் அருமையான கற்றுலாத் தொடர். எகிப்தின் ஜனத்தொகை ஏழு கோடி என்று அறிகிறேன்.

விழுப்புரம், கே.எ.முகம்மது அலி

✉ துயரத்தை, மற்றவர் வாழ்வில் ஏற்பட்ட பாலியல் புகார் - மற்றும் இத்யாதிகளை பத்திரிகைகள் வியாபாரமாக்குகின்றன. அவற்றைப் படிப்பதால் வாசகர்களுக்கும் பயனில்லை. ரஷ்யா போல் இந்தியாவில் பத்திரிகைகள் நடந்து கொள்ளுமா?

மேல்பட்டி, எல்.மாறன்

புறக்கணிக்க வேண்டும்!



✉ 'அட்டகாசம்' படத்தின் செட் குறித்து கூறியது அழகு. ஆனால் செட் என யாரும் கண்டுபிடிக்கக் கூடாது என்று கூறிவிட்டு, அதை பலர் படிக்க வெளியிட்டது உமது அட்டகாசமான குறும்பு. ரசித்தோம்.

வேலூர் - 632 001, கே. ஜெயமுருகன்

✉ பெரியவாள் அருளுரையை 'கல்கி' வழங்குவதன் மூலம் வாசகர்கள் பெருமை அடைகிறோம். அதிலும் கடைசிப் பக்கங்களில் வழங்குவதைவிட, முதலில் வரும் பக்கங்களில் வருகிற மாதிரி செய்வீர்களேயானால், இன்னும் பலரும் பயனடைய முடியும்.

சென்னை - 40, நா. பாலசுப்பிரமணியன்

"வெல்வெட்டு நிலவு, கல்வெட்டு கவிதை" தலைப்பே ஒரு ஹைக்கூ! மது மிதாவின் பேட்டியைப் படித்து மனசுக்குள் மழை!
அயன்புரம், த. சத்தியநாராயணன்

போஸ்ட் கார்டு கதைகளில் கூர்மை அதிகம்தான். மறுக்கவில்லை. ஆனால் ஆழம் சற்றே குறைவு! ஒரு பக்கக் கதைகள் என்றால், ஆழமும் கிடைக்குமே!
கோவை -21, டி.சீனிவாஸ்சுதர்சனன்

தமிழில் வெளியாகும் பெரும்பாலான பத்திரிகைகள், காசு கொடுத்து வாங்கிப் படிக்கவே அருகதையில்லாதவை. வேண்டிய விஷயங்களுக்கு நடுவே பல வேண்டாத வெறுக்கத்





தக்கவை வரத்தானே செய்யும்? 'கொள்ளுவன - தள்ளுவன' உத்தியைக் கடைப்பிடிக்கும் பக்குவம் வாசகர்களுக்கு வர வேண்டும். கவிஞர் அய்யாறு வாசுதேவன்



மகரிஷியும், அவதார புருஷரும், மாபெரும் சித்தயோகியுமான மகான் ஸ்ரீ அரவிந்தரின் திவ்ய சரிதத்தை சொன்ன 'அரவிந்தர் அமுதம்', உண்மையிலேயே அமுதம்தான். மனதில் தேச பக்தியும், தெய்வ பக்தியும் பொங்கும் வண்ணம் எழுதிய திருப்பூர் கிருஷ்ணனுக்கும், புள்ளிச் சித்திரங்களால் எழில் சேர்த்த ஓவியர் வேதாவுக்கும், வெளியிட்ட கல்கிக்கும் பாராட்டுதலுடன் நன்றி.
சென்னை - 83, லட்சுமிராமானுஜம்

''அனைத்திலும் நிறைந்துள்ள பொருள் எதுவோ, அது அழிவதே இல்லை என்று உணர்வாய்' - என பகவத் கீதை (2:17.18)யில் கண்ணன் சொன்னது எவ்வளவு உண்மை! மறக்க முடியாத இந்த அமுதமும்... ஓவியமும் இணைந்து மனத்தில் நிற்கின்றன.
வியாசர்பாடி, சிம்மவாஹினி

'அரவிந்த அமுதமெ'ன்ற நவரத்தினம் அடங்கிய பெட்டியை, திருப்பூர் கிருஷ்ணன் என்கிற திறவு கோல் மூலம் திறக்கச் செய்த கல்கிக்கு பாராட்டுகள்! ஓவியர் வேதா மூலம் நவரத்தினத்தை மேலும் ஒளிபெறச் செய்து விட்டீர்கள்.
சென்னை, ஜே. துரைராஜ்

ஸ்ரீ அன்னையின் சரிதையையும் திரு. கிருஷ்ணனவர்களைக் கொண்டே எழுதச் செய்ய வேண்டும். உயிர் பெற்று உலாவுவது போன்ற ஓவியங்களை வரைந்த திரு. வேதாவை, எவ்வளவு பாராட்டினாலும் தகும். நன்றி!
கோவை, பாரதிதேவராஜ்

கவிஞனின் ஞானம் 2

புறஅறிவு என்பது
வேறு!
அகஅறிவு என்பது
வேறு!

புற அறிவு வாழ்வில்
இருந்து
புலரும்!
அகஅறிவு பிறவியிலேயே
மலரும்!

ஆதித்தன் என்ற
அப்பெரியவரின் மகன்
அகஅறிவு கொண்டவன்!

சிற்றிதழ் திறக்கும் போது
வாசமடிக்கும் பூப்போல
சின்னஞ்சிறு பிராயத்திலேயே
நெடுங்கவிதை புனைவான் அவன்!

தந்தை ஆதித்தனிடம்
தகவல் கேட்ட இளமைந்தன்
சிநேகிதக் கூட்டத்திலே
செப்பி நின்றான் கேட்டதெல்லாம்!

"ஓஹோ!
அழுந்தூர் தோரழுந்தூரானது
இப்படித்தானோ?' என்றான் ஒரு
பாலகன்!

அவனோ இன்னும் பேசினான்
"நண்பர்களே!
அழுந்தூரை - தொழுந்தூராக்கிய
ஆமருவியப்பன் ஆட்டம்
இத்தோடு நிற்கவில்லை!

உபரிசிரவசுவின்
தேர்தான் பூமியில் புதைந்ததே தவிர
அவன் ஆணவம் அப்படியே
அசராமல் இருந்தது!

இதை உணர்ந்தான் கண்ணன்!
ஆடுமேய்த்து அகிலமாண்ட
சுழல்மேக வண்ணன்!

உபரிசிரவசு வந்தான்!
இடையன்போல நின்ற
இறைவன் முன்பு சென்றான்!

உமக்கு என்ன வேண்டும்?
உமக்கு ஏது வேண்டும்?
சொல்லும் வாய் மூடுதற்குள்
தருவேன் என்றான் உபரிசிரவசு!

உலகுக்கே படியளக்கும்
ஆயர்பாடி நாயகனுக்கே
படியளக்கப் பார்த்தான்
பணிவற்ற உபரிசிரவசு!

நாயகன் சிந்தித்தான்! - உடல்
நடுங்காமல் சிரித்தான்!
மாயவன் தன் மனதுள்
மறைவாகச் சிரித்தான்!

"சரி! உபரிசிரவசு!
அதிகம் ஒன்றும் வேண்டாம்!
அடியேன் ஒரு வெண்ணெய்ப்
பிரியன்!

ஆயிரம் குடங்கள்
இன்று கடைந்த வெண்ணை
தர முடிந்தால் தா!" என்றான்
ஸ்ரீகிருஷ்ணன்!

உபரிசிரவசு
உந்தி உந்தி நகைத்தான்!
"அட பகவானே!
கேட்க வேறு ஒன்றுமில்லையா?

அரைப்பொழுதுக்குள்
ஆயிரம் குடங்களில்

இன்று கடைந்த வெண்ணெய்
இதோ வரும்'' பாரென்றான்!

உபரிசிரவசு
ஆணை - அம்பு -
சேனை - என
அத்துணையும்
அனுப்பினான்!
ஆயிரம்
குடங்களில்
இன்று கடைந்த
வெண்ணெய்க்காக!

போகும் இடமெல்லாம்
வெண்ணெய் - நெய்
எண்ணெயாகியிருந்தது!

அயர்ந்து களைத்த
அபரிமிதமான படைவீரர்கள்
அந்திமாலை சாயும் நேரம்
999 இடங்களில்
தூக்கி வந்தனர் வெண்ணெயை!

உபரிசிரவசுக்கு
உள்ளுக்குள் உதறல்!
அடிமனசின்
அந்தப்புரத்தில் பதறல்!

மோதுவது பரந்தாமனோடு என்று
மனம் தெளியாத உபரிசிரவசு
999 குடங்கள் வெண்ணெயோடு
துவங்கினான் சூட்சுமத்தை...

ஆண்டவனே ஆனாலும்
அடுக்கி வைத்த படையலில்
ஆயிரம் குடம் உள்ளதா என
ஆய்வா செய்யப் போகிறான்!?

வட்டவட்டமாய் 999
வெண்ணைக் குடங்களை வைத்து
நடுவே ஒரு தண்ணீர்க் குடத்தையும்
கலந்து வைத்தான் உபரிசிரவசு!

இடையனிடம் வந்தான்
''ஆயிரம் குடங்களில் உள்ளது
இன்று கடைந்த வெண்ணெய்''
என்றான்!



பா.விஜய்

மாயவன் வந்தான் - அந்த
மதுசூதன் வந்தான்!
மாடுகள் மேய்த்த உருவில்
மாலவன் வந்தான்!

மூடி வைத்திருந்த குடங்களை
ஒவ்வொன்றாய்த் திறந்தான்!

திறக்கத் திறக்க
வெண்ணெய் இருந்த
குடங்களிலெல்லாம்
வெறும் தண்ணீரே இருந்தது!

999 குடங்களிலும்
தூய்மையான தண்ணீர்!
ஒரு துளி வெண்ணெயில்லை!

உபரிசிரவசு வைத்த
ஒரு குடம் தண்ணீர் மட்டும்
ஒரு குடம் வெண்ணெயாய் இருந்தது!

"என்ன மன்னா?
ஆயிரம் குடம் வெண்ணெய்
கேட்டால்,
ஒரு குடம் வைத்துள்ளாய்?"

உபரிசிரவசுக்கு
உயிருண்மை தெளிந்தது!

வேரறுத்த வேப்பமரமாய்
ஆணவமறுந்து
ஆமருவியப்பன் காலில்
அப்படியே விழுந்தான்!

என்று சொல்லி முடித்தான்
அந்தச் சின்னஞ் சிறுவன்!

தேரழுந்தூர் மக்களெல்லாம்
தோப்பில் கூடி நின்றனர்!
சிறார்களைத் தேடி
சுற்றி வந்த பெற்றோர்
சிலையாய் நின்றனர்!

கண்ணனின் விளையாட்டை
கவிதையாய்ப் பொழியும்
இந்தச் சிறுவன் யார்?

யார் இந்தச் சிறுவன்?
பிள்ளைப் பிராயத்திலேயே
பெரிய விஷயம் பேசுகிறானே?

எதிர்காலத்தில் இவன்
இலக்கியச் சக்கரவர்த்தி ஆவான்!
ஆனால் யார் இவன்?

தேரழுந்தூர் தெரு மக்கள்
தெய்வ முகம் பொருந்தி
ஸ்ரீகிருஷ்ண லீலையை
கவியொழுகக் கூறிய சிறுவனை
உச்சி முகர...

"மகனே மகனே!" என்ற குரல்

"யாரப்பா அது?
ஓ! இது ஆதித்தனாயிற்றே!
மண்பாண்டம் செய்யும்
கலைஞன்தானே நீ!"

"ஆமய்யா! என் மகன்
தோப்பிற்கு வந்தான்
தோழர்களோடு!
அவனைப் பார்த்தீர்களா?"

ஆதித்தன் கேட்டான் அவசரமாய்...

தோப்பின் மரத்தடியில்
தோழர்களிடையே தன்மகன்
ஊராரால் புகழப்படுவது கண்டு
ஓடோடித் தூக்கினான்!

"ஆதித்தா! - சிறுவயதிலேயே
இந்தப் பிஞ்சு வாய் வாயிலால்
கவிதையால் கதைசொன்ன
இப்பிள்ளை - உன் பிள்ளையா?"
ஊரார் கேட்டனர்!

"ஆமய்யா! என் மகன்தான்!"
ஆதித்தன் தழுதழுக்க...

"இவ்வூரிலா பிறந்தது - இந்த
இளங்கவிதை?"

"ஆமாம்! தேரழுந்தூரில்தான்
இவன் பிறந்தான்!"

"பிள்ளையின் பெயரென்ன?"
ஊர்மக்கள் ஆர்வமாயினர்!

"கம்பன்"

"கம்பன்"

"கம்பன்"

"கம்பன்"

(தொடரும்)

பாலிடிக்ஸ் பஜார்:

நழுவும் நட்சத்திரங்கள்



தமது சொந்தத் தொகுதியில் இருந்து சமீபத்தில் வந்த தகவல்கள், அரசரை ஒரு புதிய முடிவை எடுக்கத் தூண்டியிருப்பது போலத் தெரிகிறது. அதனால்தானோ என்னவோ, தமது எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதியை குவாலியரையும் தாண்டி தமிழகத்துக்கும் பயன்படுத்த அனுமதி கேட்டு, டெல்லி தலைவர்களை நச்சரித்து வருகிறாராம்.

சுப்ரீம் ஸ்டாரின் ரசிகர் மன்றக் கொடி, காஞ்சிபுரம் சந்திப்பு குறித்தெல்லாம் ஏற்பட்ட சர்ச்சைகள் அடங்கி நாளாகி விட்டதல்லவா? சமீபத்தில் சில போஸ்டர்களில் சுப்ரீமின் ரசிகர் மன்றக் கொடியின் வண்ணத்தில் பெயர் எழுதி, அருகில் எம்.பி. என போடப்பட்டிருப்பது சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறதாம்.

களத்துக்கு வர, தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்த தமிழரசி 'சித்தப்பா' சமீபகாலமாக முக்கிய திராவிடக் கட்சிகளுடன் மேடையைப் பகிர்ந்து கொண்டு வருகிறார். இது 'சின்னம்மா'வால் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.

• திருநாவுக்கரசர்

மகாராஷ்டிரா சட்டசபைத் தேர்தலுக்காக 'முழக்கமிட' திரைப்பட நடிகைகளை முன்பு போலவே முயன்றதாம் பா.ஜ.க. ஆனால் அவ்வலையில் பலர் சிக்காமல் தப்பி விட்டது, அக்கட்சியினரை மூட் அவுட் ஆக்கியுள்ளது.

• கலை

அஜித்துடன் மோதல் ஏன்?

இளைத்த உடல், களைத்த முகம்! என்ன நேர்ந்தது விஜய்க்கு? 'மதுர' படம் எதிர்பார்த்த வெற்றி இலக்கை எட்ட முடியாமல் போய்விட்ட எதிரொலியா? 'திருப்பாச்சி' படத்திற்காக காரைக்குடி கல்லுக்கட்டி (கடைத்தெரு)யைப் போல போடப்பட்டிருந்த 'செட்'டில் கிடைத்த விஜய்யிடம் கேட்டோம். "கில்லியைப் போல மாபெரும் வெற்றியை 'மதுர' பெற வில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் தயாரிப்பாளர், விநியோகஸ்தர், தியேட்டர் உரிமையாளர்கள் எல்லோருமே சந்தோஷமாக இருக்கிறார்கள். நான் விரும்புவது அதைத்தான்... இப்போது 'திருப்பாச்சி' படத்திற்காக கொஞ்சம் எடையைக் குறைத்திருக்கிறேன்" என்று சாந்தமாகச் சொன்னவர்,



"திருப்பாச்சி படத்தில் வீச்சரிவாளை கையில் பிடித்துக் கொண்டு நிற்கிறீர்களே! டாக்டர் கிருஷ்ணசாமி போன்றவர்கள் வன்முறை என்று குரல் கொடுத்தால் என்ன செய்வீர்கள்?" என்றதும் குரலைக் கொஞ்சம் உயர்த்தினார்.

"தனிப்பட்ட முறையில் நான் எந்த அரசியல்வாதியைப் பற்றியும் பேச விரும்பவில்லை. 'திருப்பாச்சி படத்தில், காரைக்குடிக்குப் பக்கத்தில் உள்ள கிராமத்தில் கொல்லன்பட்டறை வைத்திருக்கும் ஒரு விவசாயியின் மகனாக நடிக்கிறேன். எங்கள் பட்டறையில் என்ன தயாரிக்கிறோம் என்பதைச் சொன்னால், கதையைச் சொன்ன மாதிரி ஆகிவிடும். கதையின் முதல் பாதிப் படம் கிராமத்தில். இரண்டாவது பாதி நகரத்தில். படத்தைப் பார்த்து பரிந்துரைகளோடு அனுமதி வழங்க வேண்டியது, தணிக்கைக் குழு. அதைப் பின்பற்ற வேண்டியது தயாரிப்பாளர், இயக்குனர். மற்றவர்களைப் பற்றி நான் ஏன் பேச வேண்டும்?'' என்றவரின் கோபத்தை கொஞ்சம் கூட்டும் விதமாக, "அஜித்துக்கும் உங்களுக்கும் அப்படியென்ன மோதல்! பத்திரிகைப் பேட்டிகளில் இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்கிறீர்களே?" என்றோம்.

"சில பேர் செய்யும் விஷமத்தனம் இது. என்னைப் பற்றி அவரிடமும், அவரைப் பற்றி என்னிடமும் சிண்டு முடிந்து விடுகிறார்கள். இப்படி எதையாவது சொல்லும்போது அந்த நேரத்தில் உணர்ச்சிகரமாக வந்து விழும் வார்த்தைகளை, அலங்காரத்தோடு சில பத்திரிகைகளில் எழுதி விடுகிறார்கள். ஆனால் எனக்கும் அஜித்துக்கும் இடையில் எந்தப் பிரச்னையும் இல்லை" என்று தெளிவாகச் சொல்கிறார்.

இப்போதெல்லாம் விஜய் தமது படங்களில் பாடுவதில்லையே ஏனாம்?

"எனக்கு ஹை-பிட்ச்சில் பாட வராது. எனக்காக கதையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கும்படி நான் வற்புறுத்துவதில்லை. இயல்பாக அப்படியொரு வாய்ப்பு எனக்கு சமீபத்தில் அமையவில்லை" என்று உண்மை பேசுகிறார்.

காதலுக்கு மரியாதை போல கவித்துவமான காதல் குடும்பக் கதையில் விஜய் நடித்து, பல வருடங்கள் ஆகி விட்டதே" என்றால், "இப்போது நானே அப்படியொரு கதையைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்கிறார்.

கைவசம் கனவுகள், ப்ளஸ் நல்ல கதைகளோடு அலையும் நாளைய இயக்குனர்கள், விஜய்யை சாலிகிராமத்தின் மோகன் ஸ்டூடியோவில் துரத்திப் பிடிக்கலாம். அங்கேதான் திருப்பாச்சி படப்பிடிப்பு.

- ஸ்ரீ

விளக்குகிறார் விஜய்!

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி குழுமத்தில் ஒரு மின்னல்!
(சென்னை பதிப்புக்கு மட்டும்)

8 பக்கங்கள் | 3, அக்டோபர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

ஜுராஸிக் ஷாப்!

முற்றிலும் மறைந்து போன [illegible] எடுத்து உயிர் கொடுத்த ஜுராஸிக் பார்க் [illegible] போல, தாத்தா, கொள்ளுத் தாத்தா காலத்திய பொருள்களைச் சேகரித்து அதற்கு உயிரளித்து வருகிறார் பப்பி ஜமால். [illegible]

[illegible]



மு. முகில்

[illegible]

மருதன்



ஜெயிக்குமா ஜீவா நகர்?



• சண்முகம்



• முத்துக்கிருஷ்ணன்

அரசியல்வாதிகளாலும் அரசு அதிகாரிகளாலும் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது வடசென்னை - இந்தச் செய்தி மட்டுமே பத்திரிகைகளில் வெளி வருமேயன்றி, இங்கு நிலவுகின்ற பிரச்னைகள் பெரும்பாலும் அம்பலத்துக்கு வருவதேயில்லை. இதுபோன்று பாவப்பட்ட பகுதியில் ஒன்று ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள ஜீவா நகர் (தெற்கு) பகுதி. மிகவும் பின்தங்கிய பகுதியான இங்குள்ள பிரச்னைகள் தாம் என்ன?

ஜீவா "நகருக்குள்" நுழைந்த போது அப்பகுதியில் தேர்தல் பிரசாரம் "அனல்" பறக்க நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரசாரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மரியாதைக்குரிய வாக்காளர்களைச் சந்தித்துக் கேட்டபோது, சுகாதாரச் சீர்கேட்டின் மொத்த உருவமாக இப்பகுதி விளங்குவதாகவும், சாக்கடை நீர் நடைபாதையில் வழிந்தோடுவதால், கொசுத் தொல்லை அதிகரித்து அதன் காரணமாக மலேரியா போன்ற மோசமான நோய்கள் வரக் காரணமாக இருப்பதாகவும் கோரஸ் பாடினர்.

அதுமட்டுமின்றி சென்னையின் பிரதான பிரச்னையான தண்ணீர்ப் பிரச்னையில் இப்பகுதி மிகவும் துரதிருஷ்டம் பிடித்தது. காரணம் இப்பகுதி, வாழ்வில் மிக நலிவடைந்த நிலையில் இருக்கும் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியாக இருப்பதுதான். மற்ற பகுதிகளில் இப்பிரச்னையை அவரவர் வாழ்க்கை வசதிக்கேற்ற வகையில் சமாளித்து விடுகின்றனர். இதுதான் ஜீவா நகரின் பிரதான பிரச்னை. பொதுவாகப் பார்த்தால் வட சென்னையின் பிரதான பிரச்னை.

"இந்தப் பகுதியில் ஒழுங்காக இருக்கும் சாலை ஒன்றேனும் கண்ணில் காட்டுங்கள்" என்று நம்மையே கேட்டுவிட்டு இப்பகுதியின் பிரச்னைகளை அடுக்க ஆரம்பித்தார் தி.மு.க. சார்பில் போட்டியிடும் முத்துகிருஷ்ணன். இங்குள்ள சாலைகள் முறையான பராமரிப்பின்றியும், அவ்வப்போது வரும் தண்ணீர் லாரி உள்ளிட்ட பெரிய வாகனங்கள் சென்று சேதப்படுத்தி விடுவதாலும் சீர்கெட்டுக் கிடக்கின்றன. இதற்கு உதாரணமாக கன்னியப்பன் நாயக்கன் காலனி பகுதியைச் சுட்டிக் காட்டுகிறார். மேலும் தண்ணீர் தொடர்ச்சியாக வராததால், மிகுந்த இன்னலுக்கு ஆளாகிவருவதாகவும், அதனைத் தாமும் அனுபவித்து வருவதாகக் கூறி, தாம் ஜெயித்தவுடன் அனைத்தும் சீர்செய்யப்படும் என்று ~~வழக்கமான~~ முத்தாய்ப்பை வைத்துவிட்டு பிரசாரத்தில் மூழ்கினார்.

"இதற்கெல்லாம் ஆட்சியிலிருக்கும் நீங்கள்தானே பதில் சொல்ல வேண்டும்!" என அ.தி.மு.க. வேட்பாளர் சண்முகத்திடம் கேட்டதற்கு,

இப்பகுதிக்காக ஐந்து கோடி செலவில் திட்டமிடப்பட்ட, தி.மு.க. ஆட்சியால் நிறைவேற்றப் படாமல் இருந்த குடிநீர் வடிகால் வாரியத் திட்டம், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகையால் இங்கு சுகாதாரச் சீர்கேடு என்பதற்கே வாய்ப்பில்லை என்கிறார் கண்களை மூடிக் கொண்டு. ரேஷன் கடையில் பொருள்கள் சரியாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. தேர்தலில் வென்றவுடன், பொருட்கள் வழங்குதல், எடை குறைப்பு உள்ளிட்ட எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு நிச்சயம் என அடித்துக் கூறினார் (நம்மை அல்ல!)

இவர்களில் யார் வெல்வார் என்பதைவிட, இவர்களால் ஜீவா நகர் (தெற்கு) பிரகாசமடையுமா என்பதுதான் கேள்வி!

இரா. முத்துக்குமார்

படம்: ராஜன்

இராமத்தில் புதைந்து போயிருக்கும் உத்வேக விளையாட்டு வீரர்கள், குறிப்பாக பெண்கள் என்ன மாதிரியான இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றனர்? சென்னையிலுள்ள சில கோச்களிடம் விவரங்கள் சேகரித்தோம். அவர்கள் கூறியதிலிருந்து...

பொதுவாக கிராமத்தில் வசிக்கும் ஒரு பெண், விளையாட்டில் கவனம் செலுத்துவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஆண்களை விடுங்கள். சக பெண்களே கேலியடிப்பார்கள். ஷார்ட்ஸ் போட்டுக் கொண்டு ஓடினால், பல எதிர்ப்புகள் கிளம்பும். அதுபோல பெண்கள் பள்ளிகளில் விளையாட்டுக்கு முக்கியத்துவமே கிடைக்காது. அப்படியும் ஆர்வம் காட்டுபவர்களுக்கு வழி காட்ட, மாவட்டத்துக்கு ஒரேயொரு கோச்தான் இருப்பார்.

ஆண்கள் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் பரவலாக தமிழகம் முழுக்க இருக்கிறதாலும், பெண்களுக்கென்று ஈரோட்டில் மட்டுமே ஹாஸ்டல் இருக்கிறது. இங்கு தங்கி படிப்பவர்களின் அனைத்து படிப்பு, விளையாட்டு செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டாலும், எத்தனை பெற்றோர்கள் இதற்கு ஆதரவளிப்பார்கள்?

எங்காவது பள்ளிகளுக்கிடையே நடக்கும் போட்டியில் அசாத்திய திறமைகளைக் காட்டும் மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாக ஏதாவது கோச்கள் பேசினால், பிடி. மாஸ்டர்கள் விடவே மாட்டார்கள். நூறு இளம் சாதனையாளர்களைச் சந்தித்தால் இரண்டு பேரிடம் கூட பேச அனுமதி கிடைக்காது. இப்படி கிராமங்களுக்குள்ளேயே புதைந்து போன திறமைகளின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

இதையும் தாண்டி ஏதாவது பள்ளியில் படித்து வரும் வீராங்கனைகளை சென்னைக்கு அழைத்து வந்தால், அவர்களுக்கு ஆதரவளிக்க எந்தப் பள்ளியும் முன்வருவதில்லை. கஷ்டப்பட்டு +2 முடித்து விட்டால் போதும். நுங்கம்பாக்கத்திலுள்ள எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரி இலவசமாக பட்டப் படிப்பையும், தங்கும் வசதியையும் செய்து தருகிறது.

ஆடுகளம்



தேசிய சாதனைகள் ஏதாவது நிகழ்த்தினால், தமிழக அரசு உதவி செய்யும். காவல் துறையில் கான்ஸ்டபிள் பணிக்கு வீராங்கனைகளைத் தேர்வு செய்வது தகுதிக்கேற்ப வேலையாக இருப்பதில்லை. உணவுக் கழகம், கஸ்டம்ஸ் இவற்றில் விளையாட்டு வீரர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்வதே யில்லை. சதர்ன் ரயில்வேயிலும் மிகக் குறைவான பேருக்கே வேலை கிடைக்கிறது. இதனால் விளையாட்டை நம்பி, படிப்பில் கவனம் செலுத்தாத எத்தனையோ ஆயிரம் பேர் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு நிற்பதைப் பார்க்கும்போது, அவர்களை இளம் வயதில் ஊக்கப்படுத்திய கோச்சான எங்களுக்கு உறுத்தலே செய்கிறது.

"உற்சாகப்படுத்தியது தவறோ?"

வெளிநாடுகளில் பத்து வயதாகும்போது அரசாங்கமே திறமையான வீரர்களை தத்தெடுத்து, அவர்களுக்கான அனைத்துச் சுமைகளையும் தானே சுமந்து கொள்கிறது. இங்கு அது சாத்தியமில்லாததால், தனியார் அமைப்புகளுக்காவது சுதந்திரம் தர வேண்டும். கிரிக்கெட்டில் பி.சி.சி.ஐ. தனி அங்கமாக விளங்குவதால், அதனால் பல திறமைசாலிகளை ஊக்குவித்து தன் சுதந்திரத்தில் திறமைகளையும் கிரிக்கெட்டையும் வளர்த்துள்ளது" என்றனர் ஒருமித்த ஏக்கத்தோடு.

கண்ணன்

மலருமா?

இதோ... அதோ... என இழுத்துக் கொண்டிருந்த 'மலர்' சேனல் ஜெகஜோதியாக வெளி வர இருக்கிறது. அதுவும் சாதாரணமாக இல்லை. நியூஸ், மியூசிக், கார்ட்டூன் என மூன்றும் கலந்த பேக்கேஜாக வர இருக்கிறது. அதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் ஜரூராக நடந்து வருகிறதாம்.

ஸ்வரா

செ‌ன்னை மாநகராட்சி வார்டு இடைத்தேர்தலில், ஆளும் கட்சிக்கு அதன் கூட்டணிக் கட்சி ஆதரவு தரவில்லையாம். காரணம் கேட்டால் 'ஆதரவு கேட்கவுமில்லை - அதனால் தரவுமில்லை' என



அதிரடி பதில் தந்துவிட்டார்களாம். 'இதைத்தான் நாங்களும் எதிர் பார்க்கிறோம்' என நக்கல் பேசி வருகிறார்களாம் கரை வேட்டிகள்.

டெல்லியில் நடந்த ஆப்ட் நி

ரெக்கார்ட் பிரஸ்மீட் போல, 'சென்னையில் நம்ம முதல்வரும் பிரஸ்மீட் நடத்தினால் எவ்வளவு பரபரப்பாக இருக்கும்' என கமெண்ட் அடித்து வருகிறார்கள் கோட்டை நிருபர்கள். இது கொஞ்சம் ஓவரா தெரியலிங்களா?

சமீபகாலமாக சிக்கலுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கும் இரண்டெழுத்து சேனலுக்கு தலை நகருக்கு திடீர் விஜயம் செய்த புலியின் ஆதரவு கணிசமாகக் கிடைத்திருப்பது அச்சேனல் வட்டாரத்தில் ஓரளவிற்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளதாம்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து எதிர் கட்சிகள் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு பதில் தரும் விதமாக, சென்னை மாநகராட்சியின் முதல்[illegible]வர் அறிக்கை வெளியிட்டாராம். இது தலைமையிடம் கொஞ்சம் மதிப்பை கூட்டியுள்ளதாம்.

கலை

விழிச்சுக்கோங்க!

வெல்ட் எனும் சமூக நல அமைப்பின் சார்பில் புற்று நோய் பற்றிய விழிப்புணர்வும் பிரசார யாத்திரை வழியாக சென்னையிலிருந்து துவக்கி பாண்டி, கடலூர், தமிழகம் முழுவதும் சென்று வந்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் புற்றுநோயைப் பற்றி தெளிவு படுத்துவதும், இனி வரும் சந்ததிகள் அதனால் புற்றுநோயால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான். இதுபோன்ற யாத்திரைகள் நமது அப்துல் கலாமின் கனவான 2020-ல் புற்று நோயில்லா இந்தியாவை உருவாக்க நிச்சயம் உதவும்.

முராரி

சுக யாத்திரை

காசி, அலகாபாத், கைலாசம் போன்ற புனித இடங்களுக்கு விஜயம் செய்ய ஆசை. ஆனால் எப்படிப் போவது, எங்கே தங்குவது, எப்படிச் சாப்பிடுவது என்று தெரியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு சுகமான யாத்திரையை வழங்கக் காத்திருக்கிறது சுப யாத்திரா. டிக்கெட் புக்கிங் முதற்கொண்டு உங்கள் பயணத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இவர்களே கவனித்துக் கொள்கிறார்கள். புரியாத ஊர், அங்கே சாப்பிட என்ன கிடைக்குமோ, போன்ற கவலைகள் வேண்டவே வேண்டாம். கையோடு சமையல்காரரையும் இவர்கள் வண்டி ஏற்றி அனுப்புகிறார்கள். எல்லா ஊர்களிலும் இவர்களுடைய நெட்வொர்க் இயங்கிக் கொண்டிருக்கிறது. பிறகென்ன, இனி எந்த இடமாக இருந்தாலும் ஜாலியாக கிளம்பி விட வேண்டியதுதான்.

Shuba Yathra,
43, South Mada Street,
Mylapore, Chennai - 600 004
Tel : 249652319

ஸ்மைல் ப்ளீஸ்...! கலாம்!



பேப்பர் படித்தாலும்
செய்தி கேட்டாலும்
காலையிலேயே போய்விடுகிறது
புன்னகை.

பெண்கள் உரிமைக்காண்டி
தூங்குகிறார்கள்.
இளைஞர், இளைஞிகள்
வேலையோ, வெடிகுண்டோ
தேடுகிறார்கள்.
பஸ் பயணங்களில் இனி
ஆண்களுக்கே பிரசவம் ஆகிவிடும்.

ஆபீஸ் அதிகாரிக்கு
காலை டிபன்
இஞ்சியும் மிளகாயுமாம்!

அடுத்த சீட்காரனுக்கு
கன்ன கொடுக்கிறார்,
பாவம்! கிழவர்!

வீடு திரும்பினால்
பிளாஸ்டிக் குடங்கள்
காத்திருக்கின்றன.

வெடிகுண்டு, வெட்டிய தலை,
நெருப்பு, விபத்து, காவிரி-
மீண்டும் செய்திகள்,
எட்டு மணிக்கு!

அன்புள்ள கலாம், தூங்கித்தான்
ஆக வேண்டும், கனவு காண
எனவாவது முயல்கிறேன்
புன்னகை செய்ய!

இன்று புன்னகை தினம்!

- வீ

(அக்.4 சர்வதேச புன்னகை தினம்)

ஜாலியே ஜோலியாக இருந்து. பாஸ்கியின் அனுபவங்கள் கருத்துடன் அமைந்திருந்தன. வாழ்த்துகள்.
- நாகராஜன்,
பழைய பல்லாவரம்

சி.ஐ.பி. எக்ஸலண்ட் எழுத்தாளர் அருமை ஆமா, வஜ்ஜாவதி யானுக்கு
பிரியா, மின்னஞ்சல்

"துரை மேல் பிறக்க வைத்தான்" என்ற வரிகள் தான் எவ்வளவு உண்மை என்பது ஃபோகஸ் படித்த போது உணர முடிந்தது.
- சிம்மவாஹினி, வியாசர்பாடி

உங்கள் கருத்துக்களை chennai scan@kalkiweekly.comல் தெரிவிலாம்.





திருட்டு விசிடியை எதிர்த்து ஒரு நீண்ட பேரணியை நடத்தி முதல்வரைச் சந்தித்ததில் திரையுலகம் பொதுமக்களுக்கு இடையூறு செய்ததென்னவோ உண்மை. ஆனால் விக்ரம், விஜயகாந்த், ஸ்னேகா, மும்தாஜ்... இவர்களை நடுவீதியில் வைத்து பார்த்ததில், ரசிகர்களுக்கு புது உற்சாகம் பிறந்த... ஆங்காங்கே 'உச்-உச்-உச்' இந்த சோகப் பேரணியிலும் அனைவரையும் திசை திருப்பியது ஸ்னேகா தான். இவரின் காஸ்ட்யூமைப் பார்த்து மும்தாஜே கொஞ்சம் அரண்டு போனதாகக் கேள்வி...

சென்ற வாரம் சவேராவில் ...ச்சல் எனும் பெண்கள் அமைப்பு நடத்திய விழாவொன்றில் கலந்து கொண்டு சத்தமில்லாமல், திரும்பி இருக்கிறார் நந்திதாதாஸ். இவர் மம்முட்டியுடன் இணைந்து நடித்த விஸ்வதுளசி விரைவில் வர இருக்கிறது.

ஜெமினி மேம்பாலத்தில் இறங்கி அண்ணாசாலையில் செல்லும்பொழுது, அனைவரையும் அண்ணாந்து பார்க்க வைக்கிறது மன்மதன் மற்றும் 7ஜி ரெயின்போ காலனி மெகா பேனர்கள். வழக்கமாய் இயக்குனர் செல்வராகவன் படத்தின் போஸ்டர்களும், பேனர்களும் வெறும் ஹீரோ ஹீரோயின் முகங்களைக் காட்டாமல் படத்தில் முக்கியக் காட்சியைப் பிரதிபலிக்கும். இதில் புதுமுகம் ரவிகிருஷ்ணா-சோனியா அகர்வால் இருவருமே சோகக் களையில் இருக்க, பக்கத்திலுள்ள மன்மதனோ ஏதோ காதலுக்கு க்ரீன் சிக்னல் கிடைத்த சந்தோஷத்தில் ட்ரம்ஸ்களை பின்னி பெடலுரிக்கிறார். இரவு நேரங்களில் இந்த பேனர்களைப் பார்க்கும்போது மௌன்ட் ரோடே 'பளிச்' எனக் காட்சி தருகிறது.

சென்னையில் மட்டும் ஒவ்வொரு திரையரங்குகளிலும் [illegible]ல கலெக்‌ஷன் ரிப்போர்ட் கிடைப்பதாக கோலிவுட் கொஞ்சம் குழம்பிக் கிடக்கிறது. சத்தம் மற்றும் தேவியில் எந்தப் படமாக இருந்தாலும் முதல் வார வசூல் அள்ளுகிறதாம். 'சத்தம்'மில் படம் பார்க்க நிறையவே பொறுமை இருக்க வேண்டியிருந்தாலும், 'வசூல் ராஜா எம்பிபிஎஸ்' பெயருக்கேற்றாற்போல் பெருமைப்பட்டுக் கொண்டது இங்கேதான். ஒரு ரசிகன் படம் பார்க்க திரையரங்கின் தரத்தையும் ஆராய்கிறான் என்பதை இதிலிருந்தாவது புரிந்து கொண்டால் சரி.

எழில்

ஸ்ரீ மதி





"எனக்கும் கிசுகிசு எழுதறாங்க!"



பாடும் பாடல்களைப் போலவே அழகாகவும் இருக்கிறார் கார்த்திக். டி.எம்.எஸ், எஸ்.பி.பி யெல்லாம் கோலோச்சிய தமிழ் சினிமாவில் இன்றைய தேதியில் கலக்கிக் கொண்டிருக்கும் இளம் பாடகர். கிட்டத்தட்ட எல்லாப் படங்களிலும் குறைந்தது ஒரு பாடலாவது பாடும் அளவுக்கு ஒட்டு மொத்த இசையமைப்பாளர்களின் செல்லப் பிள்ளை. நம்மிடம் பாடியதிலிருந்து... ஸாரி, பேசியதிலிருந்து

ஹாய் கார்த்திக், சபாஷ், தமிழ் சினிமாவையே கலக்கிட்டு இருக்கீங்க!

ஐய்யய்யோ... அதெல்லாம் இல்லை சார். ஒரு பாட்டு ஹிட்டாகறது எதுவும் நம்ம கையில் இல்லையே. நான் போயி பாடிட்டு வந்திடறேன். அவ்வளவுதான். அதுக்கு மேலே பல விஷயங்கள் சரி விகிதத்துல கைகோர்த்தால்தான் நீங்க விரும்பின ரிசல்ட் கிடைக்கும். எல்லாம் கடவுள் விருப்பப்படியே நடக்கிறது! வேறெப்படிச் சொல்ல?

உங்க வாழ்க்கையில திருப்பு முனை எது?

எனக்கு ரொம்ப டர்னிங் பாயிண்டா அமைஞ்சது 'பாபா'வுல எதிர்பாராம எனக்கு அளிக்கப்பட்ட இரண்டு பாடல்கள். என்னை சின்னப் பையனாகவும், புதுப் பாடகராகவும் நினைக்காம பெரிய ப்ரேக் கொடுத்த ரஜினி சார், ரஹ்மான் சார், ரெண்டு பேருக்கும் எவ்வளவு நன்றிகள் வேண்டுமானாலும் சொல்லலாம்.

ஆனா, இளையராஜா இசையில 'காதல் ஜாதி' படத்துல முதன் முதலா நீங்க பாடின அற்புதமான பாடல் இன்னமும் திரையில் வராம இருக்கே?

ப்ச், ராஜா சார் இசையில முதல்பாடல் பாட எத்தனை பேருக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும்? இருந்தாலும் முதல்ல பாடின படம் ரிலீஸாகாம இருக்கிறதும் நல்ல சென்டிமென்டா நினைச்சிக்கோன்னு நிறையப் பேர் சொன்னாங்க. அதுவும் சரிதான் போல. (சிரிக்கிறார்)

தமிழ் சினிமாவில் ஆபாசப் பாடல்களும், தமிழை சரியாக உச்சரிக்காத பாடகர்களும் பெருகி வருவது பற்றி?

என்னைத் தேடியும் சில ஆபாசப் பாடல்கள் வந்திருக்கு. ஆனா நாசூக்கா அதெல்லாம் தவிர்த்திருக்கேன். இங்கே பெரிய இசையமைப்பாளர்கள் யாரும் ஆபாசப் பாடல்களை அனுமதிக்கிறது கிடையாது. அப்புறம் தமிழை சரியாக உச்சரிக்காத பாடகர்கள் பத்தி, நான் எப்படி கமெண்ட் அடிக்கிறது! சரியா இருக்காது.

! ஸ்மார்ட்டா இருக்கீங்க. நடிக்கலாமே? அப்புறம் பாடகிகளோடு இணைந்து கிசுகிசுவெல்லாம் வருது?

ஆமாங்க. சினிமாவுல இருக்கிறதால என்னைக்கூட கிசுகிசுவுல மாட்டி விட்றாங்க. என்னைப் பத்தி சக பாடகிகளுக்கு தெரியும்கிறதால, எதுவும் எங்களை பாதிக்கலை. என்ன சொன்னீங்க! நடிப்பா? பாஸ், நான் நல்லாயிருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலையா!

இந்தப் பாட்டு நமக்கு கிடைக்கலையேன்னு எப்பவாவது ஏங்கியிருக்கீங்களா?


'பிதாமகன்'ல வந்த 'இளங்காத்து வீசுதே' என்ன பாட்டு அது!

ஓ.கே. உங்க காதல் கல்யாணம் எப்போ?

அஹா... சரி... என்னுடையது காதல் திருமணமாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இன்னும் ஒரு வருடம் போகட்டுமே, சார். என் போன் நம்பர் எப்படிக் கிடைக்குதுன்னு தெரியலை. பொண்ணுங்க வீட்டுக்கே போன் பண்றாங்க. எஸ்எம்எஸ் எல்லாம் அனுப்பறாங்க. இப்படி அன்புத் தொல்லைகளும் அனுபவிச்சிட்டுத் தான் இருக்கேன். (ஹே... கலக்குறே கார்த்திக்!)

ச.ந. கண்ணன்

சினிமாதான் காரணம்!



மீண்டுமொரு ஈவ் டீசிங் மரணம் சென்னையில் நிகழ்ந்திருக்கிறது. இச்சம்பவம் இளைஞர்கள் மத்தியில் படபடப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், சில கல்லூரி மாணவர்களைச் சந்தித்து உரையாடியபொழுது கொதித்தெழுந்தார்கள்.

அங்கிதா (பி.டெக் மாணவி) :

சொல்லுங்க சார், எவ்வளவுதான் தைரியம் இருந்தாலும், அந்நேரத்துல ஸ்டெப்பானி வண்டி ஓட்டிட்டுப் போனது பயங்கரமான ரிஸ்க்தான். ஆனாலும் இந்த சமுதாயத்து மேலே போய் இவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கக்கூடாது. இந்தச் சம்பவத்தை பயமா கண்டிக்காம, பத்திரிகைகளும் அந்தப் பொண்ணைப் பத்தியே தப்பா எழுதறது குற்றவாளிகளுக்கு மறைமுகமா சப்போர்ட் பண்ற மாதிரியாயிடுச்சு.

என்னதான் டெக்னாலஜி வளர்ந்தாலும், ரோட்ல தனியா நடக்கும்போது நமக்கும் ஈவ் டீசிங் கொடுமைகள் ஏதாவது நடந்திடுமோன்னு பயமா இருக்கு. பகல் 12 மணிக்கே தைரியமா ரோட்ல நடக்க முடியாதபடி ஒவ்வொரு சம்பவங்களும் பயமுறுத்துது!

ராஜா (எம்.எஸ்சி மாணவர்) :

ஈவ் டீசிங் கேஸ்ல போலீஸ் இதுவரை எத்தனையோ பேரை கைது பண்ணியிருக்கு. ஆனா இதுல எல்லோருக்கும் சரியான தண்டனை கிடைச்சிருக்கா, கிடையாது. தப்பு செஞ்சா என்ன, நமக்கு ஒரு இன்ஸ்பெக்டரோ அல்லது எம்.எல்.ஏவோ தெரிஞ்சா போதும். தப்பிச்சிடலாம்ங்கிற எண்ணத்தைத் தப்பு செய்றவங்க மத்தியில் இருந்து போலீஸ் எப்படி ஒழிக்கப் போகுது?



யூத் கடல

சரண்யா (பி.டெக் கம்ப்யூட்டர் சயின்ஸ்) :

பெண்களும் ஆண்களை உசுப்பேத்தற மாதிரி நடந்துக்கக் கூடாது. நானும் பொண்ணா இருந்தாலும் இதைச் சொல்லியே தீரணும்.

நாலு பசங்க ஒண்ணா இருந்தா, பொண்ணுங்களை கிண்டல் பண்ணியே தீரணும்கிறது சினிமா சொல்லித் தந்ததுதான். அவர்களுக்கென்ன, அவர்கள் வீட்டு பெண்கள் காரில் பாதுகாப்பாகப் போய்விடுகிறார்கள். 'கானா'ங்கிற பெயர்ல எத்தனை ஈவ் டீசிங் பாடல்களைப் பாடியிருக்கிறார் தேவா! இதைப் பாடித்தானே எங்களை பசங்க டீஸ் பண்றாங்க! சினிமாவுலயும் ஈவ் டீசிங் காட்சிகளைத் தடை செஞ்சா, அடுத்த தலைமுறையாவது கொஞ்சம் பொறுப்பா வளரும்!

📷 வித்யன் ✍ செந்தில்



கல்லூரிக்குச் செல்லும் வழியில் ஆண்கள் விடுதி. தினமும் காலையிலும், மாலையிலும் அதைக் கடக்கும் பொழுது 'ஒருவர் வாழும் ஆலயம் உருவமில்லா ஆலயம்' என்ற பாட்டை பிசிறில்லாமல் ஒருவன் விசில் அடிப்பான். நடந்து போனாலும், ரிக்‌ஷாவில் போனாலும், ஆட்டோவில் போனாலும் பீட்டு தீராது. யார் அது? தெரியவில்லை. ஒரு நாள் பாட்டுச் சத்தம் கேட்கவில்லை. ஏன்? என் மனம் கேட்டது. சிறிது நேரத்தில் பதில் கிடைத்தது. தெருவில் படையாக மாணவர்கள் எதிரில் வந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் அதே பாட்டை விசில் அடித்தான். தலையை குனிந்து கொண்டு வந்தவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தேன். Turning points, are dangerous என்று ஒரு comment [illegible] மறுபடியும் மாடியிலிருந்து விசில் சத்தம். பெரிய பரீட்சை வந்தது. "Anti Hindi Agitation பற்றி கட்டுரை வருகிறது. படித்துக் கொள்" என்றான். அக்கறை, அன்பும் [illegible]திலும் வரும்போதும். பல [illegible] ஆகியும் மறக்க முடியாத நிகழ்ச்சி இது.

- சீதா, அடையார்

கிரீதீலிஸம்



சிந்தடிக் கவிதைகள்


கிட்டனிலும் சிந்தடிக்கிலும்கூட கவிதைகள் வடிக்க முடியும் என்பதை நிரூபித்து வருகிறது கதீட்ரல் சாலையில் உள்ள 'கல்ப ட்ரூமா'. கண்ணைக் கவரும் வண்ணங்களில் அழகான திரைச்சீலைகள், மெத் - மெத் தலையணைகள், சிங்கார மேஜை விரிப்புகள், எம்ப்ராய்டரி செய்யப்பட்ட அலங்காரத் துணி வகைகள் என பார்ப்பவர்களை சொக்கிப் போகும் அளவுக்கு படு நேர்த்தியாக தயாரிக்கப்பட்டு விற்றிருக்கின்றன.

உங்கள் வீட்டு வரவேற்பறை கூட எழுந்து நின்று வரவேற்கக்கூடிய அளவுக்கு கலையுணர்வுடன் மிளிரும் டிசைன் நாற்காலியின் கவர்கள் இருக்கின்றன. இவையனைத்தும் அங்கு அதிரடி விலையில் கிடைக்கிறதுங்க. அதனால சட்டுன்னு புறப்பட்டு பட்டுன்னு வாங்கிடுங்க!

📷 ஷிவ் ✍ ஸ்வரா



தீர்மானமே பண்ணிட்டாங்க!



இப்பொழுதெல்லாம் சென்னை மாநகராட்சி கூட்டம் கூடுகிறதென்றால், அங்கு என்னென்ன மக்கள் பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது என்பதைவிட, எந்தெந்த சர்ச்சைக்குரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன என்பதுதான் அதிக எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த வகையில் வரும் கூட்டமும் பரபரப்பாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் மன்றத்தில் எழுப்பப்பட இருக்கும் விவகாரங்களும், நிறைவேற்றப்பட இருக்கும் தீர்மானங்களும்தான்.

இது குறித்து, மாநகர பா.ஜ.க உறுப்பினர் தனுஷ்கோடியிடம் கேட்டபோது,

"இந்தக் கூட்டத்துல மூணு முக்கியமான விஷயங்கள் பேசப்பட இருக்கு. முதல்ல நாட்டுது விளம்பர போர்டுகள் சுவரையே மறைக்க கூடிய அளவுல மிக உயரமான இடங்கள்ல மாநகர் முழுவதும் வைக்கப்பட்டிருக்கு. இதையெல்லாம் உடனடியாக கண்ட்ரோல் பண்ணி, முறைகேடா இருக்குற விளம்பர போர்டுகளை அப்புறப்படுத்த, மாநகராட்சி சட்டத்தில் இடமிருக்கு. அப்படி இருந்தும் இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறித்து மன்றத்தில் விவாதிக்கப்பட இருக்கு.

அடுத்து ஜப்பானில் கோப் மாநகரம் போன மாசம் ஒரு மாநாடு நடந்தது. அது குறிப்பா சென்னை மாதிரியான A1 சிட்டிகளின் கட்டமைப்பு, சுகாதாரம் தொடர்பானது. இந்த மாநாட்டுக்கு மக்கள் பிரதிநிதி ஒருவரையும் அனுப்பல. அதுக்கு பதிலா இணை ஆணையர் ஒருவரும், அவருக்குத் துணையா ஒரு நர்ஸையும் அனுப்பிருக்காங்க. இந்த விஷயத்தை கவுன்சிலருக்கும் தெரிவிக்கல. அதனால இந்த விவகாரம் மன்றத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது.


அடுத்து அரசியல் ரீதியா ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்குது. தமிழ் செம்மொழியா அறிவிக்கப்பட்டதுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திமுக கொடுத்த தீர்மானத்துல, கலைஞர் அவர்களுக்கு நன்றி என்பது போல கொடுத்துள்ளார்கள். காங்கிரஸ் தரப்பில் பிரதமருக்கும், சோனியாவுக்கும் நன்றி என்ற அளவில் வரலாம். பா.ஜ.க தரப்பில் என்ன சொல்கிறோம் என்றால், தமிழ் செம்மொழியை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது வாஜ்பாய் அரசு. ஆகவே வாஜ்பாய்க்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். அதிமுக சார்பில் ஏதேனும் கருத்து தெரிவிக்கலாம். அதனால், இந்த விவகாரம் பெரிய அளவில் பிரச்னையாக வாய்ப்பிருக்கு என்றார்.

ஆக, இந்தக் கூட்டத்திலும் ஃபோட்டோகிராபர்களுக்கு சரியான விருந்திருக்கிறது. ஆனால் சென்னை மக்களுக்குதான்..?

சீ. முத்து

சென்னையில் ஒரு லாலு காலம்!

நீளமான மெரினாவில் நடந்து களைத்துப் போன லாலு, பீச்சுக்குள்ளேயே ஸ்பெஷல் - ரயில் விடப் போறாராம்!



சென்னையில் 'காதலர்கள்' அங்கங்கே இடமின்றி கஷ்டப்படுவதைப் பார்த்த லாலு, 'காதலர்களுக்கு ரயில்வே பிளாட்பாரம் இலவசம்' என அறிவிக்கப் போறாராம்!





ஒரு டிடிஆர் லாலுகிட்டயே டிக்கெட் கேட்க, கோபம் கொண்ட லாலு, இனி டிடிஆர்களின் யூனிபார்மை 'குர்தா' வாக மாற்றப் போறாராம்!

ரயில்ல விக்கிற வறுகடலை டேஸ்ட்ல மயங்கிப் போன லாலு, கடலையை 'தேசிய ரயில்வே உணவா' அறிவிச்சு, ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் ஸ்டால் வைக்கப் போறாராம்!



தண்ணீர் லாரியால் காலிக் குடத்தோடு கஷ்டப்பட்ட லாலு, புதிதாய் சென்னையில் தண்ணீர் ரயில் விடப் போறாராம்!





கடைசி சூப்பர் மேட்டரு! செல்வராகவன் டைரக்ஷன், லாலு ஹீரோ, சோனியா அகர்வால்-ரப்ரி ஜோடி. படம் பேரு '7/G ரயில்வே காலனி' வரப் போகுதாம்!

லாலு தம் 'மெகா' குடும்பத்துடன் சென்னைக்கு வந்தது உங்களுக்குத் தெரியும். அவருக்குச் சென்னையில் கிடைத்த 'சில பல' அனுபவங்களினால், கொண்டு வரப் போகும் இரகசியச் சட்டங்கள் பற்றி தெரியுமா உங்களுக்கு?

பிளாட்ஃபாரத்தில் இலக்கியம்!



எழுத்தாணி

வாசகர்கள் புத்தகங்களைத் தேடி பயணிப்பதைப் போலவே, புத்தகங்களும் வாசகர்களைத் தேடி பயணிக்கின்றன. இவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்ளும் முக்கிய இடங்கள் இரண்டு: பிளாட்ஃபாரம் மற்றும் பழைய சாமான் கடைகள்.

நம்மைச் சந்திப்பதற்குள் புத்தகங்கள்தாம் எவ்வளவு சிரமத்திற்கு உள்ளாகின்றன? எத்தனை போராட்டங்களைச் சந்திக்கின்றன? அவற்றோடு யார் சண்டையிட்டார்களோ தெரியாது. சட்டைகள் தொலைந்து போய், நடுநடுவே பக்கங்கள் கிழிந்து போய், விசும்பலுடன் குழந்தைகள் போல் வந்து சேர்கின்றன.

பூச்சிகளுக்கும் புத்தகங்கள் மிகவும் பிடிக்கும்போல, எந்த வித மொழிப் பாகுபாடுமின்றி ஒரு நாளைக்கு ஒரு கவிதை என்ற விகிதத்தில் பாரதி, ஷெல்லி, விட்மேன், நெருடா என்று அனைவரையும் அவை புசித்து விடுகின்றன. எஞ்சியிருப்பவை தாம் நமக்கு.

உடைந்த பாகங்களும், செயலிழந்த சாதனங்களும் நிரம்பி வழியும் காயலான் கடைகளில் புதுமைப்பித்தனும், ரூஸோவும், சல்மான் ருஷ்டியோடு கை கோத்தபடி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

எந்தக் காரணத்திற்காகவோ பிரெஞ்ச் எழுத்தாளர் ஒருவர் தாம்பரத்தில் தங்கியிருப்பார். நீட்ஷே நுங்கம்பாக்கத்தில் காற்று வாங்கிக் கொண்டிருப்பார். திருவல்லிக்கேணியில் வள்ளுவரும் ஃப்ராய்ட்டும் அருகருகே அமர்ந்தபடி என்னவோ பேசிக் கொண்டிருப்பார்கள். பட்டினத்தாரும் ஜுன்னடியும் சண்டைபோட்டுக் கொண்டிருப்பார்கள். பெரியார் நடுவே அமர்ந்து நாட்டாமை செய்து கொண்டிருப்பார்.

இந்தப் புத்தகங்களுக்கு கடைக்காரர்கள் விலை நிர்ணயிக்கும் முறையை, அவ்வளவு சுலபத்தில் நாம் அறிந்து கொள்ள முடியாது. ஒரு புத்தகத்தை எடுத்துத் திருப்பித் திருப்பி இருமுறை பார்ப்பார்கள். பின் அட்டையை ஆராய்வார்கள். இரண்டு 500 ரூபாய்த் தாள்களை உள்ளுக்குள் மறந்து வைத்துவிட்டதைப் போல, பக்கங்களை பர பர வென்று புரட்டுவார்கள். கண்களை வானத்தில் அலைய விடுவார்கள். சட்டென்று ஒரு விலையை அறிவிப்பார்கள்.

சுமார் 300 பக்கங்கள் கொண்ட புஷ்கினின் கவிதைகளும் கட்டுரைகளும், 15 ரூபாய்க்குக் கிடைக்கும். கார்க்கியும், செகாவும் கேட்ட விலைக்குக் கிடைப்பார்கள். தல்ஸ்தோயும், தஸ்தோயவஸ்கியும் தலா இருபது ரூபாய்.

இரு அட்டைகளையும் பத்திரமாகப் பாதுகாத்து கொண்ட தாகூர் 20 ரூபாய் என்றால், பின் அட்டையைத் தொலைத்த பைரன் 15 ரூபாய். இரண்டு அட்டைகளையும் தொலைத்து விட்டால், அவர் ஷேக்ஸ்பியராக இருந்தாலும் சரி, பெர்னாட் ஷாவாக இருந்தாலும் சரி இரண்டு 'தட்டு' தட்டிவிட்டு 5 ரூபாய்க்குக் கொடுத்து விடுவார்கள். 'நான் பெரிய ஆள் நோபல் பரிசெல்லாம் வாங்கியிருக்கிறேன்' என்றெல்லாம் யாரும் அவர்களிடம் கோபித்துக் கொள்ள முடியாது.

யாரோ ஒரு எட்வர்ட் யாரோ ஒரு டோரத்திக்கு பிறந்த நாளுக்காக 1933ல் பரிசாகக் கொடுத்த கதைப் புத்தகமொன்று மூட்டைக் கட்டில் தங்கியிருக்கும். டோரத்தி யார்? அவர் சென்னைக்கு வந்தாரா? எட்வர்ட் யார்? அவரது தந்தையா? காதலனா? சகோதரனா? நண்பனா? இந்தப் புத்தகம் மட்டும் எப்படி சந்தைக்கு வந்தது? யாருக்கும் தெரியாது.

இது போல் வந்து சேரும் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஏதோவொரு கதை இருக்கும். நமக்குத்தான் தெரிவதில்லை. பல விஷயங்களைச் சொல்ல முடிந்த அவற்றால் தங்களது சொந்தக் கதையை மட்டும் சொல்ல ஏனோ முடிவதில்லை!

— மருதன்

நடைபயணம்?!

கட்டடத் தொழிலாளர்களுக்கென மத்திய, மாநில அளவில் தனி அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு நடைபயணமாக வந்து முதல்வர், ஆளுநரிடம் மனு கொடுக்க உள்ளார்கள் கட்டடத் தொழிலாளர்கள், மத்திய சங்க உறுப்பினர்கள்.



தமிழ் சினிமாவும், டிவி சீரியலும் பார்த்துப் பார்த்து டயாபடிஸ், கொலஸ்ட்ரால், மூக்கடைப்பு, காடராக்ட், மற்றும் இன்னபிற இன்னின்ன பிற வியாதிகளில் மாட்டிக் கொண்டு தவிப்பவர்களுக்கு, மிகப் பெரிய ஆறுதலாய் இருந்தது நுங்கம்பாக்கம் அலையன்ஸ் ஃப்ரான்சைஸில் நடந்த "மூன் ஷைன் அண்டு ஸ்கை டாஃபி" நாடகம். உங்க லஜ்ஜாவதிக்கு ஸ்பெஷல் இன்விடேஷன், விடுவேனா!

வைக்கம் முகமது பஷீருடைய இரண்டு சிறுகதைகளை ஒன்றிணைத்து, ஒரே நாடகமா கொடுத்தாங்க, மேஜிக் லாண்டர்ன் குழுவினர்.

நமக்குப் பரிச்சயமில்லாத புதுமுகங்கள் நடிச்சதினால, அவங்களை அந்தந்தக் கதாபாத்திரங்களாகவே அடையாளம் காண எந்தவிதச் சிரமமும் இருக்கல. நாடகம் தொடங்கிய சில மணித்துளிகளில் அவங்க வரும் நமக்குத் தெரிஞ்சவங்களாகிட்டாங்க!

காட்சிகள் டீக்கடையிலும், கேசவன் நாயரின் அறைக்குள்ளும் மாறி மாறி நகர்ந்தது. டீக்கடைதான் முகம்! கேசவன் நாயரின் அறை முதுகு! செட்டைத் திருப்பினா, லொகேஷனும் மாறுற ஒரு மாதிரி அமைச்சிருந்தாங்க.

"இன்னிக்குத் தண்ணீர் லாரி வருமா?"ன்னு ஒரு வசனத்தைப் பேச குறைந்தபட்சம் 14 டேக் வாங்கற சினிமா நடிகர்களின் மத்தியில், இரண்டு மணி நேரம் தொடர்ந்து இயல்பாய்ப் பேசி நடித்து அசத்தினாங்க இளம் ஆர்டிஸ்ட்கள்.

கதை ரொம்பவே சிம்பிள். கேசவன் நாயர் சாராம்மாவை பிரேமம் செய்யும். அவளது ஹார்ட்டுக்குள்ளே சாராம்மாவுக்கு வலிய அபார்ட்மெண்ட் ஒன்றைக் கட்டிக் கொடுக்கும். லவ் லெட்டரெல்லாம் எழுதும். ஆனால் ஆ பெண் குட்டி ரொம்பவே பிகு செய்யும். அடம் பிடிக்கும். கேசவன் நாயரை நன்னாயிட்டு அலைய வைக்கும்.

இன்னொரு லவ் கதாவும் உண்டு. அதில் சீட்டுக்கட்டு ராஜாவான 'ஒற்றைக்கண்ணன்' போக்கரின் மகள் ஸைனபாவை பிக்பாக்கெட் புகழ் 'மண்டன் முத்தபா' பிரேமம் செய்யும். அதுக்கு ஒற்றைக்கண்ணன் போக்கர் எதிர்க்கும். பிறகு சீட்டு விளையாட்டில் தந்திரமாயிட்டு அவரை ஜெயித்து ஸைனபாவை மணம் செய்யும். கடைசியாயிட்டு ஈ ஜோடிகள் இரண்டும் ஒன்னாயிட்டு டீக்கடையில் சந்தித்து டீ உறிஞ்சிக் கொண்டே ஜோக் பாடும்!

'காதலின் அடிப்படை நகைச்சுவை'ன்னு இதுல நிரூபிச்சாங்க! உதாரணத்துக்கு, சாராம்மாவும் கேசவன் நாயரும் பேசிக் கொள்ளும் ஒரு சீன்!

"நம்ம குழந்தைக்கு என்ன பேரு வைக்கலாம்?"

"சைனீஸ் இல்லாட்டி ரஷ்யன் பேரு வச்சிக்கலாம்."

"அய்யய்யோ. அப்ப நம்ம குழந்தைன்னு எப்படி எல்லாருக்கும் தெரியும்?"

"அட ஆமா. அப்ப ஒன்னு செய்யலாம். ஜாக் ஃப்ரூட், மூன் ஷைன், ஸ்கை டாஃபி இப்படி ஏதாவது பொதுவா

ஒரு சாயாக்கடையும், ரண்டு பிரேம கதாவும்!



வைக்கலாம். என்ன சொல்றே?"

"சரி"

நிகழ்ச்சியின் முடிவில் பழம் பஜ்ஜியும், சிப்ஸும் சூட்டு தொன்னையில் கொஞ்சுண்டு கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தார். ஓஹோ எந்தா ருசி!

நிஜமாவே 'ஹாய் லஜ்ஜாவதி'ன்னு பின்னால் இருந்து ஒரு குரல்! பார்த்தா நம்ம ப்ரீத்தி மகி! சிறிது நேரம் அவங்க கூட இன்டர்நேஷனல் நியூஸ் (லைட் வெயிட்) பேசிட்டுக் கிளம்பினேன். இனிமேல் சாயா குடிக்கும்போதெல்லாம் இந்த பிரேம கதாதான் என் ஞாபகத்துல வரும்னு தோணுது!


📷 வித்யன் ✍ கேரளப் பெண்குட்டி லஜ்ஜாவதி





[illegible]

[illegible] பிரியாணி [illegible] ரூபாய் மட்டும் என்கிறார்கள். [illegible] பிரியாணியை சென்னையில் வேறெங்கும் ருசிக்க முடியாது" என்கிறார் இதன் உரிமையாளர். நாள்தோறும் இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரியாணி ரசிகர்கள் வருகையில் [illegible] [illegible] பிரியாணியை [illegible] [illegible] தருவார்கள். [illegible] பிரியாணி, [illegible] என்ன, படிக்கும் போதே உங்கள் ஆர்வத்தை கிளறிவிட்டோமா?



📷 அஷில் ✍ செந்தில்



ஹலோ சென்னை மக்களே! ஃபோக்கஸ் பிரச்னைகள், காலேஜ் புரோகிராம்ஸ், டேட்ட்டாம்ஸ், உச் சானி, ஸ்பெஷல் விழாக்கள், காதலிசம் என சென்னை ஸ்கேனுக்கு பொருத்தமான விஷயங்களை எங்க போஸ்ட்பாக்ஸ், இன் பாக்ஸ், ஃபோன் ரிசீவர் என எதுக்கும் அனுப்பலாம். லஜ்ஜாவதியோடு எங்க டீமும் ரெடி.

முகவரி,
சென்னை ஸ்கேன்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.
போன் : 22345622, 23, 24
E-mail : chennaiscan@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 104157 * Registered No. TN/PMG(CCH)/572/03-05 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 356/03-05 *

Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 3.10.2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

